# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 26 சனிக்கிழமை (11.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 289


# ஐ.தே.கட்சி பிளவுபடுகிறது; 25 எம்.பிக்கள் குழு எதிர்க்கட்சி!

## 14பேருடன் ரணில் தரப்பு மூன்றாவது நிலைக்கு





கொழும்பு,செப்ரெம்பர்11

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சுயேச்சைக் குழுவாகத் தனித்து இயங்க முடிவு செய்துள்ளனர். இதனை தயா சிறி ஜயசேகர எம்.பி. நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார். இந்தக் குழுவில் சஜித் பிரேமதாஸாவும் உள்ளடங்குகிறார். இதையடுத்து நாடாளுமன்றத்தில் ஐ.தே. கட்சி 14 எம்.பிக்களுடன் பலவீனமடையும் நிலைமை உருவாகி இருக்கிறது. ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் ஆட்டம் கண்டுள்ளது.

உயர்மட்டக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டும்படி 25எம்.பிக்கள் தமது கையெழுத்துடன் விடுத்த அவசர கோரிக்கையை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்தார். இதையடுத்தே இந்த எம்.பிக்கள் அதிரடியாகத் தமது முடிவை அறிவித்துள்ளனர்.

இந்தநிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

''நாங்கள் ஒருபோதும் அரசுடன் இணையப்போவதில்லை. அரசுக்கு ஆதரவளிக்கப்போவதுமில்லை. மேலும் எதிர்க்கட்சியை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வோம். (24ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பாணின் விலை 3 ரூபாவால் உயர்ந்தது

கொழும்பு,செப்.11

450கிராம் பாணின் விலை மூன்று ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற சங்கத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் போதே நேற்று நள்ளிரவு முதல் பாணின் விலையை அதிகரிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

"இந்த அடிப்படையில் பேக்கரி உரிமையாளர்களுக்கு 50கிலோகிராம் கோதுமை மாவுக்கு இதுவரை வழங்கப்பட்ட 225 ரூபா விலைக்கழிவு வழங்கப்படமாட்டாது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## அலரிமாளிகைக்குச் செல்லும் கைதிகள்; அங்கு ஜனாதிபதி அவர்களுக்கு விருது!

கொழும்பு,செப்.11

கைதிகள் தினம் நாளை அனுஷ்டிக்கப்படுகின்றது. இதை முன்னிட்டு 500 கைதிகள் அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கும் நிகழ்வொன்று 14ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறும்.

ஜனாதிபதியொருவர் சிறைக் கைதிகளைச் சந்திப்பது இதுவே முதல் தடவை என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இச்சந்திப்பின்போது சகல துறைகளிலும் திறமைகளை வெளிப்படுத்திய ஐந்து கைதிகளுக்கு ஜனாதிபதியினால் விருதும் சான்றிதழும் வழங்கப்படும். அத்துடன்

(24ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி சாந்தபுரத்தில் இன்று மீள்குடியேற்றம்

கிளிநொச்சி,செப்.11

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த 281 குடும்பங்கள் இன்று மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளன எனக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இதற்கான அனுமதியை கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தனராஜகுரு வழங்கினார் என கிளி நொச்சி மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

(விவரமான செய்தி 17ஆம் பக்கத்தில்)

## தமிழ் அகதிகள் வருகையைத் தடுப்பதற்கு கனேடிய அரசு விசேட தூதுவரை நியமிக்கும்

### இலங்கை, தாய்லாந்து நாடுகளுக்குச் செல்வார்

ரொறன்டோ,செப்.11

கப்பல்கள், படகுகள் மூலம் அகதிகள் கனடாவுக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்த கனடா அரசு ஆசிய பிராந்தியத்தில் விசேட தூதுவர் ஒருவரை நியமிக்கவுள்ளது.

கனடாவுக்கு 'சன் சீ' கப்பல் செல்லும் முன்னரே 76 இலங்கை அகதிகள் கனடாவைச் சென்றடைந்தமை தெரிந்ததே. இதன் பின்னர் 492 இலங்கைத் தமிழ் அகதிகளுடன் சன் சீ கப்பல் சமீபத்தில் கனடா, வான்கூவர் துறைமுகத்தைச் சென்றடைந்தது.

இவர்கள் மீது தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கை அகதிகள் தொடர்ந்து கனடாவுக்குப் படையெடுப்பது கனடா அரசுக்குச் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஆசியப் பிராந்தியத்தின் விசேட தூதுவராகக் கனேடிய பாதுகாப்புப் புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் வார்ட் எல்கொக்கை கனேடிய அரசு நியமிக்கின்றது. (24ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய இராணுவத் தளபதி நாடு திரும்பினார்

கொழும்பு,செப்.11

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் வி.கே.சிங் ஐந்து நாள்கள் இலங்கை பயணத்தை முடித்துக்கொண்டு வியாழக்கிழமை நண்பகல் புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து தனிப்பட்ட விமானத்தில் புறப்பட்டுச் சென்ற இந்திய இராணுவத் தளபதியை வழியனுப்பி வைக்க இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூரிய, அவரது மனைவி மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகள் பலரும் சென்றிருந்தனர்.

இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் (24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.செயலகத்தில் புதனன்று அபிவிருத்திக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டமும் மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டமும் எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளன.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் இணைத்தலைவர்களான பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண சபை ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் தலைமையில் நடைபெறும்.

இதேவேளை, அன்று முற்பகலில் திணைக்களத் தலைவர்களுடனான மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் குழுவின் கூட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது என்று அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (ஒ-ஐ)

## இலங்கையின் அரசியல் மாற்றத்தின் தாக்கம்; இந்தியாவிடம் அறிக்கை கோருகின்றது அமெ.

கொழும்பு,செப்.11

இலங்கையின் அரசியல் மாற்றங்கள் தெற்காசியப் பிராந்தியத்தின் நலன்களில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தொடர்பாக அறிக்கை ஒன்றை தயாரித்து வழங்குமாறு இந்தியாவிடம் அமெரிக்கா கோரியுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள சகலவிதமான மாற்றங்கள் குறித்தும் இந்த அறிக்கையில் இந்தியாவின் கருத்தை முன்வைக்குமாறு அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் போருக்கு பின்னர் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், இலங்கையுடனான வெளிவிவகார உறவு, இலங்கையின் (24ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வெடி விபத்தில் மூன்று சிப்பாய்கள் காயம்

கொழும்பு,செப்.11

வவுனியாவிலுள்ள இராணுவத்தின் 211ஆவது படைப்பிரிவுத் தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பகல் இடம்பெற்ற வெடிவிபத்தில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதக் களஞ்சியம் துப்புரவு செய்யப்பட்டபோது கைக்குண்டு ஒன்று தவறுதலாக வீழ்ந்து வெடித்ததனாலேயே இந்த இராணுவத்தினர் காயமடைந்தனர் எனப் படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

இவர்கள் தற்போது வவுனியா அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வெடிச் சம்பவம் குறித்து இராணுவத்தினர் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (ஒ-சி)

## ஐ.தே.கவுக்கு புதிய யாப்பு

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அறிவிப்பு

கொழும்பு,செப்.11

ஐக்கிய தேசிய கட்சியின் புதிய யாப்பு ஒன்று கட்சி சம்மேளனத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த யாப்பு அடுத்த கட்சி சம்மேளனத்தின்போது நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

மஹியங்கணை மற்றும் ரிதிமாலியத்த ஆகிய பிரதேச சபைகளின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுடன் தியத்தலாவையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதவிர, கட்சியின் புதிய தொகுதி அமைப்பாளர்கள் (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஆளணி தேவை

பிரபல தனியார் பாடசாலைக்கு G.C.E. O/L சித்தியடைந்த ஆங்கில அறிவுடைய வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் வேலை பார்க்கக் கூடிய ஆசிரியைகள் தேவை.

* கணக்கியல், அலுவலக நிர்வாகக் கடமைபுரிவதற்கு இளைப்பாறிய ஆண்,பெண் உத்தியோகத்தர் தேவை.

* கணனி அறிவுடைய தமிழ், ஆங்கிலம் தட்டச்சு தெரிந்த அலுவலகப் பெண் உத்தியோகத்தர் தேவை.

நேர்முகத் தேர்வுக்கு
0773627055, 0774083656



## கடை இடமாற்ற அறிவித்தல்

இதுவரை காலமும் இல.3, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தியில் இயங்கிவந்த குறிஞ்சி மருந்தகம் 12.09.2010 இல் இருந்து ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள புதிய தொடர்மாடிக் கட்டடத்தில் (ஹற்றன் நஷனல் வங்கி அருகில்) ஆரம்பிக்கப்படும் என்பதை எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

உரிமையாளர்.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான
சுதர்சினி வைகுந்தனின் அன்புக் கணவர்



### யதகுலசிங்கம் வைகுந்தன்

அவர்கள் அகாலமரணமான செய்தி அறிந்து கவலையடைகின்றோம். அன்னாரின் மறைவுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்,
யா/ ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை.

## மரண அறிவித்தல்

### யதகுலசிங்கம் வைகுந்தன் (குந்தன்)

(முகாமையாளர், கதிரவன் இரும்பகம், சாவகச்சேரி)



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட யதகுலசிங்கம் வைகுந்தன் நேற்றுமுன்தினம்(09.09.2010) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற யதகுலசிங்கம் மற்றும் சரோஜினிதேவி தம்பதியரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்ற கைலாசபிள்ளை மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும் சுதர்சினியின் (ஆசிரியை, ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை) அன்புக் கணவரும் அபிஷாயினியின் ஆருயிர் தந்தையும் அருட்செல்வி (மஞ்சு), மேகலா (நோர்வே), அரவிந்தன் (அமெரிக்கா), சிவதீபன், சியாமினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற நீதிராசா மற்றும் அருள்முருகன் (நோர்வே), குகதர்சினி, லோபனா, கலைச்செல்வி, சாந்தினி சத்தியதாசன், சத்தியபாலன் ஆகியோரின் அருமை மைத்துனரும் விக்கினேஸ்வரநாதன், பரஞ்சோதி ஆகியோரின் சகலனும் கோபிகன், நிஷாந்தி, பிரசன்னா, கஜேந்திரன், ஜீவிதா, சயந்தன், நிவேதா, நிலாஷன், நிதுஷா ஆகியோரின் அருமை மாமனாரும் யதுவின் பெரிய தந்தையும் அக்ஷயா, கிஷானா,சாரங்கன், யதுஷா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாவலடி ஒழுங்கை*
*(வராகி அம்மன் கோயிலடி),*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
*தொ.பே.: 0776589049* (103206)

தகவல்:
குடும்பத்தினர்.

## கூட்டமைப்பின் 10 எம்.பிக்கள் எதிர்த்து வாக்களித்தனர்

கொழும்பு,செப்.11

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் 18ஆவது சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டபோது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பத்து உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அ.விநாயகமூர்த்தி, ஈ.சரவணபவன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோ நோதராதலிங்கம், வி.செல்வராசா, ப.அரிநேத்திரன், எம்.வி.சுமந்திரன் ஆகியோரே எதிர்த்து வாக்களித்தனர்.

இ.சம்பந்தன், எஸ்.யோகேஸ்வரன், எஸ்.சிறீதரன் ஆகியோர் வெளிநாட்டில் இருப்பதால் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

அம்பாறை மாவட்ட எம்.பி. பொ.பியசேன சட்டத்திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தார் என்பது தெரிந்ததே. (ஒ-ஐ)

## ஆவணிச் சதுர்த்தி

யாழ்ப்பாணம், செப். 11

நல்லூர் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் ஆவணிச் சதுர்த்தி திருவிழா இன்று காலை 7.30 மணிக்கு 1008 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகும்.

நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் இடம்பெறும். மாலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி விநாயகப் பெருமான் வீதிவலம் வருவார். (ஐ)

## 'நெஞ்சம் மறப்பதில்லை' கிறிஸ்தவ தமிழ் இசை நடன, நாடக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். பரியோவான் கல்லூரி மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு ' நெஞ்சம் மறப்பதில்லை' என்ற கிறிஸ்தவ தமிழ், இசை, நடன, நாடக நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

பரியோவான் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், கல்லூரியின் புலமைப் பரிசில் நிதிக்காக கொழும்பு கிறிஸ்தவ தமிழ் கலா மன்றத்துடன் இணைந்து இந்த நிகழ்ச் சியை ஏற்பாடு செய்துள்ளது. (ஒ)

## 5 ரூபா திருடிய சிறுமி நீதிமன்றில்

கொழும்பு, செப். 11

ஐந்து ரூபாவைத் திருடினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட 13 வயது சிறுமி நீதிமன்ற த்தில் நிறுத்தப்பட்ட சம்பவமொன்று களுத்துறையில் இடம்பெற்றுள்ளது.

ஐந்து ரூபாவைத் திருடிவிட்டார் என இச்சிறுமி மீது களுத்துறை, தெபுவன பொலிஸ் நிலையத்தில் வர்த்தகர் ஒருவர் முறைப்பாடு செய்தார். இதையடுத்து, மேற்படி சிறுமியை பொலிஸார் கைது செய்தனர்.

விசாரணைக்குப் பின்னர் அவர் களுத்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். களுத்துறை மேலதிக நீதிவான் நாமல் பெரேரா இச்சிறுமியை ஒரு லட்ச ரூபா உறுதிப்பிணையில் விடுதலை செய்து இச்சிறுமி தொடர்பாக அறிக்கையொன்றை நீதிமன்றத்துக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி சமர்ப்பிக்கும்படி சிறுவர் நன்னடத்தை அதிகாரிக்கு உத்தரவிட்டார். (சி)


செல்வா திரையரங்கு - யாழ்ப்பாணம்



அர்ஜுன்,மம்முட்டி, சினேகா நடித்த அக்ஷன் திரைப் படம்
வந்தே மாதரம்
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.00
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு



## கட்டட தேவைகளுக்கான மணல் விநியோகம்

கட்டடத் தேவைக்கான உகந்த மணல் விநியோகத்துக்கு உண்டு. வேண்டிய இடங்களுக்கு விநியோகிக்கப்படும். தேவையானவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.இடம் -அரியாலை.

0778039554, 0771516018, 0212223963

(இவ் விளம்பரதாரருக்கு மணல் விநியோகத்திற்கான அனுமதி புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தால் வழங்கப்பட்டுள்ளது.)



## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

(Sales Reps)

யாழ். நகரில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றில் Electronic and Electrical பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை.

(Sales Reps)

தொடர்பு:
0770762133



## தேவை

* சாரதி தேவை. இவர் ஐந்துவருட அனுபவம் உடையவராகவும் முழுநேரத் தொழில் புரியக் கூடியவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது. கிழமை இறுதி விடுமுறை இல்லை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

* இரண்டு வீடுகள் தேவை.

ஒன்று 3 அல்லது நான்கு பேர் தங்கக் கூடியது. மற்றையது கிட்டத்தட்ட 10 பேர் தங்கக்க் கூடியது. நல்ல வசதி கொண்டவையாகவும் புத்தூர் சந்திக்கும் அண்மையில் AB 32 அல்லது AB 20 பாதையில் அமைந்திருத்தல் வேண்டும்.

தொடர்பு:
0774426638,
0778454272

China Railway No.5
சைனா றெயில்வே,
இல.23, சொலமன் ஒழுங்கை,
ஓல்ட் பாக் வீதி, யாழ்ப்பாணம்.



## சிவாச்சாரியார்கள் தேவை

இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் சிவாச்சாரியார்களாக பணி செய்வதற்கு விரும்பும் சிவாச்சாரியார்கள் தங்களின் நிழற்படம், சுயவிவரவக் கோவை, நற்சான்றிதழ்கள் என்பவற்றை info@amma-nealing.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

ஆங்கிலத்தில் பேசுதல் தமிழில் பூசை செய்யும் அனுபவம் என்பன விசேட தகுதிகளாகக் கொள்ளப்படும்.

தலைவர், நிர்வாகசபை,
இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்



## Vacancy Notice

SRI LANKA RED CROSS SOCIETY

Position: - Management Assistant
Employment: - Contract basis
Appointment: - Immediate
Salary: - Rs. 16, 400.00 + other benefits

Sri Lanka Red Cross Society, Jaffna branch seeking an outstanding talented person with good communication skills and pleasant reception qualities for this position. Interested candidates are encouraged to send their application with CV to: Branch Executive Officer, No: 73, Kandy road, Jaffna on or before 18th September, 2010.

**Required qualification:-**
Passed in Advance Level (GCE A/L)/ Diploma in Office Administration/ management and/ or at least 3 years of experience in relevant field

**Knowledge, Skills and Abilities:-**
★ Computer literate
★ Good writing, analytical and problem solving skills.
★ Knowledge of principles and practices of organization, planning, records management
★ Experience in general administration.
★ Ability to communicate effectively in trilingual
★Ability to operate standard office equipment, including but not limited to, computers, Telephone systems, calculators, copiers and facsimile machine
★Ability to follow oral and written instructions and an innovative team player
★Knowledge about Red Cross movement



## STUDY IN UK

VISA வின் முன்போ அல்லது பின்போ எந்த விதமான கட்டணமும் அறவிடப்படமாட்டாது

U.K., CYPRESS, MALAYSIA, BELARUS ஆகிய நாடுகளில் தொழில் வாய்ப்புடன் கூடிய அரிய வாய்ப்பு

★CYPRESS 100% VISA CURRENTLY (VISA பெற்ற பின் College Part Payment செலுத்தும்வசதி)
★ Part time Jop Arrangement
★ Sponsor Arrangement
★ O/L இல் ஆங்கில அறிவு இல்லாதவர்களும் U.K. செல்லக்கூடிய வசதி
★ Sponsor இல் நிராகரிக்கப்பட்ட Visa க்களுக்கு 100% உத்தரவாதத்துடன் Sponsor ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
★ சகல நாடுகளுக்குமான Visa பெற்றுக்கொள்வதற்கான ஆவணங்கள் தகுந்த [illegible]



533, ஸ்ரான்லி வீதி, இராசாவின் தோட்டம்,
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
0778098592,
0214910436( Office)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இவர்களுக்கு உதவ எவருமில்லையா?

இலங்கையின் சிறைச்சாலைகளில் கைதிகளாக இருப்போரின் மொத்த எண்ணிக்கை 27,000 என்று புனர்வாழ்வுத்துறை அமைச்சர் டியூ குணசேகரா தகவல் வெளியிட்டிருக்கிறார். அவர்களில் 10,000 பேரை ஒரே நாளில் விடுவிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பத்தாயிரம் பேரும் சிறு சிறு குற்றங்களைச் செய்ததற்காகத் தண்டனை பெற்றவர்கள். தமக்கு விதிக்கப்பட்ட 500 ரூபா முதல் 10,000 ரூபா வரையான அபராதத் தொகையைச் செலுத்த முடியாதவர்கள். ஆனால் இவர்களுக்குரிய தேவைகளை நிறைவேற்ற அரசு நாளாந்தம் ஒருவருக்கு 261 ரூபா வீதம் செலவிடுகிறது.

சிறு குற்றம் இழைத்த இவர்களை பொதுநலப் பணிகளைச் செய்ய அமர்த்தி, அவர்களைக் குறுகிய காலத்தில் விடுவித்து விடலாம் என்பது அமைச்சரின் யோசனை. அரசுக்குப் பயனுள்ள ஆலோசனை இது. அமைச்சரின் இந்த ஆலோசனையை அரசு துரிதமாகச் செயற்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

மேலும், யாழ்ப்பாணம், போகம்பரை, வெலிக்கடை, காலி, மாத்தறை ஆகிய சிறைச்சாலைகள் நகரங்களில் அமைந்திருப்பதால் அவற்றை வேறு இடங்களுக்கு மாற்றவும் உத்தேசிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தகவல் வெளியிட்டிருக்கிறார். இதுவும் உகந்ததே.

குற்றம் இழைத்தார்கள் என்று கண்டறி யப்படாதவர்கள்,குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாதவர்கள், வெறுமனே 'சந்தேகம்' என்ற முத்திரை குத்தப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாமல், வேண்டுமென்றே, சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் எண்ணிக்கை ஆயிரக் கணக்கில் உண்டு.

அவர்கள் தமிழ் இளைஞர்கள். 'அவசரகாலச் சட்டத்தின் கீழ்' 'பயங்கரவாதச் சட்டத்தின் கீழ்' என்ற 'லேபல்'களுடன் அவர்கள் பல வருடங்களாக சிறைகளுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். ''சந் தேகநபர்'' என்ற இருவார்த்தைகளோடு அவர்களின் இளமைக்காலம் கருகிய மொட்டாகிப் போகிறது. இது பெரும் மானிதாபிமானப் பிரச்சினை.

கொழும்பு நகரில் ஓரிடத்தில் ஒரு குண்டு வெடித்து விட்டால், பல மைல் தொலைவில் வசிக்கும் தமிழ் இளைஞர்களைப் பிடித்து ''புலிச் சந்தேக நபர்கள்'' என்று நாமகரணம் சூட்டி அடைத்து வைத்து, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதைத் தாமதித்து அவர்களை உருக்குவதிலும், அந்தக் கடமைக்காகப் பட்டி வாங்குவதும் சீருடை அணிந்தவர்களின் வழக்கங்களில், சம்பிரதா யங்களில் பெயர் பெற்றது.

அவர்களை விடுவிக்காமல் உடலாலும் மனதாலும் ''சித்திரவதை'' செய்வதற்காகத்தான் அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும், அவசரகாலச் சட்டத்தையும் நீக்காமல் வைத்திருக்கிறதோ என்று தமிழ்ப் பெற்றோர்கள் மத்தியில் பெரும் சந்தேகம் எழும் நிலைக்கு இது வழிசெய்துள்ளது.

வன்னிப் போர் தீவிரமடைவதற்கு முன்னர், யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் - அவர்களில் பெரும்பாலான வர்கள் அப்பாவிகள்- வீதிகளில், சந்திகளில் உள்ள காவல் அரண்களைக் கடந்து பயணம் செய்தவேளைகளில் தலையாட்டிகள் சைகை காட்டினார்கள் என்பதற்காக கைதுசெய்யப்பட்டவர்கள் - எங்கிருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன நடைபெற்றது என்று 'சிறு சொட்டுத்' தகவலும் கிடைக்காமல் நான்கைந்து வருடங்களாக தேடாத இடமில்லை, விசாரிக்காத முகா மில்லை என்று அலைந்தலைந்து திரிகிறார்கள். சம்பந்தப்பட்ட பெற்றோர் விரக்தியின் எல்லைக்குத் தள்ளப்பட்டு வாழ்க்கை வெறுத்து மரண உணர்வின் விளிம்புக்குப் போய்விட்டார்கள்.

தமது குடும்ப உறுப்பினர் குறித்து அரசாங்கத்தினர், அரசுடன் சேர்ந்து இயங்குபவர்கள், உதவ மாட்டார்களா என்ற ஏக்கப் பெருமூச்சுவிட்டு, மனப்பலம் குன்றியவர்களாக, தமது பிள்ளைகள், சகோதரர்கள் திரும்பி வருவார்களா என்ற விரக்தியுடன் நாள்களைப் போக்குகிறார்கள்.

இது பெரும் மனிதாபிமானப் பிரச்சினை என்பதனைக் கருத்தில்கொண்டு, சாதாரண கைதிகள் சிறைகளில் இருந்து வெளியே செல்ல உதவுவது போன்று, காரணம் தெரிவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருப்போரையும் விடுதலைசெய்ய அமைச்சர் டியூ குணசேகரா உதவுவாரா என்ற ஆதங்கத்தை பாதிக்கப்பட்ட பெற்றோர் மற்றும் அவர்தம் உறவுகள் சார்பில் முன்வைக்கிறோம்.

யாழ்.நகரப்பகுதியில் உள்ள வடிகால்கள்

# துப்புரவுப் பணிகளில் ஈடுபடும் ஊழியர்கள் வர்த்தகரிடம் உறுதிச்சிட்டை பெறவேண்டும்

## மேயருடனான நேற்றைய கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம்ம,செப்.11

யாழ்.நகரப் பகுதியில் உள்ள வடிகால்களைத் துப்புரவுசெய்யும் பணியை மேற்கொள்ளும் மாநகர சபை ஊழியர்கள், அந்தப் பணியை முடித்து அந்தப் பகுதியில் உள்ள வர்த்தகர்களிடம் உறுதிச்சிட்டை பெறவேண்டும்.

யாழ்.நகரப் பகுதி வர்த்தகர்களுக்கும் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராஜாவுக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.வணிகர் சங்கத்தின் அலுவலகத்தில் மேயர் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

✱ வர்த்தக நிலையங்களில் சேரும் கழிவுகள் வீதியிலும் கால்வாயிலும் போடப்படுவதைத் தவிர்த்து அவற்றை வர்த்தக நிலையத்துக்கு முன்னால் ஒன்றாகச் சேர்த்து வைக்கப்படவேண்டும்.

✱ யாழ்.மாநகர சபைப் பணியாளர்களால் அவை தினமும் சேகரிக்கப்பட்டு அகற்றப்படவேண்டும். இது வழமையான செயற்படாக இருந்தாலும் அது மாநகர சபை மேற்பார்வையாளர்களால் கண்காணிக்கப்படவேண்டும்.

✱ மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினரால் காலை 6.30 மணி தொடக்கம் 8 மணிவரையும் யாழ்.நகர வீதி துப்புரவு செய்யப்படும். காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் மாநகர சபையின் கழிவகற்றும் வாகனம் வரும் நேரமாகும். அதேபோல் இரவு 8 மணி முதல் 12 மணிவரையும் கழிவகற்றும் வாகனம் கழிவுகளைச் சேகரிக்கும் நேரமாகும். இந்த நேரப் பகுதியில் வர்த்தக நிலையங்களில் சேரும் கழிவுகள் அகற்றப்படவேண்டும்.

✱ வடிகால் துப்புரவுப் பணிகளுக்கு இடையூறாகவுள்ள வடிகால் மூடிகளை அகற்றுவதற்கு வர்த்தகர்கள் ஒத்துழைப்பார்கள். ஒத்துழைக்க மறுக்கும் வர்த்தக உரிமையாளர்கள் தொடர்பாக யாழ்.மாநகர சபைப் பணியாளர்கள், வணிகர் கழகத்துக்கு அறிவிக்கவேண்டும். வணிகர் கழகம் மாநகர சபை முதல்வருக்கு அறிவித்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

✱ மாநகர சபையினர் வர்த்தக நிலைய உரிமையாளர்களின் நடவடிக்கை தொடர்பாக நேரடியாகப் பொலிஸாருக்கு அறிவித்து நடவடிக்கை எடுப் பதனை தவிர்ப்பது நல்லது.

✱ மாநகர சபையினரும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் வடிகால் துப்புரவுக்கு ஒத்துழைக்கவேண்டும்.

✱ பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் நகரப் பகுதியில் பொறுப்பற்ற முறையில் குப்பைகளையும் ஏனைய கழிவுப் பொருள்களையும் வீசுவதைத் தடுப்பதற்கு வீதிகளில் குப்பை சேகரிக்கும் கூடைகள் வைக்கப்படவேண்டும். அவை கண்கா ணிக்கப்படவேண்டும்.

உள்ளிட்ட தீர்மானங்கள் இந்தக் கலந்துரையாடலின் போது எட்டப்பட்டிருந்தன.

வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கடந்த சில நாள்களாக எதிர்கொண்ட பிரச்சினைகள் இதன்போது ஆராயப்பட்டன. அதில் வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் குப்பைகள், வடிகால்களின் கழிவுகள் போடப்பட்டுள்ளன எனக் கூறி சில வர்த்தகர்களை பொலிஸார் பலவந்தமாக இழுத்து ஓட்டோவில் ஏற்றி பொலிஸ் நிலையத்துக்குக் கூட்டிச்சென்று விசாரணை செய்தமை பற்றி விசனம் தெரிவிக்கப்பட்டது. பலவந்தமாக கையில் பிடித்து இழுத்து ஓட்டோவில் ஏற்றிய பொலிஸாரின் செயல் அடாவடித்தனமானது எனவும் வர்த்தக நிலைய உரிமையாளர்களால் எடுத்துரைக்கப்பட்டது. (ஒ-14-7)

# லண்டனில் வாழும் நெடுந்தீவு மக்களின் உதவியுடன் படகுச் சேவை சீர்செய்யப்படும்

## நியூஹாம் உதவிமேயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 11

நெடுந்தீவு மக்கள் அனேகர் லண்டனில் உள்ளனர். அவர்களுடன் கலந்துரையாடி நெடுந்தீவுக்கு ஒரு புதிய படகைப் பெற்றுத்தர முயற்சிகள் செய்வேன் என யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த லண்டன் நியூஹாம் மாநகர உதவி மேயரும் தொழிற்கட்சி உறுப்பினருமான போல் சத்தியநேசன் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை எற்றில்லாமல் யாழ்.மாவட்டத்திற்கான தேவைகளை முன்னெடுக்கக் கூடியதான அபிவிருத்திச் சபை ஒன்றை அமைக்க வேண்டும் என முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த உதவி மேயர் சத்திய நேசனின் நெடுந்தீவுப் படகுச் சேவை பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

இது குறித்து செய்திகளைப் பத்திரிகைகளில் தான் பார்த்ததாகவும் நெடுந்தீவு மக்களின் இந்தப் பிரச்சினை தொடர்பாக லண்டனில் உள்ள நெடுந்தீவு மக்களுடன் கலந்துரையாடி அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் நெடுந்தீவுப் பிர தேச சபைக்கு இந்த உதவியை வழங்க வேண்டும் எனக் கேட்பதால் பிரதேச சபையுடனும் தொடர்புகொள்வதாகவும் போல் சத்தியநேசன் தெரிவித்தார். (த-7)

# அரசியல் விஞ்ஞான பாட விடைத்தாள் மதிப்பீட்டில் ரெரன்ஸ் புரசிங்க நீக்கம்

## அரசியல் பழிவாங்கல் என ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு,செப். 11

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் அரசியல் விஞ்ஞான பாட விடைத்தாள் களைத் திருத்தும் செயற்பாட்டில் பிரதான பரிசீலராக சேவையாற்றி வந்த ஸ்ரீ ஜயவர்த்தன புரப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான ரெரன்ஸ் புரசிங்க இவ்வாண்டு விடைத்தாள்களைத் திருத்தும் செயற்பாடுகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரிய சேவைகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கற்றறிந்த சான்றோர்கள் எத்தகைய அரசியல் கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் அவர்கள் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளை நடுநிலை தவறாது அப்பழுக்கற்று நிறைவேற்றி வருவதாகவும் அந்த வகையில் கடந்த இருபது ஆண்டுகளாக கலாநிதி புரசிங்கவும் அவ்வாறே செயலாற்றி வந்துள்ளார் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கருத்துத் தெரிவித்தார்.

உடனடியாக அவரை விடைத்தாள் மதிப்பீட்டில் அமர்த்துவதற்குத் தவறும் பட்சத்தில் ஆசிரியர் சங்கங்கள் ஒருங்கிணைந்து தொழிற்சங்க ரீதியில் போராட்டத்தில் குதிப்பது தொடர்பாகக் கலந்துரையாடி வருவதாகவும் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் கலாநிதி புரசிங்க அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்து வந்துள்ளமையே அவர் இந்தப் பணியிலிருந்து ஒதுக்கப்பட்டமைக்கான காரணம் எனவும் குறிப்பாக உயர்தரப்பரீட்சை போன்ற பெரிதும் முக்கியத்துவம் பெறும் பரீட்சையொன்றின் விடைத்தாள்களைத் திருத்தும் செயற்பாடுகள் மீது மேற்கொள்ளப்படும் இவ்வித அரசியல் பழிவாங்கல்கள் அபாயகரமானவை எனவும் அவர் கூறியுள்ளார்.

குறுகிய அரசியல் நோக்கங்கள் மீது கல்வித்துறைக்கும் இத்தகைய நிபுணர்களின் வளமான பங்களிப்பு இழக்கப்படுகின்றமை கவலைக்குரியது எனவும் இப்பதவி நியமனம் இவ்வாண்டு வழங்கப்படாமை பற்றிப் பரீட்சை ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் சரியான காரணங்களைத் தெரிவிக்க முடியாமல் உள்ளதால் நிச்சயம் அரசியல் பழிவாங்கலென்றே கொள்ளவேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளள்.

அவரை மீண்டும் அந்தப் பதவியில் அமர்த்துவதற்கு ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுத்து இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சருக்கும் பரீட்சை ஆணையாளருக்கும் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளதாகவும் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார். (த-22)

## நாளை

ஆவணி 27 12.09.2010
ஞாயிற்றுக்கிழமை
திதி: : சதுர்த்தி
மு.ப.08.06 வரை
நட்சத்திரம் : சுவாதி
மு.இ.08.31 வரை
சுபநேரம் : 09.03-10.33 வரை
ராகுகாலம் : 0433-06.03 வரை

# தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க ஓய்வுபெறும் வாய்ப்பு

கொழும்பு, செப். 11

தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள அரசமைப்பின் 18 ஆவது திருத்தத்தை அடுத்து அது அமுல்படுத்தப் படும்போது, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தமது பதவிலியிருந்து ஓய்வுபெறுவதற்கான வாய்ப்பும் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் இந்த அரசமைப்புத் திருத்தம் நடைமுறைக்கு வந்து தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படும் வரையிலும் தேர்தல் ஆணையாளர் பதவி வகிக்கவேண்டியுள்ளதாக புதிய அரசமைப்புத் திருத்தத்தின் 31 ஆவது சரத்தின் 4 ஆவது விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனாலும் அதன் இரண்டாவது பிரிவில் காட்டப்பட்டுள்ளமைக்கு அமைய தேர்தல் ஆணையாளர் பதவிக்கு பிரதித் தேர்தல் ஆணையாளர் ஒருவரை நியமிக்கும் வாய்ப்பொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஜனாதிபதி விரும்பும் வேளையில் தேர்தல் ஆணையாளருக்கு ஓய்வுபெற்றுச் செல்லும் வாய்ப்பு கிட்டக்கூடும் என்று கூறப் படுகிறது. (த-22)

# "மக்கள் களரி" அமைப்பின் நாடகமும் அரங்கியலும் நிகழ்வு

பருத்தித்துறை, செப். 11

கலாசார அமைச்சின் அனுசரணையுடன் மக்கள் களரி நாடகமும் அரங்கியலும் நிகழ்வு வடமராட்சியில் மூன்று நாள்கள் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும், 30ஆம் திகதி வியாழக்கிழமை பருத்தித்துறை வட.இந்து மகளிர் கல்லூரியிலும், ஒக்ரோபர் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

மக்கள் களரி நடைபெறும் இடங்களில் காலை 10 மணிக்கு ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான நாடகமும் முற்பகல் 11.30 மணிக்கு இடைநிலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான நாடகமும் இடம்பெறவுள்ளன. (த-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33 ஆவது வருட திருமண நாள் வாழ்த்துக்கள்



இன்று
(11.09. 2010)
சனிக்கிழமை தமது
33 ஆவது வருட
திருமண நாள்
நிறைவை
ஆவரங்கால்,
சாந்தா தோட்டம்
ஸ்ரீ ஞானவைரவர்
ஆலயத்தில்
கொண்டாடும்

### தவராஜசிங்கம் - சிவனேஸ்வரி

தம் பதியர் இணைபிரியாத இல்லற வாழ்வில் பண்புடன் பாங்காய் வாழ இறைவனை வேண்டி அன்புடன் வாழ்த்துகின்றோம்.

*சாந்தா தோட்டம்,*
*ஆவரங்கால், புத்தூர்.*
(103011)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,சகோதரி,
மச்சான்மார்.


## CANADA
## Work Permit
### பெறுவதற்கான ஆலோசனைகள்

- வயதெல்லை – upto 40 years
- ஆங்கில அறிவு சரளமாக இருத்தல் வேண்டும்.
- அங்கிகரிக்கப்பட்ட Diploma / Degree உடையவர்களுக்கு முன்னுரிமை
- குறைந்த பட்சம் ஒரு வருட வேலை அனுபவம் தேவை.

**SIC Center**, 734, Hospital Road, Jaffna.
Tel : 077-900 4194


## தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளையின் கரும நேரம் அதிகரிப்பு

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையின் கருமபீட நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வார நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 3.30 மணிவரை கருமபீடம் இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

## தலைமைத்துவச் செயலமர்வு

பருத்தித்துறை, செப். 11

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவ செயலமர்வு இரண்டு நாள்கள் புலோலி மெதடிஸ்த தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பெண் மாணவத் தலைவர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் கிழமையும், ஆண் மாணவத் தலைவர்களுக்கான செயலமர்வு 17 ஆம் திகதி வெள்ளிக் கிழமையும் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (த-190)

## வணிகப் போட்டி 18 ஆம் திகதியன்று

பருத்தித்துறை, செப். 11

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான வணிகப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

தரம் 10 தொடக்கம் தரம் 12 வரையானயிலான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள் இப் போட்டியில் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-190)

## ஹைஏஸ் - சைக்கிள் விபத்தில் இளைஞர் படுகாயம்

தென்மராட்சி, செப். 11

ஹை ஏஸ் வாகனம் - சைக்கிள் விபத்தில் இளைஞர் படுகாமடைந்தார். இச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்றது.

ஒழுங்கை ஒன்றிலிருந்து ஏ-9 வீதிக்கு சைக்கிளைச் செலுத்திய வேளையில் எதிரே வந்த வாகனம் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கச்சாய் தெற்கைச் சேர்ந்த குமாரசாமி திலக்ஸன் (வயது -19) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுப்பி வைக்கப்பட்டார். (த-207)

## துயர்பகிர்கின்றோம்

### *செல்வி ஜெகதாம்பிகை தியாகராஜா*

எமது பாடசாலை ஆங்கில ஆசிரியர் தி.ஸ்ரீராகவன் அவர்களின் பாசமிகு சகோதரி செல்வி ஜெகதாம்பிகை தியாகராஜா அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/ மெதடிஸ்த .பெ.உ.த. பாடசாலை
பருத்தித்துறை (சி-570802)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி குணமணி இராசரத்தினம்

(முன்னாள் பிரதி அதிபர், யா/மெதடிஸ்த பெ.உ.த. பாடசாலை)

எமது பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி குணமணி இராசரத்தினம் 08.09.2010 இல் காலமான செய்திகேட்டு மிகவும் துயரடைவதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பாடசாலைச் சமூகம்,*
யா/மெதடிஸ்த பெ.உ.த. பாடசாலை, பருத்தித்துறை

## மரண அறிவித்தல்

### *திருமதி சிசீலியா குணமணி இராசரத்தினம்* B.A

(ஓய்வுபெற்ற உதவி அதிபர், யா/மெதடிஸ்த.பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை)



திருமதி சிசீலியா குணமணி இராசரத்தினம் B.A (ஓய்வுபெற்ற உதவி அதிபர், யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை) அவர்கள் மகிமைக்குள் பிரவேசித்துள்ளார்.

அன்னார் J.S.இராசரத்தினம் (ஓய்வு பெற்ற கணித ஆசிரியர், யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை) அவர்களின் அன்பு மனைவியும் திரு. திருமதி குணநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி) தம்பதியரின் பாசமிகு மகளும் திரு.திருமதி செல்லத்துரை தம்பதியரின் மருமகளும் ரஜனி, Dr.ராஜசீலன், ராஜபாலன் Dr.ராஜசெல்வம், ராஜகருணா ஆகியோரின் பாசமிகு தாயாரும். குவின்ரஸ், நில்மினி, றுலாந்தினி, Dr.அருணிகா, மைதிலி ஆகியோரின் மாமியாரும். டிலான், நட்டாஸா, யோனத்தான், சிறில், அனிற்றா, அன்று, எலானா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 'பெத்தனி', கடற்கரை வீதி, பருத்தித்துறையில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (11.09.2010) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
J.S.இராசரத்தினம்
*(கணவர்).*

## "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்"

## "நெஞ்சம் மறப்பதில்லை"

யாழ். பரி. யோவான் கல்லூரி பழைய மாணவர் சங்கம் தென்னிலங்கை, கல்லூரியின் "புலமைப் பரிசில் நிதிக்காக" (Scholarship Fund) கொழும்பு கிறிஸ்தவ தமிழ் கலா மன்றத்துடன் இணைந்தளிக்கும் "கிறிஸ்தவ தமிழ் இசை, நடன, நாடக நிகழ்ச்சி".

| | |
|---|---|
| நெறியாள்கை | : H.T. விபுலானந்தா (மூர்த்தி) |
| இடம் | : யாழ். பரி. யோவான் கல்லூரி மண்டபம் |
| திகதி | : செப்ரெம்பர் 11ம் திகதி 2010. (September 11th 2010) |
| நேரம் | : பி.ப.4.00மணி |
| நுழைவுச்சீட்டு | : ரூபா 500/- 250/- 100/- மாணவர்கள் ரூபா 50/- |
| கிடைக்குமிடம் | : யாழ். பரி யோவான் கல்லூரி / சுண்டிக்குளி மகளிர் கல்லூரி காரியாலயம் |
| | நிகழ்வு தினத்தில் மண்டப வாயிலில் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(சி-570392)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசையா பாக்கியம்



மூளாயைப் பிறப்பிடமாகவும் 23, கச்சேரி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா பாக்கியம் 09.09.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் திருமதி அன்னரத்தினம், காலஞ்சென்ற தருமராஜா (தருமு) மற்றும் செல்வராஜா (லண்டன்), தவராஜா (தவம் - வர்த்தகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை மாரிமுத்து, முத்துக்குமாரு, மீனாட்சி, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மயில்வாகனம் (இளைப்பாறிய ஊழியர், இல.மின்சார சபை), சுகிர்தா, அன்ரனீற்றா (பவளம்) ஆகியோரின் அன்பு மாமியும் பிரபாகரன் - லோகேஸ்வரி (ஜேர்மனி), கீதா - சுரேஸ், சகிலா - ரமேஸ் (நோர்வே), யதுசா - விஜயகுமார் (லண்டன்), இதயரூபன் - விஜிதா (கனடா), கவிஜெயந்தன் - சங்கீதா (லண்டன்), வத்சலா - பிரசாந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தேனுகன், கீர்த்திகன், கார்த்திகன், விதுசன், மிதுனா, மிதிலன், வர்ணன், மஞ்சுதன், கல்கிதன், திரஷ்வி, பிரகவி, கனி, கிஷோரா, கோசலன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.09.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*23, கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*
T.P: 222 5775, 222 9591
(103190)

தகவல்: தவராஜா (தவம் - மகன்),
அன்னரத்தினம் (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி ஊழியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் பலருக்கு இதுவரை கிடைக்கவில்லை

## வருடக் கணக்கில் காத்திருக்கும் குடும்பங்கள்

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றி இளைப்பாறிய பல உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் வழங்கப்படாததால் பலரது குடும்பங்கள் ஓய்வூதியம் பெற வருடக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது.

உள்ளூராட்சித் திணைக்களத்தில் கடமையாற்றுவோருக்கென ஓய்வூதியத் திணைக்களத்தில் தனியானதொரு பிரிவு செயற்பட்டு வருகிறது. உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றுவோரின் ஓய்வூதியம் பற்றிய சகல பணிகளையும் இப்பிரிவுகளே மேற்கொண்டு வருகிறது.

ஊழியர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் விதவை, அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் போன்றவற்றினை இப்பிரிவே வழங்கி வருகிறது. உள்ளூராட்சி ஓய்வூதியப் பிரிவே மாதாந்தம் ஓய்வூதியர்களுக்கான வவுச்சர்களையும் அனுப்பிவந்தது.

மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மாகாண சபையினால் உள்ளீர்க்கப்பட்டனர்.

இவ்வேளையில் 1990ஆம் ஆண்டு அரசினால் வெளியிடப்பட்ட 49/90 இலக்க சுயவிருப்ப ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளூராட்சி உத்தியோகத்தர், ஊழியர்கள் பலர் இளைப்பாறி ஓய்வூதியம் பெற்றனர்.

இந்த ஓய்வூதியர்கள் மரணமடைந்த பின்னர் இவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் விதவை ஓய்வூதியம் பெறுவதற்கு விண்ணப்பித்தால் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் இல்லாததால் அதற்குரிய படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்புமாறு கோருகின்றனர். இதன் பிரகாரம் விண்ணப்பம் அனுப்பிப் பல மாதங்களுக்குப் பின்னர்தான் ஓய்வூதியப் பிரிவினால் கடிதம் அனுப்பப்படுகிறது.

உள்ளூராட்சி ஓய்வூதியப் பணிப்பாளரினால் அனுப்பப்படும் படிவத்தினைப் பூரணப்படுத்தத் தேவையான விவரங்களைக் கடைசியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்று அனுப்பப் பல மாதங்கள் செல்கின்றன.

1990ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகள் அனைத்தும் பல்வேறு வகையான யுத்தஅனர்த்தங்கள், இடப்பெயர்வுகள் போன்றவற்றினால் உத்தியோகத்தர், ஊழியர்கள் பலரின் தனிநபர் கோவைகள் தொலைந்தும் அழிவடைந்தும் போயுள்ளன. இந்த நிலையில் இவர்கள் கடைசியாகக் கடமையாற்றிய சபையில் முழுமையாக விவரங்கள் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் வடக்கு - கிழக்கு மாகாண சபை தனித்தனி மாகாண சபைகளாக உருவாக்கப்பட்டு மீண்டும் அந்தந்த மாகாண சபைகளால் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்வாங்கப்பட்டனர். வடக்கு கிழக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் உள்ளீர்க்கப்பட்ட அனைத்துப் பணியாளர்களின் கோவைகள் எந்த மாகாண சபையில் உள்ளது என்பது எவருக்கும் தெரியாத ரகசியமாக உள்ளது. இதனால் உள்ளீர்க்கப்பட்டவேளையில் அனுப்பப்பட்ட படிவத்துடன் அனுப்பப்பட்ட சான்றிதழ்களைப் பெற முடியாமல் பலர் தவிக்கின்றனர்.

உரிய படிவங்கள் பூர்த்திசெய்து அனுப்பப்பட்டும் மாதக் கணக்கில் பதில் ஏதும் கிடைக்காததால் கொழும்பில் உள்ள அலுவலகத்திற்குச் செல்வோரை சிங்களத்தில் உரையாடிக்கூடிய ஒருவரை அழைத்து வருமாறு கூறுகின்றனர்.

குடும்பத் தலைவரை இழந்ததால் ஓய்வூதியம் கிடைக்காத நிலையில் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாடும் குடும்பங்கள் தமது கஷ்டத்தின் மத்தியில் சிங்களத்தில் உரையாடக்கூடிய ஒருவரை அழைத்துச் செல்வதற்கு ஏற்படும் செலவுடன் பெருமளவு பணத்தை அந்தக் குடும்பத்திடம் அவர்கள் கறந்துவிடுகின்றார்கள். விதவை, அநாதை ஓய்வூதிய இலக்கம் இருப்பின் இவ்வளவு சிரமங்கள் இந்தக் குடும்பங்களுக்கு ஏற்பட்டிருக்காது.

இதனால் யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள் தற்போது கடமை புரியும் பணியாளர்களுக்கு மட்டுமல்ல ஓய்வு பெற்று இதுவரை விதவை, அநாதை ஓய்வூதிய இலக்கம் கிடைக்காத ஓய்வூதியர்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென பல ஓய்வூதியர்கள் கருத்துத் தெரிவித்தனர். (த)











யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் மூன்றுநாள் விஞ்ஞான மாநாடு நேற்று யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் அதிதிகளாக வருகை தந்த வைத்தியர்களையும் வைத்தியகலாநிதி எஸ்.சிவயோகன், வைத்திய கலாநிதி எஸ்.சிவபாலன், வைத்திய கலாநிதி திருமதி ஜி.பவானி ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்திய கலாநிதி ஹென்றி என். இராஜரட்ணம் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :தமிழரசன்)

# ஆங்கில மொழி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம்

## யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நடத்த ஏற்பாடு

பருத்தித்துறை,செப். 11

''வாழ்க்கைத்திறன் ஒன்றாக ஆங்கில மொழி நிகழ்ச்சித்திட்டம்'' பற்றிய அறிவுறுத்தல் கூட்டம் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நடைபெறவுள்ளது.

ஆங்கில மொழியைத் தேசிய மயப்படுத்தி நாடுமுழுவதும் பரப்பீடு செய்யும் ஜனாதிபதியின் விசேட முன்னெடுப்பின் கீழ் விசேட திட்டமொன்று அலரிமாளிகையில் கடந்த ஆண்டு ஜனாதிபதியால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தின் முக்கிய ஒரு நடவடிக்கையாக பாடசாலைகளில் பேச்சு ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்காக நாட்டின் ஆங்கில மொழி ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான தேசிய திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்கருத்திட்டம் பற்றி அறிவுறுத்துவதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாகாணங்கள் தோறும் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டுவருகின்றது.

அதன் தொடர்ச்சியாக வவுனியாவில் நாளைமறுதினம் 13ஆம் திகதி திங்கட்கிழமை இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய கேட்போர் கூடத்திலும், 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்திலும் இந்த அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதியின் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில் நுட்பத்திற்கான ஆலோசகர் கலாநிதி சுரனிமல பெர்னாண்டோ கலந்துகொண்டு விசேட உரையாற்றவுள்ளார்.

இந்தக் கூட்டத்துக்கு வலயக்கல்விப் பணிப்பாளர்கள், ஆங்கில பாட உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், வலயக் கணக்காளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வாழ்க்கைத்திறன் ஒன்றாக ஆங்கில மொழி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிற்றுவிக்கப்பட்ட சகல ஆசிரியர்கள் அனைவரையும் சமுக மளிக்கும்படி வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-190)



# விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி 18ஆம் திகதி முதல் 3 தினங்கள் திருநெல்வேலியில்

யாழ்ப்பாணம், செப். 11

சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிய சூழல் பாதுகாப்புடனான விவசாய உற்பத்தி தொடர்பாக விவசாய, விலங்கு வேளாண்மைக் கண்காட்சி எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் நடை




பெறும் என மாகாண விவசாயப் பணிப்பாளர் க.சுப்பிரமணியம் பிரதி விவசாயப் பணிப்பாளர் விரிவாக்கம் சி.சிவகுமார் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், விவசாய ஆராய்ச்சி நிலையம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வானிலை அவதான நிலையம், கமநல அபிவிருத்தித் திணைக்கள விவசாயிகள் கூடம் ஆகியவை இணைந்த வளாகத்தில் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு வைபவரீதியாக கண்காட்சியைத் தொடக்கி வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக விவசாய, காணி, கால்நடை அபிவிருத்தி, மீன்பிடி, நீர்ப்பாசன அமைச்சின் வடக்கு மாகாண செயலாளர் செ.பத்மநாதன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், யாழ். பல்கலைக் கழக விவசாய பீடாதிபதி திருமதி சிவமதி சிவச்சந்திரன், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன், கால்நடை உற்பத்தி சுகாதார உதவிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம், மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் வீ.ரி.செல்வரத்தினம், மாகாண சுதேச மருத்துவ பணிப்பாளர் திருமதி எஸ்.துரைரட்ணம், விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரட்ணம், நீர்ப்பாசனப் பொறியியலாளர் கே.கருணாநிதி, தென்னை பயிர்ச்செய்கை பிராந்திய முகாமையாளர் வி.மகாலிங்கம், பனைவள அபிவிருத்திச்சபை பொதுமுகா மையாளர் பா.லோகநாதன், போறூட் பணிப்பாளர் திருமதி றெணி கேற்ஸ், ஐ.நா. அபிவிருத்தித்திட்ட தலைமை அதிகாரி கு.வி.நிசாந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்களும் கலந்துகொள்கிறார்கள்.

கண்காட்சி தினமும் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயனப் பதார்த்தங்களால் நஞ்சாகும் உணவு வகை: இதனைத் தடுப்பதற்காக இயற்கையுடன் ஒன்றிணைவோம்

**யாழ்.மாவட்ட விவசாயத் திணைக் களம் 'சுற்றுச்சூழலில் நட்பான சந்தை அடிப்படையிலான விவசாய உற்பத்தி' என்ற கருப்பொருளின் சேதனப் பொருள்களிலான விவசாய உற்பத்திகள் குறித்த விவசாயக் கண்காட்சி இம்மாதம் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

உணவே எமனாகும் நிலைமை இன்று உலகின் பெரும்பாலான மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. காரணம்



விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் விவசாய உற்பத்திப் பொருள்களை நஞ்சாக்கம் அடையச் செய்வதே.

பாவனைக்குச் சுலபமானதாகவும் இலாபகரமானதாகவும் பலாபலன்கள் அதிகமாகவும் இருந்த இந்த இரசாயனப் பதார்த்தங்கள் விவசாயிகளிடத்தே பெரும் வரவேற்றைப் பெற்றுள்ளன. எனினும் நன்மையை விட தீமையை அதிகம் தரும் இந்த இரசாயனப் பதார்த்தங்களைத் தவிர்த்து இவற்றுக்கு நிகரான இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்தி உரம், கிருமிநாசினிகள் போன்றவற்றை உருவாக்குவதற்குப் பல்வேறு தரப்பினரும் முயன்று வருகின்றனர்.

இத்தகைய நல் முயற்சிக்கு மகுடம் வைப்பது போன்று யாழ்.மாவட்டத்தில் விவசாயத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள 'சுற்றுப்புறச் சூழல் நட்பான சந்தை அடிப்படையிலான விவசாய உற்பத்தி'' என்ற கருப்பொருளிலான கண்காட்சி அமையவுள்ளது.



இந்த மாதம் நடைபெறவுள்ள இக் கண்காட்சியில் யாழ். மாவட்டம் எதிர்கொள்ளும் விவசாயப் பொருள்களில் இரசாயனப் பதார்த்தங்களால் ஏற்படும் நச்சுத் தன்மை, சந்தைப்படுத்தல் போன்ற பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பான விடயங்களைத் தாங்கியதாக இக்கண்காட்சி அமையவுள்ளது.

'' சுற்றுப்புறச்சூழலுக்கு தீங்கு விளைவித்த தொழில்நுட்பங்கள் தொடர்பான அறிவுத்திறன்களை இக்கண்காட்சி பார்வையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் வழங்கி அவை

**தொகுப்பு: லக்ஸ்மன்**

தொடர்பான விடயங்களை வளர்த்தெடுப்பதே இக்கண்காட்சியின் முக்கிய குறிக்கோள்'' என்கிறார் யாழ். விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். சிவகுமார். இந்த இலக்கில் தாம் வெற்றியடைந்தே ஆகவேண்டும் என்பதற்காகப் பணிப்பாளரும் திணைக் களத்தின்ஏனைய உத்தியோகத்தர்களும் கடின உழைப்பின் மூலம் கண்காட்சிக்கான துண்டங்களை அமைத்துள்ளனர்.

**மரக்கறித் துண்டங்கள்**

மரக்கறிப் பயிர்ச் செய்கைகளில் கூடிய அளவு இரசாயன உரங்களும் நீரும் பொதுவாக விவசாயிகளால் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் ஏற்படக்கூடிய தாக்கங்களால் நோய்கள் ஏற்படும் நிலை உள்ளது. இரசாயன உரங்களைப் பயன்படுத்தும் காய்கறிகளை உண்பதால் பல்வேறு வகையான நோய்த் தாக்கங்களுக்கு மக்கள் உள்ளாவதைப் பலரும் அறிவர்.

இந்நிலையில் விவசாயத் திணைக்களம் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிச் செய்கைகளில் நச்சுத் தன்மை ஏற்படாதவாறு உற்பத்திகள் இடம் பெறவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் சேதனப் பசளைகளின் உற்பத்திப் பயன்பாட்டு முறைகளை விவசாயிகளுக்கு அடிக்கடி தெளிபடுத்தி வருகின்றது. இக் கண்காட்சியில் சேதனப் பசளைகள், உற்பத்தி மண்புழு உரம், கூட்டெரு, தாவரவியல் பீடை நாசினி, தாவர அடிப்படையிலான திரவப் பசளைகளைப் பயன்படுத்திய பயிர்ச் செய்கைத் துண்டங்களே அமைந்துள்ளன.


**வாழைப்பயிர் செய்கை**

யாழ். மாவட்டத்தில் வர்த்தக ரீதியாகச் செய்கை பண்ணப்படும் வாழைப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கக் கூடியதாக வாழைச் செய்கை முறைமைக்கான காட்சித் துண்டம் அமைகிறது. நிலத்தடி நீரினைக் கூடிய அளவு வேண்டி நிற்கும் வாழைப் பயிர்களுக்கு குறைந்த அளவிலான நீரைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக் கூடிய சொட்டு நீர்ப்பாசன முகாமைத்துவ முறைகள், பல தரப்பட்ட வாழை இலைகள் சேகரிக் கப்பட்டுச் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

இந்த மாதிரித் துண்டத்தில் கப்பல், கதலி, இதரை, செவ்வாழை, மருத்து வாழை, பன்றி, யானை வாழைகள் என்பவற்றுடன் வறட்சி கூடிய இடங் களில் வளரக்கூடிய சாம்பல் மொந்தன், பச்சை அபிஷேக மொந்தன் உள்ளிட்ட ஏற்றுமதிக்குரிய ''கவன்டிஸ்'' வாழையும் இடம்பெறுகின்றது.

**மூலிகைகள்**

திடகாத்திரமான வாழ்வுக்கு மூலிகைகளின் பயன் பாடுகள் இன்றியமையாதன. இந்த மூலிகைகளைப் பயன்படுத்துவது இன்று அருகிப் போன ஒன்று. எனினும் பண்டைய மக்கள் நீண்ட காலம் சுகதேகிகளாக வாழ மூலிகைகளை அவர்கள் பயன்படுத்



தியமையே காரணமாகும்.

மூலிகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மக்கள் சுகதேகிகளாவும் திடகாத்திமானவர்களாகவும் வாழக் கூடியதாக விவசாயத் திணைக்களம் சுதேச வைத்தியத் திணைக்களத்துடன் இணைந்து 200 இற்கும் அதிகமான பலதரப்பட்ட மூலிகைத் தாவரங்களை உள்ளடக்கிய மூலிகைத் தோட்டம் ஒன்றையும் கண்காட்சியில் இணைத்துள்ளது.

பயிரினங்களை நோய்த்தாக்கங்களில் இருந்தும் பூச்சிகளிடமிருந்தும் பாதுகாக்கும் முறைகள் தீங்குகளற்ற அதீத விளைச்சல் பொருள்களைச் சந்தைப் படுத்துவதற்கான வழிமுறைகள் காட்சியில் இடம்பெறுவதுடன் விவசாயிகளுக்கும் பார்வையாளர்களுக்கும் உரிய விளைச்சல்களையும் விவசாயத் திணைக்களத்தினர் வழங்கவுள்ளனர்.

காளான் செய்கை பெறுமான அதிகரிப்பு நாற்று மேடைப் பழப்பயிர் செய்கைகளுக்கான தொழில் நுட்பங்களுடன் திருந்திய மறுவயல் பயிர் செய்கை போன்ற நடவடிக்கைகளுக்கு இந்தக் கண்காட்சி யில் இடம்பெறும் என்பதால் 2010ஆம் ஆண்டிற்கான இக் கண்காட்சி விவசாயிகளுக்கு பயனுள்ள ஒன்றாக அமையும் என்பது மறுப்பதற்கில்லை.*

# மகாகவி பாரதியாரின் மகா வாக்கியங்கள் காலத்தால் அழியாதவை

**மகாகவி பாரதியாரின் 88 ஆவது நினைவு தினம் இன்றாகும். 1921ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி மறைந்த மகாகவி பாரதியாரை நினைவுகூரும் வகையில் இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

ஞானிகள், மகான்கள், யோகிகள் கூறிய மிக முக்கியமான சிந்தனைகளை அவர்களுடைய ''மகா வாக்கியங்கள்'' என்று கூறுவர். பசித்திரு, தனித்திரு, விழித்திரு' என்றார் இராமலிங்க அடிகள். ''எல்லாம் எப்பவோ முடிந்த காரியம், ஒரு பொல்லாப்பும் இல்லை யாம் அறியோம்'' என்றார் யோகசுவாமிகள். இதனைப் போலவே மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் முக்கியமான சிந்தனைகளைப் பின்வரும் பாடலில் அடக்கலாம். உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்-தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும். வைரமுடைய நெஞ்சு வேண்டும். இது வாழும் முறைமையடி பாப்பா.



பாரதியாரின் பாப்பா பாட்டில் கடைசிச் சரணமாக அமைவது இந்தப் பாடல். இந்தப் பாப்பாப் பாட்டில் பாரதியார் பல அரிய உண்மைகளைக் குழந்தைகளுக்குக் கூறி வைத்துள்ளார். இறுதியில் முத்தாய்ப்பு வைத்தாற்போல இந்தச் சிந்தனைகளை அமைத்துள்ளார்.

தமது மனதாலும், வார்த்தையினாலும், செய்கையினாலும் உயிர்கள் மீது தமது அன்பைச் சொரிந்தவர் பாரதியார்.

பட்டுப் பூச்சிகள் கொல்லப்படுகின்றனவே என்று பட்டுப் புடவையை எரித்தவர் அவர்.

ஏழைகளுக்கு தான் போட்டிருந்த போர்வையைப் போர்த்திவிட்டு வீடு திரும்பியவர். மனிதர்களை மட்டுமின்றி எல்லா உயிர்களையும் மனதார நேசித்தவர். கழுதையைக் கட்டி முத்தமிட்டவர். இதனாலேதான் கவிஞர் அப்துல் ரகுமான் ''உன்னுடைய கவிதைகளைவிட உன்னுடைய வாழ்க்கை அழகானது'' என்றார்.

பாரதியார் கடவுள் மீது மிகுந்த நம்பிக்கை உடையவர். ''பக்தி உடையார் காரியத்தில் பதறார்'' என்று உபதேசித்தார். பக்திக்கு அவர் கொடுக்கும் விளக்கம் இது.

பக்தியாவது கடவுளை நம்புதல்; குழந்தை தாயை நம்புவது போலவும், பத்தினி கணவனை நம்புவது போலவும், பார்த்த பொருளைக் கண் நம்புவது போலவும், தான் தன்னை நம்புவது போலவும், தெய்வத்தை நம்ப வேண்டும். எப்போதும் இடைவிடாமல் நெஞ்சம் தெய்வ அருளைப் பற்றி நினைக்க வேண்டும்...... எல்லா மங்களங்களையும் தெய்வத்திடம் உண்மையுடன் கேட்டால் அது கொடுக்கும். தெய்வம் கொடுக்காவிட்டாலும் அதை நம்பவேண்டும். கேட்டவுடனே கொடுப்பது தெய்வத்திற்கு வழக்கமில்லை. பக்தி பக்குவமடைந்த பிறகுதான் கேட்டவரம் உடனே கிடைக்கும். எனவே, நாம் தெய்வத்திடம் கேட்ட பலன் கைகூடுவதற்கு எத்தனை காலம் தாமதமான போதிலும், அதைரியப்படாமல், தெய்வ பக்தியையும், அதனால் உண்டாகும் ஊக்கத்தையும் முயற்சியையும் துணையாகக் கொண்டு நடக்கவேண்டும்.....

பாரதியார் வலியுறுத்திய இன்னொரு முக்கிய சிந்தனை வைரமுடைய நெஞ்சு வேண்டும் என்பதாகும்.

''காலனைப் பார்த்து
''காலா உனை நான்சிறு புல்லென மதிக்கிறேன்; என்றன்
காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கிறேன்-
வேலாயுத விருதினை மனதிற் பதிக்கிறேன்-நல்ல
வேதாந்த முரைத்த ஞானியர் தம்மையெண்ணித்
துதிக்கிறேன்-ஆதி
மூலாவென்று கதறிய யானையைக்
காக்கவே-நின்றன்
முதலைக்கு நேர்ந்ததை மறந்தாயோ?
கெட்டமூடனே-

என்று குமுறும் பாரதியார் நலிவுற்றுபோகின்ற பாரத நாட்டைப் பின்வருமாறு சபிக்கிறார்.

வலிமை யற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
பொலிவிலா முகத்தினாய் போ போ போ
பொறியிழந்த விழியினாய் போ போ போ
ஒலியிழந்த குரலினாய் போ போ போ
ஒளியிழந்த மேனியாய் போ போ போ
கிலிபிடித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மையென்றும் வேண்டுவாய் போ போ போ



இம்மூன்று சிந்தனைகளையும் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியச் செய்தல் நம் எல்லோரதும் கடமையாகும்.

பேராயர் கலாநிதி


BRITISH COUNCIL

## பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

பதிவுசெய்யுங்கள் கொழும்பிலும் கண்டியிலும் ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கும் பாடநெறிகளுக்கு

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்.

- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சி நெறிகள் (வாரநாட்கள்/வாரஇறுதி)
- சிறந்த நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகளில் தரமான போதனை
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- வயதுவந்த மாணவர்களுக்கு ஆங்கில கற்றல் வலயத்தில் இலவச அங்கத்துவம்

நான் எப்படி கலந்து கொள்ளுவது?

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு: அடையாள அட்டை/கடவுச்சீட்டு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அல்லது உங்கள் பிள்ளையின் (வயது 6-15) பிறப்புச்சான்றிதழ் (கண்டி நிலையத்திற்கு)
- மீளளிக்கப்படாத கட்டணம் ருபா 800/- தேவைப்படும்.

பிரிட்டிஷ் கவுன்சில், 49 அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 3
தொலைபேசி: (011) 4521521, (011) 7521521, 0772521599
மின்னஞ்சல்: info.lk@britishcouncil.org

அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை 0830 - 1900

பிரிட்டிஷ் கவுன்சில், 88/3 கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொலைபேசி: (081) 2222410, (081) 7222410
மின்னஞ்சல்: info.lk@britishcouncil.org

அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை 0900 - 1600
ஞாயிறு 0900 - 1600 வரை விசாரணைகளுக்கு மட்டும்.



www.britishcouncil.org/srilanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய முகைதீன் ஜும்மா பள்ளிவாசலில் நேற்று ரம்ழான் நோன்பு பெருநாள் நிகழ்வு இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
மௌலவி ஒருவர் மார்க்க உபதேசம் செய்வதையும், முஸ்லிம்கள் பள்ளிவாசலில் தொழுகை செய்வதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்: உமா)*

# வட பகுதியில் முஸ்லிம்கள் மீளக் குடியமர்வதற்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது அவசியம்

## இலங்கையிலுள்ள முஸ்லிம்களை உதவக் கோருகிறார் மௌலவி

யாழ்ப்பாணம்,செப்.11

வடபகுதியில் முஸ்லிம் மக்கள் மீளக் குடியமர்வதற்கு வசதியாக வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த இலங்கையிலுள்ள அனைத்து முஸ்லிம் மக்களும் உதவவேண்டும் என அறை கூவல் விடுத்தார் மௌலவி மா்ழீன் ஆலிம்.

மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய முகைதீன் ஜும்மா பள்ளிவாசலில் நேற்று இடம்பெற்ற ரம்ழான் நோன்பு பெருநாள் நிகழ்வில் மார்க்க உபதேசம் நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

சங்கிலிய மன்னன் காலத்திலிருந்து தமிழ், சிங்கள மக்களிடையே இன ஐக்கியம் மேம்பட்டிருந்தது. எனினும் 90 ஆம் ஆண்டு காலப்பகுதியில் துரதிஷ்டவசமாக முஸ்லிம் மக்கள் வட பகுதியிலிருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டது. 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செய்து கொள்ளப்பட்டிருந்த சமாதான ஒப்பந்தத்தையடுத்து ஏ-9 வீதி திறக்கப்பட்ட வேளையில் முஸ்லிம் மக்கள் மீளவும் வட பகுதிக்கு வர முடிந்தது. எமக்கு ஏற்பட்ட நிலைமைக்கு தமிழ் மக்கள் காரணமாக இருக்கவில்லை என்பதனை இதன் போது நாம் புரிந்து கொண்டோம். 90 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் நாம் யாழ்ப்பாணத் தமிழ் மக்களுடன் மிக நெருக்கமாக பழகியிருந்தோம். அவர்களுக்கும் எமக்கும் இடைவெளியிருந்ததில்லை. அதே உணர்வை 2002 இல் யாழ்ப்பாணம் வந்த போதும் உணர்ந்தோம்.

எமது மக்களின் வெளியேற்றத்தை வடபகுதி தமிழ் மக்கள் எவரும் விரும்பவில்லை என்பதனை உணர முடிந்தது.

முஸ்லிம் மக்களாகிய நாம் வட பகுதியிலிருந்து வெளியேறிப் புத்தளம் உள்ளிட்ட ஏனைய மாவட்டங்களில் வாழ்ந்தோம். அப்போது அந்தந்த மாவட்டங்களில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களுக்கு நாம் எந்த விதத்திலும் இடையூறு செய்ததில்லை.

தமிழ் - சிங்கள மக்கள் தொடர்ந்தும் இன ஐக்கியத்துடன் வாழக் கூடிய சூழல் வட பகுதியில் ஏற்பட்டுள்ளது. எமது முஸ்லிம் மக்களுக்குத் தமிழ் மக்கள் பல்வேறு உதவிகளை வழங்கி வந்துள்ளனர். அதே போல் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களுக்கு உதவி வருகின்றனர் - என்றார். (த-14)

# நான்கு பாடசாலைகளுக்கு ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு

பருத்தித்துறை ,செப்.11

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள நான்கு பாடசாலைகளில் பொது வலயத்திலுள்ள வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பொது சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக இந்தநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (த-190)

# விபத்தில் யுவதி காயம்

தென்மராட்சி ,செப்.11

சமாந்தரமாகச் சென்றமோட்டார் சைக்கிளில் சைக்கிள் சிக்கித் தூக்கி வீசப்பட்டு யுவதி காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த ரி.சகிந்தினி (வயது 13) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (த-207)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# மகனின் திருமண வைபவத்தையொட்டி வறிய குடும்பங்களுக்குக் கோழிக்கூடு

## சுன்னாகம் வர்த்தகரின் செயலுக்குப் பாராட்டு

இணுவில்,செப்.11

தமது மகனின் திருமண வைபவத்தையொட்டி 10 வறிய குடும்பங்களுக்கு கோழிக் கூடுகளை வழங்கிய சுன்னாகத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரை பலரும் பாராட்டியுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

சுன்னாகத்தைச் சேர்ந்த மர அரிவு நிலைய உரிமையாளரான செ.மகாதேவன் கடந்த வாரம் தனது மகனுக்குத் திருமணம் செய்து வைத்தார். இதனையொட்டி இவர் தனது இல்லத்தில் வைத்து உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 10 வறிய குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்கூடுகளை வழங்கியுள்ளார்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை, பொருளாதார மேம்பாட்டை உயர்த்தும் நோக்குடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமுர்த்தி அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வர்த்தகரின் இச்செயல் ஏனைய வர்த்தகர்களுக்கு ஒரு முன்மாதிரியாக உள்ளதாக நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் கூறினர். (த-6-45)

# பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளை கிழக்கு மாகாணத்தில் விஸ்தரிப்பதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம்,செப்.11

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம், விரிவாக்கல் உத்தியோகத்தர் கா.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கடந்த மாதம் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்து சபையினால் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ள விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்த பனை அபிவிருத்தி சபையின் தலைவர், அந்த மாவட்டங்களிலுள்ள சபையின் காரியாலயப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார். அத்துடன் கிழக்கு மாகாண விவசாயக் கால்நடை அபிவிருத்தி அமைச்சருடனும் சந்தித்துப் பேசினார்.

பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளை விஸ்தரித்தல், பனம் கைப்பணி உற்பத்தியாளர்களின் தேவைகள் உள்ளிட்ட விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் பனங்கைப்பணி உற்பத்தி வடிவமைப்பு, நடமாடும் நவீன விற்பனை நிலையம், உற்பத்திகளை நவீனப்படுத்தல் ஆகியவற்றை உடனடியாகக் கிழக்கு மாகாணத்தில் செயற்படுத்துவது எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இக்குழுவினர் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள வீரவில பனம் பண்ணைக்குரிய நிலத்தைப் பார்வையிட்டதுடன் அங்கு பனம் நடுகைக்கும், ஊடுபயிர்கள் மேற்கொள்வதற்குமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். (த-14)

# குடும்பஸ்தரின் கண்ணை பதம் பார்த்தது கிளுவை முள்

தென்மராட்சி ,செப்.11

கிளுவைக் கதியால் முள் கண்ணில் குத்தியதில் குடும்பஸ்தருக்கு கண்பார்வை பறிபோகும் அபாயநிலை காணப்படுகின்றது.

முள்ளு கிளுவைக் கதியால் வெட்டிய போது அது திடீரெனச் சாய்ந்து முள் கண்ணில் குத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 8 ஆம் திகதி பளை மசாரில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ஜெயசிங்கம் (வயது- 46) என்பவர் கண்ணில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-207)

# கல்வயலில் 96 விவசாயிகளுக்கு இலங்கை வங்கி நெற்செய்கைக் கடன்

தென்மராட்சி,செப்.11

கல்வயல் கமக்கார அமைப்பைச் சேர்ந்த 96 நெற்செய்கையாளர்களுக்கு நெற்செய்கைக் கடன் வழங்கப்படவுள்ளது.

நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல் பரப்பளவுக்கேற்ப 25 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சம் ரூபா வரை கடன் வழங்கப்படவுள்ளது.

சாவகச்சேரி பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி எஸ்.ஜெகதீஸ்வரியின் ஏற்பாட்டில் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ்.சந்திரகுமார் கடன்களை வழங்கவுள்ள தாக அமைப்பின் செயலாளர் கா.வேத நாயகம் தெரிவித்தார்.

இதேவேளை காலபோக நெற்செய்கைக்கான உர மானியப் படிவங்களை இது வரை சமர்ப்பிக்காதவர்கள் அதனைப் பூர்த்தி செய்து நாளை கையளிக்குமாறும் அறிவித்துள்ளார். (த-207)

# யாழ். இந்து பழைய மாணவரின் 'அன்னையின் மடியில்' மாநாடு

யாழ்ப்பாணம் ,செப்.11

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் 'அன்னையின் மடியில்' என்னும் முதலாவது சர்வதேச பழைய மாணவர் மாநாடு இரு அமர்வுகளாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத் தலைவர் கப்டன் நா. சோமசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பழைய மாணவர் சங்க உப தலைவருமான ஈ.சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

காலை அமர்வில் விருந்தினர்கள் உரைகளும் கல்லூரியின் வளர்ச்சியை நோக்காகக் கொண்ட செயற்றிட்டங்கள் பற்றிய கலந்துரையாலும் இடம்பெறும்.

மாலை அமர்வு பி.ப 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா தலைமையில் நடைபெறும். இதில் பழைய மாணவர் சங்கங்களின் சர்வதேச ஒன்றியம் அமைப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்படும்.

இதில் சகல பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறும், பழைய மாணவர் அங்கத்துவம் பெற்றிருக்க வேண்டிய தேவை இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

# கற்றல் உபகரணங்களும் தொலைக்காட்சியும் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் ,செப்.11

அராலிப் பிரதேச பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், கோட்டைக்காடு கிராமிய வைத்திய சாலைக்கு வர்ண தொலைக்காட்சியும் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுகளை சர்வதேச அனர்த்த உதவி நிறுவனமும் சுயாதீன மனித உரிமைப் பணியகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ஆலோசனைச் சபையைச் சேர்ந்தவரும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவின் இணைப்பதிகாரியுமான கலாநிதி ஜி.வி. ரி.திலகசிறி கலந்துகொள்ளவுள்ளார். (த-6 )

# இலவசப் பாடநூல்களில் ஒரு தொகுதி வந்து சேர்ந்தது

பருத்தித்துறை,செப்.11

யாழ். குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டு விநியோகிப்பதற்கான இலவசப் பாடநூல்களின் ஒரு தொகுதி கொழும்பிலிருந்து லொறிகள் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட த்திலுள்ள கோட்டக் கல்வி அலுவலங்களுக்கு நேரடியாகவே இப்பாடநூல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான இலவச பாடநூல்களின் ஒரு தொகுதி கடந்த வியாழக்கிழமை வந்து சேர்ந்துள்ளது. அடுத்த வாரம் அப் பாடநூல்கள் பாடசாலைகளுக்கு பகிர்ந்து வழங்கப்படவுள்ளதாக பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் தெரிவித்தார். (த-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவிலிருந்து இலங்கையர் நாடு கடத்தப்படும் சூழ்நிலை

கொழும்பு, செப். 11

கனடாவிலிருந்து இலங்கையர் ஒருவர் நாடுகடத்தப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இருந்து சென்று அகதி அந்தஸ்து கோரிய நிலையில் கடந்த 2005 ஆம் ஆண்டு இவர் கனடாவுக்குச் சென்றார்.

எனினும் இவருக்கு கனடா அரசு அகதி அந்தஸ்துக் கொடுக்க மறுத்தது. இந்த நிலையில், 2009 ஆம் ஆண்டு நைய்கரா நீர்வீழ்ச்சியின் ஊடாக இவர் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்.

அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையிலான உடன்படிக்கையின் அடிப்படையில், அமெரிக்கா அவரை ஏற்றுகொள்ளவில்லை. இதனடிப்படையில் இவர் மீண்டும் கனடாவுக்குத் திருப்பியனுப்பப்பட்டார்.

இந்த நிலையில் இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் வழக்குத் தொடுக்கப்பட்டது. கனேடிய நீதிமன்றம் இவரின் அகதிக் கோரிக்கையை கடந்த முதலாம் திகதி நிராகரித்துள்ளது.

இதையடுத்து அவர் எதிர்வரும் வாரங்களில் நாடு கடத்தப்படலாம் எனக் கனேடிய தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)


ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 680 திகதி 09-09-2010

வெற்றி எண்கள்

10 11 27 36 X (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 13,572,460/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 13,572,460/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 17 | 2,000/= | 34,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 390 | 1,000/= | 390,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 621 | 1,000/= | 621,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15626 | 60/= | 937,560/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7484 | 40/= | 299,360/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 185518 | 20/= | 3,710,360/= |
| | | மொத்தம் | ரூ. 6,792,280/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கண்டி | 700354086-5-05 |
| அம்பாறை | 700349343-2-22 |
| மாத்தறை | 700341950-5-45 |
| மொணராகலை | 700340167-4-04 |
| கேகாலை | 700354166-2-22 |
| குருநாகல் | 700341517-8-38 |
| புத்தளம் | 700341244-1-31 |
| இரத்தினபுரி | 700348709-8-38 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,192,280/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 14,074,240/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 செப்டம்பர் 13 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02

தொ.பே: 2333546/7


## 'ஞானச்சுடர்' வெளிவந்துவிட்டது

யாழ்ப்பாணம், செப். 10

சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' ஆவணி மாத இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் அகவை 1000 காணும் தஞ்சைப் பெருங்கோயில், ஆற்றங்கரையான் அருள்பெற்ற வெளிநாட்டுத் துறவிகள், சிவபெருமான் தூது சென்றமை, வேண்டுதல்கள், பேராசை வேண்டாம், தர்ம சங்கடம் தர்மமும் பெருவாழ்வும் எனப் பல ஆக்கங்களுடன் வழமையான ஆன்மீகத் தொடர்களையும் தாங்கி வெளிவந்துள்ளது. (த-6)


உ

சிவமயம்

உத்துவாக முகூர்த்த மாங்கலயதாரண அழைப்பு

பேரன்புடையீர்!

சர்வமங்களம் பொருந்திய விகிர்தி வருடம் ஆவணித்திங்கள் 27ஆம் நாள் (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8.10 மணிமுதல் 10 மணிவரையுள்ள வளர்பிறைப் பஞ்சமித் திதியும், சுவாதி நட்சத்திரமும், சித்தயோகமும், துலா லக்னமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

வல்வை சிவன் தேவஸ்தானம் சிவஸ்ரீ. நீலகண்ட பரமேஸ்வரக்குருக்களின் பௌத்திரனும் சித்தங்கேணி பிரம்மஸ்ரீ சோமசுந்தரஐயரின் தௌகித்தரனும் மனோகரக்குருக்கள் கௌரிபாலா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனுமான திருநிறைசெல்வன்

பிரம்மஸ்ரீ பிரதாப சர்மா

அவர்களுக்கு



திருமலை வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தானம் சிவஸ்ரீ பூர்ண சிவசுப்பிரமணியக்குருக்களின் பௌத்திரியும் நயினை, சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்களின் தௌகித்திரியும் பிரபாகரேஸ்வரசர்மா சாருகேசி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியுமான சௌபாக்கியவதி

பிரியங்கா

அவர்களை

கன்னிகாதான மாங்கல்யதாரணம் பாணிக்கிரகண விவாகம் செய்வதற்கு வல்வை ஸ்ரீ வாலாம்பிகை உடனுறை வைத்தீஸ்வரப் பெருமான், திருமலை வில்லூன்றி முருகப் பெருமான் திருவருள் துணையுடன், வல்வை சிவன் தேவஸ்தான எமது இல்லத்தில் இனிதே நிறைவேறப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்கள் சகல செல்வங்களுடனும் வாழ வாழ்த்தி ஆசிகூறிச் சபையைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: 12.09.2010 ஞாயிறு அதிகாலை 6 மணி - மணமகன் இல்லத்தில்

உத்துவாகசுபமுகூர்த்தகுரு: முத்தமிழ்க்குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் - சுன்னாகம்

தங்கள் நல்வரவை இனிதே நலமுடன் விரும்பும்

சிவஸ்ரீ.பரமேஸ்வர மனோகரக்குருக்கள் கௌரிபாலா குடும்பத்தினர்.

இந்துமத குருபீடாதிபதி, சிவன் தேவஸ்தானம், வல்வை.

(இரு வீட்டார் அழைப்பு)


# முழுமுதற் கடவுள் விநாயகருக்கான முக்கிய விரதம் ஆவணிச் சதுர்த்தி.

*விநாயக சதுர்த்தி விரதம் இன்று (11.09.2010) சனிக்கிழமை இந்து மதத்தவர்களால் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. இலங்கையில் மட்டுமன்றி, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் வாழும் இந்து மதத்தினராலும் விநாயக சதுர்த்தி பல்வேறு வடிவங்களில் கொண்டாடப்படுகின்றது. மதங்கள் பல வாயினும் இறைவன் ஒருவனே என்ற கோட்பாட்டுடன் இயங்கும் புட்டபர்த்தி ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் பிரசாந்தி நிலையத்திலும் இப்பண்டிகை விமரிசையாகக் கொண்டாடப்படுவது வழக்கம். விநாயக சதுர்த்தியை முன்னிட்டு இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகின்றது.*



இந்து மத வழிபாட்டில் விநாயகப்பெருமான் முழுமுதற் கடவுளாகக் கொள்ளப்படுகின்றார். பிள்ளையார், தும்பிக்கையான், கணபதி, ஆனைமுகத்தோன், விக்னேஸ்வரன், போன்று வேறும்பல பெயர்களால் சுட்டப்படும் விநாயகப்பெருமானுக்கு உகந்த விரதம் சதுர்த்தி விரதம் ஆகும். மாதாமாதம் சதுர்த்தித்திதி வருகின்றபோதிலும், ஆவணி மாதத்துச் சதுர்த்தியே இவற்றுள் தலையானதாகக்கொள்ளப்படுகின்றது.

விநாயகசதுர்த்தி இந்துக்களால் மிகச்சிறப்பான முறையில் கடைக்கொள்ளப்படும் ஒரு முக்கிய விரதமாகும். விநாயகர் பிரபஞ்சத்தின் முழுமுதற் தெய்வம். அவர் ஓம் என்னும் பிரணவ ரூபன். அத்தகைய சிறப்புக்கள் பெற்ற விநாயகரைத் துதிக்க வாய்ப்புக் கிட்டுவது எமது பூர்வீக புண்ணியமே.

இனம், மதம், தேசம் என்ற வேறுபாடேது மின்றி எவரும் விநாயகரை வழிபடலாம். கல்வி, சித்தி, புத்தி என்பவற்றை எமக்கு அருள்பவர் விநாயகரே. இதனாலேயே அவர் சித்திவிநாயகர் எனவும் போற்றப்படுகின்றார்.

இந்தியாவில் குழந்தைகள், மாணவர்கள், பெரியவர்கள் என்ற வேறுபாடேதுமின்றி பல தரப்பினரும் விநாயகர் சதுர்த்தியை மிகச்சிறந்த முறையில் கொண்டாடுகின்றனர். அது அனைவருக்கும் ஒரு மகிழ்வளிக்கும் ஒரு பண்டிகையாக அமைகின்றது.

பெரியவர்கள், மாணவர்கள் விநாயகரின் உருவத்தை களிமண்ணினால் விக்கிரகமாகச்செய்து, அவற்றை அழகுபடுத்தி, பின்னர் அழகாக அலங்கரிக்கப்பட்ட தேர்களில் வைத்து ஊர்வலமாகக்கொண்டு சென்று பொங்கிப் பாயும் ஆற்றில் விநாயகரின் மண் விக்கிரகத்தைப் பக்திபூர்வமாகக் கரைப்பார்கள். இந்தப் பண்டிகையின் உட்பொருள், விநாயகர் மண் உருவத்தை நீரில் கரைத்தவுடன் அது நீரில் கலந்து எங்கும் பரவகின்றது. சிலை வடிவில் வழிபட்ட விநாயகர் நீரில் கரைந்தவுடன் அவர் அவரது சர்வ வியாபகத் தன்மையை எமக்கு புரிய வைக்கின்றார் என்பதாகும்.

எமது வாழ்க்கையின் அனைத்து வகையான முன்னேற்றங்களுக்கும் விநாயகக் கடவுளே மூலதாரமாகத் திகழ்கின்றார். அனைத்து உயிரினங்களின் வாழ்வு மற்றும் விதியினை கட்டுப்படுத்துபவரும் அவரே. பிரபஞ்சம் முழுவதும் அவராலேயே வழிநடத்தப்படுகின்றது.

விநாயகருக்கு படைக்கப்படும் உணவு வகை மிகப் புனிதமானதும் சுத்தமானதும் ஆகும். அதில் எண்ணெய் சிறிதளவும் சேர்க்கப்படுவது இல்லை. ஒன்பது வகையான தானியங்களை நீரில் ஊறவைத்து அரைத்து பின்னர் அதனைக்கொண்டு மோதகங்களாக உருவாக்குகின்றார்கள். அவை ஆவியில் வேகவைக்கப்படுகின்றன. இதுவே விநாயகருக்கு படைக்கப்படுகின்றது. எண்ணெய் இல்லாது ஆவியிலேயே வேக வைக்கப்படுவதால் அது ஆரோக்கியமானதும்,எளிமையானதும், சமைக்க எளிதானதும் ஆகும்.

**து.பத்மநாதன்**

*சாயி நிலையம், கொக்குவில்.*

விநாயகக் கடவுள் பெருத்த வயிறு கொண்டவராகச் சித்தரிக்கப்படுகின்றார். பல்வேறு வகையான உணவுப் பண்டங்கள் அவருக்கு படைக்கப்பட்டாலும் மக்களது பக்தியே அவருக்கு ஊட்டச்சத்து. தெய்வீகத்தின் இயல்பு என்றும் கொடுப்பதே அல்லாமல் தமது பக்தர்களிடம் இருந்து பதிலுக்கு எதனையும் பெற்றுக்கொள்வது அல்ல.

எந்தவொரு சிறிய பணியினைத் தொடங்கும்போதும் முதலில் விநாயகக் கடவுளை வழிபட்டு அப்பணியைத் தொடங்குவது இந்துக்களின் பாரம்பரிய வழக்கமாகும். இசை வல்லுநர்கள் கூட முதலில் விநாயக்கடவுளுக்கு பிரர்த்தனைக் கீதம் பாடிய பின்னரே தமது இசை நிகழ்ச்சிகளைத் தொடங்குகின்றனர். மாணவர்கள் கூட முதலில் விநாயகருக்கு வணக்கம் தெரிவிக்கும் வகையிலான பஜனைப் பாடலுடனேயே தமது பஜனையை ஆரம்பிக்கின்றனர்.

எனவே விநாயகரே சர்வவியாபகத் தன்மை கொண்டவர் என்பது தெளிவாகின்றது. அவரே முற்றுக்கும் மூலதாரம் ஆகிறார். சித்தி, புத்தி, கல்வி இவற்றைத் தம்மை வழிபடுவோருக்கு வழங்கி அருள்பவர் விநாயகரே. இவை மனித வாழ்வுக்கு முக்கியமானவை. விநாயக சதுர்த்திப் பண்டிகை விநாயப் பெருமானின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

விநாயக சதுர்த்தி போன்ற விரதம், பண்டிகை என்பன எமது ஆன்மீக ஈடேற்றத்துக்கு வழிசெய்கின்றது.


வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 834 திகதி: 09.09.2010

ஆங்கில எழுத்து: U | வெற்றி இலக்கங்கள்: 05 14 38 51 | போனஸ் இல: 21

| கூட்டு | | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 19,329,454.50 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 294 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14853 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 208293 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 31284 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.

8,264,840.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை

19,687,175.50

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய ... பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள ... கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை

234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360, 2433631 இணையம்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிராமவாசிகள் தேயிலைக் கொழுந்து திருடினால் முகாமைத்துவம் அசட்டை செய்வது எதற்காக?

## பதுளை தேயிலைத் தொழிலாளர் விசனம்

பதுளை,செப். 11

கிராமவாசிகளால் திருட்டுத் தனமாகப் பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்து தொடர்பாக, தோட்ட முகாமைத்துவத்துக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், தோட்ட முகாமைத்துவம் அதுபற்றிக் கவனம் செலுத்தாமல் இருப்பது குறித்து, தோட்டத் தொழிலாளர்கள் பலத்த விசனத்தைத் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாகத் தோட்டத் தொழிலாளர்கள், மலையக மக்கள் முன்னணியின் உப தலைவரும், ஊவா மாகாண சபை உறுப்பினருமான அ.அரவிந்குமாரிடம் முறையிட்டுள்ளனர்.

பதுளைப் பகுதியின் செரண்டிப் பெருந் தோட்டத்தில் மேற்படிச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

செரண்டிப் தோட்டத்திற்கருகாமையில் உள்ள கிராமத்தில் சிலர், தோட்டத்திற்குள் புகுந்து திருட்டுத் தனமாக தேயிலைக் கொழுந்துகளைப் பறித்து, உரப்பைகளில் போட்டுக் கொண்டிருந்தனர்.

அவ்வழியாக வந்த தோட்டத் தொழிலாளர்கள் இதனைக் கண்டு, உரப்பையைப் பறித்ததுடன், திருட்டுத்தனமாகத் தேயிலைக் கொழுந்தைப் பறித்த நபரையும் பிடித்து, தோட்ட முகாமைத்துவத்திடம் ஒப்படைத்தனர்.

தோட்ட முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. திருட்டுத்தனமாக பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்தின் எடை 87 கிலோகிராமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களினால் தோட்ட முகாமைத்துவத்திடம் ஒப்படைக்கப்பட்ட தேயிலைக் கொழுந்தை திருட்டுத்தனமாகப் பறித்த நபரும், வீடு செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

தொழிலாளர்களினால் ஒப்படைக்கப்பட்ட 87 கிலோ கிராம் எடையுடைய தேயிலைக்கொழுந்து மூடையைக் கூட தோட்ட முகாமைத்துவம் பொறுப்பேற்கவில்லை.

தோட்டத் தொழிலாளர்களினால் திருட்டுத்தனமாகப் பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்து மூடையுடன் கிராமவாசி ஒருவர் பிடிபட்டதும், கொழுந்து பறித்துக் கொண்டிருந்த ஏனைய கிராமவாசிகள் தப்பியோடிவிட்டனர்.

ஒரு கிலோ தேயிலைக் கொழுந்தைத் தோட்டத் தொழிலாளி ஒருவர் திருட்டுத்தனமாகப் பறித்தாரேயானால், அத்தொழிலாளியைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்து, அவருக் கெதிராகத் தோட்ட முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கும்.

ஆனால், கிராமவாசிகளுக்கு தமது அனுதாபத்தையும், ஆசீர்வாதத்தையும் தெரிவித்து வருவது விசனத்திற்குரியதேயென்று ஊவா மாகாண சபை உறுப்பினர் அ. அரவிந்குமார் தெரிவித்தார். (ளி)

# ம. மாகாண பாடசாலைகளுக்கு 1184 ஆசிரிய நியமனங்கள்

கண்டி, செப்.11

மத்திய மாகாணப் பாடசாலைகளுக்காக கடந்த வருடம் 1184 ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தேசிய கல்வியியல்க் கல்லூரி டிப்ளோமா பாடநெறியை முடித்தவர்கள் 302 பேருக்கும், பட்டதாரிகளாக வெளியேறிய 259 பேருக்கும், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் 587 பேருக்கும் அமைச்சின் மாற்றத்தோடு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவித்த மத்திய மாகாண முதலமைச்சர், வெகுவிரைவில் பட்டதாரி ஆசிரியர் நியமனங்களும் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவித்தார். (ளி)




# காதலியை காதலன் குத்தியபோது குறுக்கிட்ட தாய் பரிதாப மரணம்

கொழும்பு, செப். 11

திருமணத்துக்கு தனது காதலி சம்மதிக்காததையடுத்து கோபாவேசமுற்ற காதலன் அவரைக் கத்தியால் குத்த முயன்றார். இடையில் குறுக்கிட்ட காதலனின் தாய் கத்திக்குத்துக்கு இலக்காகி மரணமானார்.

இச்சம்பவம் புத்தலயில் இடம்பெற்றுள்ளது.

புத்தல ஊவா பெல்வத்த, குடா ஓயா கல்கொடயாயப் பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதான சந்திரவாதி எனும் மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு பரிதாப மரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளார்.

மரணமான பெண்ணும் அவரது மகனும், அவரது காதலியெனக் கருதப்படும் யுவதியும் புத்தல உணவகமொன்றில் பணிபுரிந்து வந்தவர்களாவர்.

குறிப்பிட்ட யுவதி ஏற்கனவே இராணுவ சிப்பாயொருவரை திருமணம் செய்து அதன்பின் அவரைப் பிரிந்து தனியாக வாழ்ந்து வந்துள்ளார்.

தனது தாயின் முன்னிலையில் குறிப்பிட்ட யுவதிதன்னைஇரண்டாவதுதிருமணம்செய்து கொள்ள விருப்பமா என மகன் கேட்டுள்ளார்.

அதற்கு யுவதி இணக்கம் தெரிவிக்காததால் கோபமுற்ற வாலிபன் அருகிலிருந்த கத்தியை எடுத்து யுவதியை குத்த முயன்றுள்ளார்.

விபரீதத்தைத் தடுப்பதற்காக இருவருக்கு மிடையில் புகுந்த தாய் கத்திக்குத்துக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

புத்தல பொலிஸார் வாலி பனைக் கைது செய்துள்ளனர். அத்துடன் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

# ஓய்வுபெற்ற அரச ஊழியர் தங்கியிருக்க விடுமுறை விடுதி

## ரம்பொடையில் நிறுவத் திட்டம்

நுவரெலியா, செப்.11

அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கான விடுமுறை விடுதி யொன்றை நுவரெலியா ரம்பொடைப் பிரதேசத்தில் நிர்மாணிக்க அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இரண்டு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த விடுமுறை விடுதிக்கான அடிக்கல் ஏற்கனவே நடப்பட்டுவிட்டது. நிர்மாணப் பணிகள் அடுத்த வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படும் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கான முத லாவது விடுமுறை விடுதி களனி பொல்ஹேன பிரதேசத்தில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரம்பொடை விடுதி இரண்டாவதாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஓய்வு பெற்றுள்ள சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் அரச ஊழியர்கள் இந்த விடுமுறை விடுதிகளில் தங்கி தமது விடுமுறைகளை ஆனந்தமாகக் கழிக்கும் வாய்ப்பைப் பெறுவரென அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

நுவரெலியா ரம்பொடையில் அமைக்கப்படவுள்ள இந்தப் புதிய விடுமுறை விடுதியில் ஓய்வுபெற்ற அரச அதிகாரிகளும், அவர்களின் குடும்பத்தினரும் தங்கிச் செல்ல அனுமதிக்கப்படுவர் என ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கே.ஏ.திலகரத்ன தெரிவித்தார். (ளி)

# டெங்குநோய் பரவுவதைத் தடுப்பதற்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம்

## அட்டாளைச்சேனைப் பிரதேச செயலர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப்.11

"தேசிய ரீதியில் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள டெங்குநோய் பரவுவதைத் தடுப்பதற்காகச் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இதில் முக்கிய பொறுப்பு கிராமமட்டத்தில் செயற்பட்டு வரும் சமூக பிரதிநிதிகளுக்கு உள்ளது."

- இவ்வாறு அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர் தெரிவித்தார்.

கிராம மட்டத்திலிருந்து டெங்கு பரவுவதை ஒழிப்பதற்காக அட்டாளைச் சேனைப் பிரதேச டெங்கு ஒழிப்பு பிரதேச மட்டக்குழு அமைக்கும் கூட்டம் கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அதற்குத் தலைமைதாங்கி உரையாற்றும்போதே பிரதேச செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

டெங்கு நோயானது நாட்டில் சகல பாகங்களிலும் மிகவும் வேகமாகப் பரவி வருகிறது. அரசு டெங்குநோய் ஒழிப்புக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளது. அரச காரியாலயங்கள் குறிப்பாகப் பாடசாலைகளிலும் வீடுகளிலும் வாரத்தின் ஒரு நாளில் துப்புரவு செய்யுமாறு கண்டிப்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் பல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சிரமதானம் மூலம் மக்களின் பங்களிப்புடன் துப்புரவு செய்யப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளை வீடுகளிலும், வீதிகளிலும் ஏற்படுத்தி சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதற்காகக் கிராமமட்டக்குழுக்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றும் பிரதேச செயலாளர் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பறூஸா நக்பர், அட்டாளைச் சேனை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.எம். சரீப் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (ளி)

# திருகோணமலை நகரத்தில் ஒளிராத மின் விளக்குகள்

திருகோணமலை, செப்.11

திருகோணமலை நகரப் பகுதியிலுள்ள சில வீதிகளில் மின் விளக்குகள் ஒளிராமல் இருக்கின்றன. இதனால் இரவு நேரங்களில் தாங்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் எனப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே திருகோணமலை நகரப் பகுதிக்குள் உள்ள சில இடங்களில் ஒளிராமல் இருக்கும் தெருமின் விளக்குகளைத் திருத்தியமைக்குமாறு பிரதேச மக்கள் திருகோணமலை மின்சார சபையிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ளி)




# தேசிய தொழில்நுட்ப படவரைஞர் பாடநெறி கணனி வடிவமைப்புப் பாடம் கற்பிக்கப்படவில்லை

## மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விசனம்

மட்டக்களப்பு, செப்.11

"இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட தேசிய தொழில்நுட்பப் படவரைஞர் பாடநெறிக்கு பாடம் ஆரம்பிக்கப்பட்டு 8மாதங்களாகியும் இதுவரையில் தன்னியக்க கணினி வடிவமைப்புப் பாடம் கற்பிக்கப்படவில்லை."

- இவ்வாறு மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தேசிய தொழில்நுட்ப குடிசார் பொறியியல், தேசிய தொழில்சார் கணனி அளவையியல் போன்ற பாடங்களும், அளத்தல் மட்ட உபகரணமும் இல்லாமையினால் செயன்முறைப் பாடநெறிகளும் கற்பிக்கப்படவில்லை என மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து மிகுதியாக எஞ்சியுள்ள காலத்திலாவது கற்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ளி)

# வறுமையில் வாழும் மூவினத்தவருக்கும் அம்பாறையில் மானிய நிதி உதவிகள்

அம்பாறை, செப். 11

அம்பாறை மாவட்டத்தில் யுத்தத்தாலும், இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துவரும் மூவினத்தையும் சேர்ந்த குடும்பங்களுக்கு வீடமைப்பு, குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்துவதற்காக மானிய அடிப்படையில் நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பும் நிர்மாண அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. இதற்கமைவாக 'வீடமைப்பும் மற்றும் நீர் வழங்கல் விழா - 2010' கடந்த திங்கட் கிழமை மாலை 1.30 மணிக்கு அட்டாளைச் சேனை தேசிய கல்விக்கல்லூரியில் மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப் பையின் தலைமையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்திலிருந்து முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம், தமிழ், சிங்களம் ஆகிய இனங்களைச் சேர்ந்த 89குடும்பங்களுக்கு வீடமைப்பு, குடிதண்ணீர் கிணறு ஆகியவற்றை அமைப்பதற்கான காசோலைகள் வழங்கப்பட்டன. வீடொன்றை அமைப்பதற்கு 3,25,000 ரூபாவும், குடிதண்ணீர் கிணறு அமைப்பதற்கு 1,00,000 ரூபா வீதமும் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா கலந்துகொண்டார். மேலும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க, மாகாணசபை உறுப்பினர்களான எம்.எல்.ஏ. அமீர், எஸ்.புஷ்பராசா, எஸ்.செல்வராசா, தேவபெரும, அமைச்சின் உதவிச் செயலாளர் எம்.ஐ.சலாஹுதீன், மக்கள் தொடர்பு அதிகாரி வை.எல்.ஹபீப் முஹம்மட், அம்பாறை மாவட்ட நெக்டெப் பிரதிப் பணிப்பாளர் ஐ.எல்.தௌபீக், பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர், வீடமைப்பு அமைச்சரின் பொதுசன தொடர்பு அதிகாரி எம்.எஸ்.எம். ஜஃபர் உட்பட உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் பொதுமக்களால் கைவிடப்பட்டு இனங்காணப்பட்ட வாகனங்களின் இலக்கங்கள்

கிளிநொச்சி,செப்.11

கடந்த 22 ஆம், 23 ஆம் திகதிகளில் மோட்டார் வாகனப்பகுதி பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்டு உரிமையாளர் கள் இனம் காணப்பட்ட 308 மோட்டார் சைக்கிள்களும், 7 ஏனைய வாகனங்களும் உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களை ஒப்படைத்து இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

HY-9292, NPJZ-7882, MQ-7408 500-6269, NPGE 4970, 500-1104, NPGN-4233, NPJM-0515, 155-9024, 112-5853, GN-0255, 107-7718, 139-4017, NPGL-5691, NPHE-7325, 151-4741, GM-0613, NPHR-1899, MI-4353, NPHI-6551, 116-3897, 135-6160, 144-8989, 502-0134, 150-9495, 154-0903, 135-7846, JD-2256.

NPEM-0523, NWGT-6544, JN-6192, JP-2102, 146-5181, HP-9522, 500-2502, 158-9386, NPEY-1050, JE-0456, 160-2904, MP-0731, MB-2364, 136-1204, Hy-5594, HX-3287, MM-4191, 147-2200, 131-2381, NPJD-8126, HH-5671, 116-1046, 155-7383, JB-8829, HP-9303, 136-6751, 124-5223.

JI-3155, HO-8352, NPHK-0647, 160-1205, 148-3002, NPMC-3100, 137-2677, 106-2380, 156-8449, GC-6504, TD-9553, NPMC-7440, NPTL-4780, 116-4587, MC-7059, 151-2392, MD-8618, GN-7431, 14-8692, 154-0442, NPHC-3137, 146-7047, 155-6092, 148-5009, 502-0298, 131-9951, 137-8720, HJ-1504, MK-9609, NPTS-8207, NPHD-3812, 134-6605.

500-3474, HA-6145, 154-9579, 129-5431, WPGY-4176, GN-4227, 104-7251, 159-2597, GG-3284, GN-1153, 148-9632, 151-9271, NPHZ-2861, 143-8789, NPJO-6172, 152-1245,MF-3479, 144-4077, 146-6515, JN-7759, 151-9914, 153-8817, 502-0555, MA-4736, 500-2648, NPGI-7999, NPJC-5304, MF-1756.

159-4231, 112-8903, HX-1926, MH-8516, 134-2512, GP-0180, NPME-7604, NPGY-9740, MG-4436, HV-5628, JY-8577, NPHE-9677, HH-6260, NPJU-7651, NPHX-3427, NPMC-3025, NPHU-5682, NPHA-5923, NPJZ-5355, 154-3133, 142-5918, NPGQ-1117, WPJY-5989, JT-8178, MB-1261, MA-6323, 147-4084, MC-9115.

NPJP-2880, JF-2288, JK-9828, WPJD-9260, 146-9132, UB-0398, TL-4956, 500-460, MI-6240, NPHF-8314, GA-2233, TY-6956, NPMU-9492, HI-6644, NPGL-9025, JD-2853, EPHI-0448, NPMI-1443, 139-2289, NPME-7245, NPGN-9705, 136-4618, NPJL-6524, 133-3330, HM-0997, GP-3915, 96-9440, NPHW-1584, HC-3251, GY-9767, 137-4308, NPGO-8465, NPJQ-3500, 149-3563, JZ-6689, WPHJ-4892, NPJN-0629.

NPJS-3140 HH-1672, 502-0487, NPJZ-9514, NPJT 9259, NWJN 0202, NPHV - 1242, MN-6791, MPME - 4229 130-9935, NPMR-4894, GR-9061, MI-2898, MQ-2721, 141-1971 137-2612, ML-9052, EPGY-8416, NPML-4964, HC-3554, NPJG-7413, NPTL-5054, NPJP-0146, NPHX-3806, NPJP-0005, NPGR-9076, JZ-7245, MG-5569, 130-1669, MT-6618, NPMC-3069.

MQ-8016, NPJK-5263, NPJP-0137,152-7772, GA-5929, GM-9944, 112-7406, 105-8784, 122-1952, 500-5866, HY-6138, MB-0078, MS-1032, GP-4426, HS-0020, GJ-2683, 5020931, HM-1015,500-3492,8-4036,81-5288, 146-5623, NPHI-6555, NPGO-0713, 113-6727, 500-0980, 154-1360, JA-5267, JZ-6687, NPHP-9217, NPGQ-2331, 154-1568, NPMN-2949, 153-8987, 149-6590, NPME-0125, 144-4043, NPMP-5867, 151-8460, EPHA-3778,.

500-9689, 141 - 1484, 134 - 7301, MP-0719, GN-9751, 500-1154, MQ-2685, UB-0191, 112-5525, 102-7065, NPJZ-3319, HW-1588, NPHJ-3829, NPGO-4336, NPMC-6703, NPJM-9873, NPJL-7638, 157-0006, NPMX-1440, NPGR-9079, NPHK-3983, NPJQ-8402, NPGZ-5010, NPGQ-9433, GO-3543, NPHY-2755, JO-6974, NPGJ-4565, HQ-8366, NPME-3557, HH-1670, NPHO-8433, NPME-8192, 157-9501, 86SR19947, 151-2286, HK-4278, GO-3594, HK-9282, GO-0834, HR-3135, GE-4971, JH-4119, 112-6467, MM-3986, 156-2314, GY-9921, 81-1161, JZ-3304, MF-3585, 134-4528, 156-5041, HG-0535, HJ-7906, HR-9961, GV-5761, NPJK-5297. (த)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கராத்தே குத்துச் சண்டை போட்டியில்
தங்கப்பதக்கம் பெற்ற வீரர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யோக சித்த வைத்தியர்களும்,
ரிலக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும்,
ஆதரவாளர்களும்.

கிராமக் கோட்டடி,
புலோலி.

## இன்று முதல் வல்வை மண்ணில் உன்னத வைத்திய சேவையில்...

## SHAAM PRIVATE HOSPITAL

SPH

## ஷாம் தனியார் மருத்துவமனை

**புதிய கிளை: வல்வெட்டி, வல்வெட்டித்துறை.** (கம்பர்மலைச் சந்திக்கு அருகில்)

தலைமையகம்
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

**தரமான வைத்திய சேவையில்........**

**MBBS வைத்தியர்களினால் வழங்கப்படும் வெளிநோயாளர் பிரிவு (OPD)**

- விசேட வைத்திய நிபுணர்களின் வைத்தியசேவை முன்பதிவுகள்
- கணனிமயப்படுத்தப்பட்ட வரவேற்பறை
- சிறு சத்திர சிகிச்சைகள்
- உள்ளக மருத்துவம்
- நவீன ஆய்வுகூட வசதியுடன் கூடிய சகல இரத்த, சகல பரிசோதனைகள்
- நவீன ஸ்கானிங் (Scanning), ECG வசதிகள்
- கர்பிணிகளுக்கான கிளினிக் வசதி
- சலரோக, உயர் குருதி அழுத்த நோயாளர்களுக்கான கிளினிக் வசதி
- சாரதி அனுமதிப்பத்திர மருத்துவச் சான்றிதழ்.



மேற்படி மருத்துவமனையானது தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகப்பெருமானதும், வியாபாரிமூலை இன்பர்சிட்டி ஸ்ரீ சக்திவிநாயகப் பெருமானதும் திருவருள் துணைகொண்டு சிவஸ்ரீ மகாகணபதி சிவானந்த ராஜாக்குருக்கள் அவர்களின் அருளாசியுடன் மற்றும் பெரியவர்களின் வாழ்த்துக்களுடனும் இன்று (11.09.2010) பிற்பகல் 3.10 மணியளவில் உள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

மருத்துவமனை நிர்வாகமும்,
ஊழியர்களும்.

T.P.NO:-0217200178


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள் கடன்







ஆண்டவன் உயிரினங்களைப் படைத்தார். அதன் பிறகு அந்த உயிரினங்களுக்கெல்லாம் ஆயுள் காலம் எவ்வளவு என்பதை முடிவு செய்ய வேண்டியிருந்தது.

''அனைத்து உயிரினங்களையும் சமமாகவே படைத்திருக்கிறேன். அப்படி இருக்கும் போது அவற்றின் ஆயுள் காலத்தில் வேறுபாடு எதற்காக? என்று நினைத்தார். எனவே எல்லா வற்றுக்கும் சராசரியாக முப்பது வயது என முடிவு செய்தார்.

நான்கு உயிரினங்களுக்கு மட்டும் இந்த முடிவில் திருப்தி எற்படவில்லை. அவை ஆண்டவனிடம் முறையிட விரும்பின.

முதலில் கழுதை வந்து நின்றது. ''ஆண்டவனே! நான் வாழ்நாள் முழுவதும் பொதி சுமந்து காலம் தள்ளவேண்டியவன். என் ஆயுள் முப்பது என்பது அதிகமாகத் தோன்றுகிறது. அதைக் கொஞ்சம் குறைத்தால் நல்லது''! என்றது.

ஆண்டவன் பார்த்தான் அதன் ஆயுளை 18 ஆண்டுகளாகக் குறைத்து விட்டார்.

அடுத்து நாய் வந்து நின்றது. ''ஆண்டவா! என் பிழைப்பே நாய்ப் பிழைப்பு! எனக்கு எதற்கு முப்பது வருடம்? என்று கேட்டது. ''சரி! உன் ஆயுளை 12 வருடங்களாகக் குறைத்து விடுகிறேன்'' என்றார் கடவுள்.

அடுத்து குரங்கு வந்து நின்றது. ''சுவாமி! எனது சேஷ்டைகள் எப்படிப்பட்டவை என்பதைத் தாங்கள் நான்றாக அறிவீர்கள் எப்பொழுதும் மரத்திலும் கிளையிலும் தொங்கிக் கொண்டிருக்கப் போகிறேன். எனக்கு எதற்கு முப்பது வருடம்?'' என்று கேட்டது. உடனே கடவுள் '' நீ சொல்வது நியாயம் தான்! உனது ஆயுள் 10 வருடங்கள் என்று முடிவு செய்தார் கடவுள்.

இறுதியாக மனிதன் வந்து நின்றான் கடவுே ள! எனக்கு முப்பது வருடம் போதாது. நான் இந்த உலகில் அனுபவிக்க வேண்டியது அதிகம். எனவே என் ஆயுளைக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுத்தால் நல்லது என்றான்.

கடவுள் யோசித்தார். கழுதையிடம் குறைத்த 12 வருடம் நாயிடம் குறைத்த 18 வருடம் குரங்கிடம் குறைத்தது 20 வருடம் ஆகிய அனைத்தையும் சேர்த்து மனிதனிடம் கொடுத்து விட்டார்.

பிரச்சினை தீர்ந்தது கடவுளுக்கு

மனிதனுக்கு பிரச்சினை ஆரம்பமாயிற்று ஆமாம்! அதன் பலனை இப்போது அனுபவிக்கிறான்.

ஆண்டவன் அவனுக்கென்று கொடுத்த முப்பது வருடங்கள் அவன் மகிழ்ச்சியாக வாழ்கிறான். அது அவனுக்கென்று விதிக்கப்பட்ட ஆயுள். அடுத்த 12 வருடம் கழுதையிடம் வாங்கியது. அதனால் கழுதை மாதிரி குடும்பபாரத்தைச் சுமக்கிறான்.

அடுத்த 18 வருடம் நாயிடமிருந்து வாங்கியது அவன் சொத்து சேர்ப்பதற்காக அல்லது சொத்தைக் காப்பதற்காக நாய் மாதிரி அலைகிறான்.

அடுத்த 20 வருடம் குரங்கிடமிருந்து வாங்கியது அந்த சமயத்தில் இவன் மரியாதை இழந்து யார் என்ன சொன்னாலும் அவர்கள் சொற்படி ஆடவேண்டிய கடமை.

அன்றைக்கு வாங்கிய ஆயுள் கடனை இன்றைக்கு இந்த விதமாகத் தீர்த்துக் கொள்கிறான் மனிதன். மேலே பார்த்தது மனித வாழ்க்கையைச் சித்தரிக்கும் கற்பனைக் கதை.

*கோ.சுவாமிநாதன்.*

# திரும்பி வருவது நல்லது

ஒரு பெரியவர் சொந்தமாக காணி நிறைய வைத்திருந்தார்.

அவருக்கு இரண்டு மகன்கள். பெரியவருக்கு விவசாயம் தான் தொழில். இரண்டு பிள்ளைகளுக்கும் இடையில் ஒரு சமயம் சண்டை வந்தது. மூத்தபிள்ளை அப்பாவுடன் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். இளையவன் சொத்தைப் பிரித்துக் கொண்டு தனியே போக வேண்டும் என்று ஆசை.

அப்பா சொத்துக்கள் அனைத்தையும் இரண்டாகப் பிரித்து இரண்டு பிள்ளைகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார்.

இளையவன் என்ன செய்தான் தெரியுமா? தனது பங்குச் சொத்துக்கள் அனைத்தையும் விற்று உல்லாசமாக ஊர் சுற்றினான். எல்லாப் பணத்தையும் செலவழித்து கடைசியில் பிச்சை எடுக்க ஆரம்பித்தான்.

ஒரு சமயம் இவன் பிச்சை எடுக்கும் போது அவனது அப்பாவுக்கு தெரிந்த ஒருவர். அறிவுரைகள் பல சொல்லி உன் அப்பாவிடம் சென்று மன்னிப்புக் கேட்டு அவருடனே ஒற்றுமையாக இருந்துகொள் என்று கூறிவிட்டு போய்விட்டார்.

அந்தப் பெரியவர் அவனது அப்பாவையும் சந்தித்து உன் மகன் வரப்போகிறான் அவனை மன்னித்து ஏற்றுக்கொள் என்று கேட்டுக் கொண்டார்.

அப்பாவும் சந்தோஷத்துடன் மகனை வரவேற்க நண்பர்கள் அனைவரையும் அழைத்து விருந்துக்கு ஏற்பாடு செய்தார்.

மூத்த மகனுக்கு இந்த விவரம் தெரியாது. அவன் வழமைபோல் தனது வேலைகளை முடித்துவிட்டு வீடு வரும் போது விவரம் அறிந்து தந்தையிடம் சென்று நியாயம் கேட்டான்.

அப்பா கூறினார். மக்னே நீ தவறான வழியில் போகாமல் சரியான பாதையில் போய்க் கொண்டு என்னுடனே இருக்கிறாய். உனது சகோதரன் தவறான வழியில் போய் பக்குவப்பட்டு இப்போது திருந்தி வருகிறான். அது மகிழ்ச்சியான விடயம் தானே. அது தான் சந்தோஷமாக வரவேற்கிறேன் - என்றார்.

சுகிசிவம்

# வீட்டில் பயன்படுத்தும் இலகு பரிகாரங்கள்

### இருமல்

- குழந்தைகளுக்கு இருமலை குணப்படுத்த 1கிராம் காயத்தை நீர் விட்டு கலக்கி 3 மணி நேரத்துக்கு ஒரு முறை கொடுக்கலாம்.
- கற்பூரவள்ளி இலையை வதக்கி சாறுபிழிந்து கோரோசனை மாத்திரையுடன் சேர்த்துக் குழந்தைகளுக்கு கொடுத்தால்இருமல் அடங்கும்.
- ஆடா தோடை இலையை ஆவியில் வாட்டிச் சாறு பிழிந்து எடுத்துக்கொள்ள வேண்டும். இச் சாற்றில் தேன் கலந்து ஒரு மணிக்கொரு தரம் 2 மேசைக்கரண்டி கொடுத்து வர இரத்தமுடன் சளி வெளி வருதல் நிற்கும்.
- மிளகு, கராம்பு ஆகிய இரண்டையும் வறுத்து தூள் செய்து வெற்றிலையில் வைத்து சாப்பிட்டால் இருமல் தீரும்.
- ஆடாதோடையின் வேரைக் கஷாயம் செய்து தேனுடன் கலந்து குடிக்கக் கொடுத்து வருவது இருமலைத் தணிக்கும்.
- மிளகுத்தூளும், பனைவெல்லமும் சம அளவாக கலந்து சுண்டக்காய் அளவு சாப்பிட்டால் சூட்டு இருமல் அடங்கும்.
- கற்பூரவள்ளி இலைச் சாற்றுடன் கற்கண்டு சேர்த்து குழந்தைகளுக்கு உண்டாகும் இருமலுக்கு 1 தேக்கரண்டி தினம் 2 வேளை கொடுக்கலாம்.
- விரலி மஞ்சளை விளக்கெண்ணை விளக்கிலே சுட்டு அதன் புகையை மூக்கினால் உறிஞ்சினால் நெஞ்சுச் சளி மாறும்.
- தேனும் தேசிப்பழச்சாறும் சமமாக கலந்து 1 மேசைக்கரண்டி அளவு காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் சளி மாறும்.
- பேரிச்சம்பழத்தை பாலில் வேக வைத்து வெறும் வயிற்றில் சாப்பிட்டால் இருமல் அகன்று விடும்.
- அப்போதே கறந்த பசுவின் பாலைக் காய்ச்சி 4 சிட்டிகை மஞ்சள்தூள் கலந்து காலை வேளையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் தீராத இருமலும் தீர்ந்து விடும்.
- அப்பிள் பழங்களை நாள் தோறும் வெறும் வயிற்றில் ஒரு வார காலம் சாப்பிட்டு வந்தால் வறட்டு இருமல் குணமாகி விடும்.
- அன்றாடம் அதிகாலை 5-10 கிராம் வரை உள்ள கருந்துளசி இலைகளை மென்று தின்றால் இருமல் குறையும்.

### தேகச்சூடு

- காலையில் 1 அல்லது $1\frac{1}{2}$ பலம் எடையுள்ள அன்று மலர்ந்த அகத்திப் பூவைச் சுத்த ஜலத்தில் அலம்பி பொடியாக அரிந்து வசம்படி பசுவின் பாலில் போட்டு வேக வைத்துச் சிறிது சக்கரை கூட்டிச் சாப்பிடுவது உண்டு. இப்படி 5 - 7 நாள்கள் சாப்பிட உட்காங்கை, பித்தம் தீரும். இன்னும் அகத்திப் பூவைச் சிறு துண்டுகளாக அரிந்து துவட்டலாக செய்து உபயோகிப்பதும் உண்டு.
- அகத்திக் கீரையை சுத்தம் செய்து வழக்கப்படி செய்கின்ற சாம்பாரில் இட்டு உண்பதுண்டு. அல்லது துவட்டலாகச் செய்து அன்னத்துடன் உபயோகிப்பதும் உண்டு.
- ஆவாரம் பூவை நன்றாய் அலம்பிப் பச்சைப் பயறுடன் கூட்டிப் பாகப்படி கூட்டமுது செய்து உண்பது வழக்கம். இதனால் பெரும்பாலும் குணமாகும்.
- கெக்கரிக்காய் மேற்றோல் சீவி சிறு துண்டுகளாக அரிந்துமிளகுடன் உப்புக் கலந்த பொடியில் சிறிது துவட்டிச் சாப்பிடலாம்.
- செம்பரத்தம் இலையை அரைத்து சிறு கொட்டைப் பாக்களவு பாலில் கலக்கி தினம் 2 வேளை 3 நாள் கொடுக்க உட்கொதிப்பு தீரும் .
- வேகவைத்த பலாப்பிஞ்சுடன் கடலைப் பருப்பு தேங்காய் சேர்த்து கூட்டமுதாகச் செய்து உபயோகப்படுத்துவதுண்டு.
- மணத் தக்காளி கீரையை துவரம் பருப்புடன் பச்சைப் பயறு கலந்து பாகப்படி கடைந்து உண்ண உட்சூடு, ஆசனக் கடுப்பு தணியும்.
- மணத் தக்காளி காயை நெய்விட்டு வதக்கி புளிகாரம் இட்ட குழம்பில் சேர்த்து தாளித்து உண்பதுண்டு.
- வில்வம் பூவை ஒருநாள் இரவு முழுவதும் நீரில் ஊற வைத்து அந்த நீரை குடிநீராக பயன்படுத்த உடற்சூடு தணியும்.
- செந்துளசிச் சாற்றை தனியா என்னும் கொத்தமல்லியுடன் கலந்து கஷாயமாக உட்கொண்டால் உடற்சூடு தணியும்.

தொகுப்பு : பு.நர்சிகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் துணுக்குகள்

- அளப்லெப்ஸ் என்ற மீனுக்கு இரண்டு கண்களில் நான்கு வெள்ளித்திரைகள் உண்டு.
- திரை அரங்குகளே இல்லாத நாடு பூட்டான்.
- உலகின் மிகப் பெரிய நூலகம் மாஸ் கோவில் உள்ள லெனின் நூலகம்.
- உலகிலேயே துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு ஸ்பெயின்.
- அஞ்சல் தலையில் தனது நாட்டின் பெயரைக் கொண்டிராத நாடு ஐக்கிய இராஜ்யம்.
- இரண்டு பிரதமர்களைக் கொண்ட நாடு சான் மரீனோ
- உலகிலேயே ஜனாதிபதிக்கு ஒரு வருட காலம் மட்டும் பதவி கொடுத்துள்ள நாடு சுவிஸ்லாந்து.
- உலகில் வெப்பமான இடம் அசீசியா (லிபியா).
- தாய்லாந்தில் காணப்படும் காலாஸ்மானெட்டர் என்ற பல்லி தனது வாலால் தேனீக்களை விரட்டி உண்ணும்.
- டிராங்காடஸ் விலங்கு தன் நீண்ட வாலால் தனது உடலில் மீதுள்ள தூசிகளை துடைத்துக் கொள்ளும்.
- சாரைப்பாம்பு தனது எதிரிகளை பாதம் முதல் மார்பு வரையினில் சுற்றிக் கொண்டு வாலினால் அடிக்கும்.
- புடையன் பாம்பு தனது அழுக்கு நிற வாலின் முனையால் எதிரிகளைத் தாக்கி தேகத்தில் வீக்கத்தை உண்டாக்கும்.
- தேள் தன் வாலின் நுனியில் உள்ள கொடுக்கால் பிராணிகளைக் கொட்டி செயலிழக்க வைக்கின்றது.
- நாக்கின் மூலம் பாம்பு வாசனையை உணர்கிறது.
- ஓர் அடி எடுத்து வைக்க உடலெங்கும் 54 தசைகள் பணி புரிய வேண்டியுள்ளது.
- எழுபது வயது வரை வாழும் ஒரு மனிதனின் இதயம் 250 கோடி தடவை துடிக்கிறது.
- கிறிஸ்மஸ் தினத்தை டிசெம்பர் 23 ஆம் திகதியே கொண்டாட ஆரம்பிக்கும் இரு நாடுகள் இத்தாலியும் ஸ்பெயினும் தான்.
- நம் கையில் நடுவிரல் நகங்கள் வேகமாக வளரும் கட்டைவிரல் மிக மெதுவாக வளரும்.
- நல்ல உடல் நிலை உள்ள ஒரு மனிதன் 24 மணி நேரத்தில் மூச்சுவிடும் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 23000 முறைகள்.
- உலகின் மிகப் பெரிய சுரங்கப்பாதை ஜப்பான் நாட்டில் உள்ளது.
- அவுஸ்ரேலியா தான் உலகில் மிகப் பெரிய தீவும் மிகச் சிறிய கண்டமும் இது தான்.
- வெனிசுலாவில் உள்ள ஏஞ்சல் நீர் வீழ்ச்சி நயகராவை விட இருபது மடங்கு உயரமானது.
- லண்டன் நகரில் உள்ள பிக்பென் மணிக்கூட்டுக் கோபுரம் அதிலிருக்கும் மணியை மட்டுமே குறிக்கின்றது.
- அதிக தேவாலயங்கள் உள்ள நாடு ஜமெய்க்கா.
- பி.பி.சி. நிறுவனம் 1936 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கியது.
- சூரிய குடும்பத்தில் உள்ள கிரகங்களில் மிகச் சிறியதும் குளிருடையதுமான கிரகம் புளூட்டோ.
- பச்சோந்திகள் தமது நீண்ட வாலை மரங்களில் சுற்றிக் கொண்டு தாவி ஏறும்.
- யானை ஒரே சமயத்தில் 70 லீற்றர் தண்ணீர் குடிக்கும்.
- அமெரிக்காவின் சிக்காகோ நகர் காற்று நகர் என்று அழைக்கப்படுகிறது.
- ஒரு யூனிட் இரத்தம் என்பது 450 மில்லி லீற்றர்.
- தேனீக்கள் மணிக்கு 65 கி.மீ வேகத்தில் பறக்கின்றன.
- பெண் கொசு தேனை விரும்பி உண்ணும்.
- பசுவின் நாக்கில் 35 ஆயிரம் சுவை அரும்புகள் உள்ளன.
- மீன் தனது வாலில் உள்ள துடுப்பின் மூலம் சுவையை அறிந்து கொள்ளும்.
- ஆண் பட்டுப்பூச்சி 10 கி. மீற்றருக்கு அப்பால் உள்ள பெண் பட்டுப் பூச்சியை மோப்பத் தாலேயே அறிந்து கொள்ளும்.
- நகம் ஆண்டுக்கு 2 அங்குலம் வளர்கிறது
- நாம் தும்மும் வேகம் மணிக்கு 100 மைல்கள்
- உடலில் சாராசரியாக 6 லீற்றர் இரத்தம் உள்ளது.
- உடலில் மாற்ற இயலாத உறுப்பு ஈரல்
- மனித மூளை 100 கோடி உயிரணுக்களால் ஆக்கப்பட்டது.
- உடலில் நீர் இல்லாமல் இரத்தம் இயங்க முடியாது.
- உடலில் உள்ள இரத்த நாளங்களின் தூரம் 18 ஆயிரம் கி.மீ
- வாழ்நாளில் 75 ஆயிரம் லீற்றர் தண்ணீரை பருகுகிறோம்.
- உடலில் மொத்த நரம்புகளின் எண்ணிக்கை 77 ஆயிரம்
- இதயம் நாளொன்றுக்கு லட்சம் தடவைகள் சுருங்கி விரிகின்றது.
- உலகில் முதலில் நிறுவப்பட்ட கலங்கரை விளக்கம் எகிப்தின் அலெக்சாண்டிரியா ஆகும்.
- பன்னாட்டு நீதி மன்றம் நெதர்லாந்தில் ஹேக் நகரில் உள்ளது.
- உலக வர்த்தக நிறுவனம் ஜெனிவாவில் உள்ளது.
- உணவு மற்றும் உலக விவசாய அமைப்பு ரோம் நகரில் உள்ளது.
- ஈரான் நாட்டின் பழைய பெயர் பேசியா.
- உலகின் சர்க்கரைக் கிண்ணம் என அழைக்கப்படுவது கியூபா.
- உலகின் கூரை என அழைக்கப்படுவது பமீர் முடிச்சு (திபெத்)
- வெள்ளை யானைகள் வசிக்கும் நாடு தாய்லாந்து.
- உலகின் பரப்பளவில் பெரிய நாடு ரஷ்யா.
- உலகின் முதல் பத்திரிகை 1621 இல் இங்கிலாந்தில் வாரச் செய்தி என்னும் பெயரில் வெளி யிடப்பட்டது.
- உலகில் முதன் முதலாக 1920 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வானொலி நிலையம் தோன்றியது.
- உலகில் ஒரே ஒரு நாள் மட்டும் ஜனாதிபதியாக இருந்தவர் கே.போக் என்னும் அமெரிக்கர்.
- உலகில் முதன் முதலில் 1852 ஆம் ஆண்டு தீயாணைக்கும் படை தோன்றியது. 1920 இல் இந்தியாவில் தொடங்கி வைக்கப்பட்டது.
- உலகில் முதன் முதலாக கிரிக்கெட் விளையாட்டு 1550 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தோன்றியது.
- உலகின் முதன் முதலாக பெண்களுக்கு வாக்குரிமை கொடுத்த நாடு நியூசிலாந்து.
- உலகில் தோன்றிய முதல் வங்கியின் பெயர் பாங்கோ பிரிவால்டா ஆகும்.
- ஒரு கோழிக்குஞ்சுக்கு 8000 க்கும் மேலான இறகுகள் முளைக்கின்றன
- திபெத்தில் வசிக்கும் யாக் என்ற எருமையின் பால் இளஞ்சிவப்பாக இருக்கும்.
- தலை வலிகளில் 47 விதமான தலைவலிகள் உள்ளன.
- இரத்தம் தண்ணீரை விட 6 மடங்கு கனமானது.
- ஆண்களைவிட பெண்கள் 1:2 மடங்கு வேகமாக சுவாசிப்பார்கள்.
- உலகின் முதன் சிக்னல் விளக்கு 1868 ஆம் ஆண்டு லண்டன் நாடாளுமன்ற சதுக்கத்துக்கு அருகில் அமைக்கப்பட்டது.
- உலகில் அதிக மக்கள் வாழும் நகரமாக டோக்கியோ விளங்குகிறது.
- உலகில் அதிக பரப்பளவுள்ள நகரமாக குயின்ஸ்லாந்து (அவுஸ்ரேலியா) விளங்குகின்றது.
- உலகிலேயே குளிர்ந்த இடம் சைபீரியா (ரஷ்யா).
- உடம்பிலேயே ரொம்ப வலுவான தசை நாக்கு.
- உலகில் சுமார் 5500 வெந்நீர் ஊற்றுக்கள் உள்ளன.
- உலகின் மிகப் பழைய கட்டடம் ஜப்பான் தாதாவில் என்ற கோயிலாகும் இது மரத்தினால் ஆனது.
- கிறிஸ்மஸ் என்ற வார்த்தையை உருவாக்கியவர் "டே" என்ற அமெரிக்க பெண்மணி.
- தபால் உறையை முதன் முதலில் உருவாக்கியவர் சேர் ஜேம்ஸ் ஆகில்லா 1696 ஆம் ஆண்டு.
- தபால் உறை பாவனைக்கு வந்த ஆண்டு 1840.
- கிறிஸ்மஸ் வாழ்த்து அனுப்பும் முறை 1843 ஆம் ஆண்டு இங்கி லாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.

க.நிஸா

## நமது பெ




எமது பண்பாட்டிலும், அதன் உருவாக்கத்திலும் மடங்கள் பெற்றுக் கொண்ட இடம் மிகமுக்கியமானது. இப் பத்தியில் ஏற்கனவே, யாழ்ப்பாணப் பண்பாட்டில் மடம் பெறும் இடம் பற்றி பிரஸ்தாபித்திருந்தோம். எண்ணற்ற மடங்கள் அவற்றின் சமூக பண்பாட்டு வரலாற்று முதன்மையால் மட்டுமின்றி, அவற்றின் கட்டுமானச் சிறப்பினாலும் முக்கியத்துவமுடையவை. ஆனால், இவ்வாறு நயினார் ஆலயத்தின் தென்புற மிகுந்த அழகான மடம் (வடைக் கடைக் கருகில்) எந்த விதமான தயக்கமுமின்றி இடித்தழிக்கப்பட்டு விட்டது என்பதுடன் அதன் அழகான தூண்கள் கொழும்பு நகரத் தெருக்களில் விற்பனைக்கும் போடப்பட்டிருப்பதாக நண்பர் ஒருவர் கூறிக் கவலைப்பட்டார்.

எல்லோரும் கட்டுகிறார்கள் எனவே நாமும் ஒரு கலியாண மண்டபம்

## வல்லிவெட்டித்துறை நா

எமது மூதாதையர் உருவாக்கிய மண்டபங்களை அவற்றின் சமூக பண்பாட்டு கட்டடவியல் சார் முதன்மை முதலியவற்றை யெல்லாம் கருதி பாதுகாத்து வருகின்றோம் என்பது கேள்விக்குறிதான். சிலவற்றை இடித்தே அழித்து விட்டோம். உதாரணமாக ஆனைக்கோட்டை மூத்த




கட்டுவோம் என்பதற்காக இன்று பலியெடுக்கப்படுவனவற்றுள் நம மடங்களும் சிலவேளை காணப்படுகின்றன. ஆனால் அழித்தவற்றை எவ்விதத்திலும் ஈடுகட்டமுடியாத சிமெந்து பொட்டலங்களையே நாம் கட்டித் தள்ளுகிறோம். அவற்றில் எந்தவிதப் பண்பாட்டு பிராந்திய தனிச்சிறப்போ, கட்டடவியல் வனப்போ காணக்கிடைப்பதில்லை.

ஆனால் இதற்கு மாற்றாக நல்லூர் வடக்கு வீதியில் மறைந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் அவர்கள் நினைவாகக் கட்டப்பட்டுள்ள மடம், எமது காலத்தில்

## ஆடலரசனின் அற்புத நட

மக்கள் இறைவனை அருவம்,உருவம், அருவுருவம் என்ற மூன்று வடிவங்களில் கண்டு வழிபடுகி பாரெல்லாம் நிறைந்திருக்கும் பரம்பொருளுக்கு தமது விருப்பத்திற்கு ஏற்ப உருவமும், பெயரும் கொ வருகின்றனர். சிவபெருமானின் உருவத்திருமேனிகள் 64. இதில் இலிங்க வடிவம் அருவுருவத் திருமே இத்திருமேனிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவ உண்மைகளையும் சித்தாந்தக் கருத்துக்களையும் நிற்கின்றன. ஆன்மாக்கள் பிறவித் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்குத் துணையாயிருப்பவன் இறை தேடும் வடிவில் வந்தருள்பவன்.

'நடனம்' என்பது பல செயற்பாடுகளை உள்ளடக்கியது. துள்ளல், எகிறல், ஆடல், நிற்றல், அசைத நிமிர்தல், புரளுதல் போன்ற பலவித அசைவுகளுடன் தொடர்புபட்டது. இயற்கையில் ஒவ்வொரு அ கூடிய செய்கைகளைக் குறிக்கிறது. இறைவனின் சிருஷ்டிப்பில் உருவான புல்,பூண்டு தொடக்கம் ம ஏதோவொரு லயத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஒத்திசைவுடன் ஓடிக் கொண்டிருக்கிறது. ப்ரபஞ்சத்தினுடைய தோற்றமானது எம்பிரானின் திருக்கூத்தினூடாக உருவாக்கப்பட்டது என்பது இந்து கொள்கை விளக்கமாகும். அது போல நாட்டியக்கலை சிவபெருமானால் உருவாக்கப்பட்டது என்கிறது புராண வரலாறு. இதனால் இறைவன் மக்கள் மத்தியில் நடராஜனாகவும், கூத்தனாகவும் போற்றப்படு வேண்டுதலின் படி நாட்டியத்தை ஐந்தாவது வேதமாக ப்ரம்மா உருவாக்கக் காரணமாயிருந்தவர். அது நாட்டியத்தினுடைய இருபெரும் பிரிவுகளாகிய தாண்டவம், லாஸ்யம் என்பவற்றில் தாண்டவ நடனத் சிவபிரானே என்று வரலாறுகள் கூறுகின்றன. அப்படியே நடனக் கலையைப் பரப்பும் பொருட்டு தண் கற்பித்தார் என்றும் கூறப்படுகின்றது. எம்பெருமானே நாட்டியாசானாகவும், நடிகனாகவும், இசையாசிரி கலைக்கெல்லாம் பொருளாயுமானான். இதனையே அப்பர் 'கலையாகி கலை ஞானத்தனேயாகி...' என்

எம்பிரான் ஆடலரசன். இவரது பலவித கூத்துக்களைத் தமது ஞானக்கண்ணினால் கண்டு பாமாலை கள் தொட்டு தற்கால கவிஞர்கள் வரை எம்பெருமானின் திருநடனத்தைப் பாடாதவர்கள் இல்லையெ பெருமானின் அற்புதமான நடனங்களைத் தம் அனுபவத்தாலும், இறைவனின் அனுக்கிரகத்தாலும் கண்டு நாயன்மார்களும் சிறப்பானவர்கள். குறிப்பாக 'அறவா நீ ஆடும் போது நின் அடியின் கீழ் இருக்க வே யாரும் 'இனித்தமுடைய எடுத்த பொற்பாதம் காண இம்மானிலத்தே மனிதப் பிறவி வேண்டும். என்று அப்பரு தின் கீழே நான் நாயாகிக் கிடப்பேன்' என்று மாணிக்கவாசகரும் கூறுகின்றார். மேலும் சிவனது திருக்கூ 'ஆடல் வல்லான், தாண்டவன், ஆனந்த தாண்டவன் தாண்டவமூர்த்தி, கூத்தன், கூத்தபிரான் என்றும் நிரு லாம் பாடியுள்ளார்கள். அது மட்டுமன்றி மாணிக்கவாசகர் இறைவனின் கூத்தினை இரண்டு வடிவிற் க மாகிய உயிர்களை உலக வாழ்க்கையில் உழன்று ஆடவைப்பது. மற்றையது ஞான நடனமாகிய உயிர்க விப்பதாகும். இந்த இரண்டு கூத்துக்களுமே இறைவன் ஆசானாக இருந்து ஆன்மாக்களை ஆட்டுவிப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமை மிகுந்த மரபுரிமைகள்


இன்றைய தோற்றம்

மிகுந்த
மின்றி
பதுடன்
ம்பு
கும்
ருவர்
னவே
தப்
போ,
ாக
தியில்
வர்கள்
மடம்,

## நா.வே.இராமசுவாமிமடம்

ம.திருக்குமரன்

நிர்மாணிக்கப்பட்ட வனப்பும், க்ட்டவியற் சிறப்பும், தனித்துவமுடைய அமைவாகும். இது பற்றி பின்னர் ஒரு தடவை பேசுகிறேன். இந்த நீண்ட முன்னுரை அழியும் நிலையில் உள்ள மடக்கட்டடங்களைக் காண்பதால் எழுந்தது.

நான் இம்முறை பேச விரும்பியது வல்வெட்டித்துறை சிவன் கோயில் மேற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள மடங்களுள் ஒன்றான நா.வே.இராமசுவாமி மடம் பற்றியாகும். இது 1898 இல் இற்றைக்கு 112 ஆண்டுகட்கு முன்பு கட்டப்பட்டது.

இன்று அதன் ஒரு பகுதி அழியாது இருப்பினும் பெரும்பகுதி அழிந்தும் அழிவடைந்து கொண்டும் இருக்கிறது. புதிது புதிதாய் கட்ட விருப்பமுடைய நாம் ஏன் இவ்வாறு பழுதுபட்டு அழிந்து வரும் பண்டைச் சிறப்புடைய கட்டுமானங்களை போரும் காலமும் அழித்தது போக எஞ்சியதைக் காக்க நமது முன்னோரை அவர் தம் பணிகளை கௌரவப்படுத்து முகமாக காப்பு வேலைத்திட்டங்களைச் செய்யக் கூடாது?

இராமசாமி மடத்தின் ஏனைய அழிவடைந்த பகுதிகளை செப்பனிட்டு மறுபடி அதனை அதன் முன்னிலைக்குக் கொண்டு வரக் கூடாது? மடக்காரனின் உறவினரோ, ஊரவரோ ஏன் இக் கைங்கரியத்தை மேற்கொள்ளக் கூடாது. நாளை இக் கட்டுமானங்களின் பெயராலேயே நமது இடங்கள் சிறப்பாக அறியப்பட வாய்ப்புகள் உண்டல்லவா?

அதேநேரம் மீள் நிர்மாணம், புனரமைப்பு செய்யும் போது அதனை முன்னைய வடிவமைப்பு, தோற்றப்பாடு, சிறப்பு கெடாது அதனைச் செய்யவேண்டும். அவற்றைப் பிடுங்கி, வெறொரு விதமாக நடுதல் காப்பு முயற்சியல்ல. அதுவும் ஒரு விதமான அழிப்பாக முடியும் ஆபத்துண்டு. எனவே, தகுந்த துறைசார் வள ஆலோசனையோடு இவை நிகழ வேண்டும்.

நா.வே.இராமசாமி மடம், ஒரு குறியீடு தான். இதுபோல பலவுள. அவை மீதெல்லாம் நாம் கவனம் குவிக்க வேண்டும். பிறநாட்டுப் பணத்தை இவ்வாறான ஆரோக்கியமான நடவடிக்கைகளுக்கு ஆற்றுப்படுத்த சமூகத் தலைவர்கள் முன்வரவேண்டும்.

## நடனங்கள்


"நாட்டியக்கலா வித்தகர்"
திருமதி அ.உமாமகேஸ்வரி (B.F.A)
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

டு வழிபடுகின்றனர்.
பயரும் கொடுத்து வழிபட்டு
ருவத் திருமேனியாகும்.
துக்களையும், விளக்கி
பவன் இறைவன். ஆன்மா

ல், அசைதல், வளைதல்,
வொரு அசைவும், லயத்தோடு
நாடக்கம் மனிதர் வரை
டிருக்கிறது.
பது இந்து சமய தத்துவக்
து என்கிறது நாட்டியத்தினுடைய
பாற்றப்படுகின்றார். தேவர்களின்
ந்தவர். அதுபோல
டவ நடனத்தையாடியவர்
ருட்டு தண்டு முனிவருக்குக்
இசையாசிரியனாகவுமாகிக்
பாகி...' என்கிறார்.
பாமாலை பாடியவர்கள் பலர். தேவார முதலி
ல்லையென்றே கூறவேண்டும். எனினும் எம்
ாலும் கண்டு பாடியவர்களில் தேவார முதலிகளும்,
ருக்க வேண்டும்' என்று காரைக்கால் அம்மை
று அப்பரும், 'அம்பலத்தே ஆடுகின்ற உனது பாதத்
து திருக்கூத்தைக் கண்டு வியப்படைய அவரை
ன்றும் நிருத்தப்ரியன், மஹா நர்த்தஹ என்றெல்
வடிவிற் கூறுகின்றார். ஒன்று ஊன நாடக
ய உயிர்களைத் தன்னோடு இணைத்து ஆட்டு
ட்டுவிப்பதைக் காட்டுகின்றது. (வளரும்)

# இதற்காகவேனும் ஒன்றுபடுங்கள்

நாட்டில் எப்போது வன்முறைக் கலாசாரம் தோன்றியதோ அடக்கு, ஒடுக்கு முறைகள் தோற்றம் பெற்ற காலத்தோடு, மனிதர்களின் அடிப்படைப் பண்புகள் குறைந்து போய், வன்முறையான நடவடிக்கைகளும், சண்டித்தனங்களும், யாரையும் மதியாத பண்புகளும், யாரையும் முகம் பார்த்து மரியாதை செய்யாமல், ரொம்பவும் கீழ்த்தரமான நடவடிக்கையில் சமூகம் இறங்கத் தொடங்கிவிட்டது.

வயது வித்தியாசங்கள் பார்ப்பதில்லை. யார், யாரையும் எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். சினிமாப் பாணியில் எல்லாவற்றையும் இளசுகள் கைக்கொள்ள பழகிக் கொண்டுவிட்டார்கள்.

'முதல் என்ரை' வாய் பேசும், பிறகு என்ரை கைதான் பேசும்

'எங்களப் பற்றி தெரியாது!

'ஒரு நாளைக்கு அவர் என்னட்ட நல்லா 'வாங்கத்தான் போறார்.

இதில் சில விடயங்கள் எமது வழமையான பேச்சு வழக்கில் இருந்தாலும் இப்போது அதனை செய்கையிலும் காட்டத் தொடங்கிவிட்டார்கள்.

இனப்பிரச்சினை 'சூடு' பிடித்துக் கொண்டிருந்தவேளை, எமது நாட்டு பல கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் சும்மா இருக்கவில்லை. தமக்கு ஏற்றமாதிரி வாயில் வந்ததை தம் 'இஸ்ரப்படி' மேடையில் சனத்தின் மத்தியில் கொட்டித் தீர்த்தார்கள்.

எப்போதும் இயல்பாக உண்மையாகப் பேசும் பேச்சுக்களை விட காரம், மணம் கூடிய உண்மைக்கும் புறம்பான பேச்சுக்கள், காதுகளுக்கு இனிமையானதாக இருக்கும். 'சொற்றுணை வேதியன்' தேவாரத்தை விட 'தீப்பிடிக்க தீப்பிடிக்க முத்தம் கொடடா...' இனிக்கத்தான் செய்யும்.

மேடையில் ஏறி முழக்கமிடும் தலைவர்கள் அடிக்கடி என்ன சொன்னார்கள்?

'நாங்கள் யாருக்கும் அடிபணிய மாட்டோம்'

'எங்களது வேலை எங்களுக்குத் தெரியும் யாரும் உள்ளே தலை போடாதீர்கள்.

'எல்லோரையும் பூண்டோடு அழிப்போம். அந்த நேரத்தில் மேடையில் முழங்குவது, எல்லாம் அழிப்பு ஒழிப்புத்தான்.'

எப்போது தலைவர்கள் உடல், உள ஆரோக்கியம் சார்ந்த நல்ல வார்த்தைகள் பேசி உள்ளார்கள்.

பொங்கல், தீபாவளி, புதுவருடம் போன்ற மற்றைய மதம் சார்ந்த பெரு நாள்களில் தலைவர்கள் தமது கட்சியின் கோட்பாடுகளை கழட்டி பெட்டியில் மூடி வைத்துவிட்டு காவி உடை போட்டுக் கொண்டு பேசுவார்கள்.

இந்தப் பொங்கல் திரு நாளில் எல்லா மக்களும் இனிதே வாழ இறைவனை வேண்டுகிறேன்.

இருளைப் போக்கும் தீபாவளித் திருநாளில் தமிழ் மக்கள் இல்லங்களிலும் தீப ஒளி பரவட்டும், நாங்கள் ஒன்று சேருவோம்.

'தமிழ், சிங்கள புத்தாண்டு மேலும் இரு மக்களும் ஒற்றுமையாய் வாழ உறுதி பூணுவோம். தலைவர்கள் 'திருவாய் மலர்ந்தருளியதை பத்திரிகையில் படிக்கப் படிக்க ஆசை, ஆசையாய் இருக்கும். எல்லாம் அன்றைய தினத்தோடு சரி. தலைவர்களும் கூறியதை மறந்து விடுவார்கள். அதற்கு முன் மக்களும் மறந்து விடுவார்கள்.

இது எங்கே நடக்கப் போகின்றது? எந்தமேடை போனாலும் ஆரம்பத்தில் ஒழிப்போம் அழிப்போம் என்று சொல்லிக் கொண்டு கடைசியில் உச்சக்கட்டமாக; ஒன்று சேருவோம். ஒன்று படுவோம் எனச் சொல்லிக் கொண்டோ நாளாந்த 'கடமையைச் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

மக்களுக்குக் குழப்பமாக இருக்கும்.

யாரை ஒன்றுபடச் சொல்கிறார்கள்.

ஒன்று சேருங்கள் என்பது அவ்வளவு இலகுவான காரியமா?

எவ்வளவு காலம் தொட்டு காதில் நாங்கள் அந்த வார்த்தையைக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம்.

யார் ஒன்றுபட்டார்கள்?

இவ்வளவு பட்டபின்பும் இன்னமும் நாங்கள் யோசித்துக் கொண்டுதானே இருக்கிறோம். அல்லது, இப்போதும் சேருவதற்கு நாள், கோள் பார்த்துக் கொண்டு இருக்கிறோமா?

தொல்புரம்:
சி.கதிர்காமநாதன்

அன்று வேலை முடிந்து பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது தெரு ஓரத்தில் அந்த வாசகம் கண்ணில் பட்டது.

ஒன்று சேருவோம்.

அடடா மக்கள் மத்தியில் நல்ல எண்ணத்தைப் பரவ இப்படித் தொடங்கி விட்டார்கள் என யோசித்தபடி மேலும் அவ் வாசகத்தை உற்றுப் பார்த்தேன். 'டெங்கை ஒழிக்க அனைவரும் ஒன்று சேருவோம்.

கடவுளே கன விடயங்களுக்கு ஒன்று சேருவோம் என கூப்பாடு போட்டோம். நடக்கவில்லை. 'இந்தப் பாழாய்ப் போன டெங்கை பரப்பும் நுளம்பினை ஒழிக்க ஒன்று சேர்ந்தால் நல்ல விடயமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். காத்திருந்தாவது சில வேலைகளை முடித்து விடுவீர்கள். உங்களிடம் உதவி பெற்ற ஒருவர் இன்று பதில் உதவி செய்யலாம். கணிசமான பணவரவுகளைப் பெறலாம். சண்டை போட்ட சிலரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம்.

### இடபம்



நீண்ட நாள்களாக பேசாத உறவினர் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். ஒருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல் அதை நீங்களே செய்ய நேரிடலாம். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். உடன்பிறப்புக்கள் தொடர்பானவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும்.

### மிதுனம்



உங்களுக்குத் தெரியாத ஒன்றை மற்றவர்கள் மூலம் அறிந்து கொள்வீர்கள். உறவினர்கள் வகையில் சில ஆதாயங்களை எதிர்பார்த்து ஏமாந்து போவீர்கள். வாகன பயணங்களுக்காக கணிசமான பணத்தை செலவிடலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும் நாள். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்குவீர்கள்.

### கடகம்



பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். உறவுப் பெண்கள் வகையில் சில உதவிகள் கிடைக்கலாம். உங்களின் திறமையை மற்றவர்களிடம் நிரூபிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சிலரிடம் சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதித்து விடுவீர்கள்.

### சிங்கம்



கடந்த இரண்டு நாள்களாக இருந்த சலிப்பு, சோர்வு, கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உறவினர் பகை நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். தடைகள் உடைபடும் .

**கன்னி** செய்த தவறு ஒன்றை நினைத்து பெரிய அளவில் கலக்கம் அடைவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் குணம் அறிந்து நடந்து கொள்வர். சேமித்த பணம் ஒன்றை முக்கியமான காரியம் ஒன்றுக்காக செலவு செய்வீர்கள். உடல் உபாதைகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். நண்பர் ஒருவருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள்.



### துலாம்



தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ சிலர் உங்களின் உதவி நாடிவரலாம். நெடுநாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரை இன்று எதிர்பாராமல் சந்திக்கலாம். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம். உங்களைப் பற்றி நேரடியாக விமர்சிக்கும் ஒருவரிடம் தகுந்த பதில் சொல்வீர்கள். பேராசைகளை தவிர்த்து அளவோடு செயற்பட வேண்டும்.

### விருச்சிகம்



தொலைபேசி வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல் பெருந்தன்மையோடு சிலருக்கு உதவி செய்வீர்கள். அடுக்கடுக்காக சில வேலைகளைச் செய்ய நேரிட்டாலும், அனைத்தையும் உற்சாகத்தோடு செய்வீர்கள். மாமன், மைத்துனர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

### தனுசு



நீண்டநாளைய பிரச்சினைகள் முடிவுக்கு வரலாம். அதிக செலவில் முடிக்க நினைத்த வேலை ஒன்றை குறைந்த செலவில் முடிப்பீர்கள். உறவினர்கள் சிலர் உள்ளன்போடு உங்களை உபசரிக்கலாம். சிலருக்கு நல்ல யோசனைகள் சொல்லி அவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். நண்பர் அல்லது தோழி ஒருவருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

### மகரம்



நீண்ட நாள்களாக சந்திக்காமல் இருந்த ஒருவரை திடீரென சந்திக்கலாம். உங்களுக்கு வேண்டிய உறவினர் ஒருவருக்காக நண்பர்களிடம் உதவி கேட்கலாம். குடும்ப பெரியவர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். மற்றவர்களின் பேச்சை கேட்டு எந்த காரியத்திலும் இறங்க வேண்டாம். பெரிய மனிதர்கள் ஆசிகளைப் பெறலாம்.

### கும்பம்



எதிர்பாராத திருப்பங்களைச் சந்திக்கும் நாள். உறவினர்கள் அல்லது நண்பர்கள் சிலர் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். முக்கியமான விடயங்களில் கவனக் குறைவை தவிர்க்கவும். பிள்ளைகள் விஷயத்தில் அதிக கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். குழப்பங்கள் ஏற்படும் நாள்.

**மீனம்** வாய்ப்புகள் வாயில் தேடி வரும் நாள். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்கள் தலையில் சுமத்தி தப்பித்துக் கொள்வீர்கள். வெளியிடங்களுக்கு செல்லும் போது, எதிர்பாராமல் சிலரை சந்திக்கலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. பெண்கள் மகிழ்ச்சி உற்சாகமாக செயல்படுவர்.




## A/L பரீட்சைகளின் பின்

மெகா கொம்ப்யூட்டர் கல்வி புலமைப்பரிசில்

September 12 ஞாயிறு பரீட்சை

Collect Your Free Admission Card

கடந்த 10ஆண்டுகளாக தகவல் தொழில்நுட்பக் கல்விக்காக இலவச புலமைப்பரிசில் பரீட்சையை நடத்தி பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெற்ற ஏசியனின் மெகா புலமைப்பரிசில் பரீட்சை இவ்வாண்டும் நடைபெறுகின்றது.

**யார் பங்குபற்றலாம்**

இம்முறை க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள், உள்நாட்டு வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை எதிர்பார்த்திருப்போர், பல்கலைக் கழக மாணவர்கள், அரச தனியார் அலுவலர்கள் மற்றும் கொம்ப்யூட்டர் துறையில் ஆர்வமுடையோர் அனைவரும் இத்திட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

**உள்நாட்டு வெளிநாட்டு அங்கீகாரம்**

இப்புலமைப்பரிசிலில் வழங்கப்படும் கொம்ப்யூட்டர் பாடநெறிகள் அனைத்தும் மூன்றாம் நிலை தொழிற்கல்வி அமைச்சு ஆணைக்குழுவில் பதியப்பட்டதும் ISO 9001 : 2000 சர்வதேச தர அங்கீகாரமும் பெற்றவை.

**இலவச அனுமதிகள்**

இலவச அனுமதிகளை யாழ். நகர், நெல்லியடி, சாவகச்சேரி சிஎஸ்சி - ஏசியன் பயிற்சி நிலையங்களிலும் மற்றும் 12.09.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் பரீட்சை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**புலமைப்பரிசிலில் வழங்கப்படும் பாடநெறிகள்**

Tally Accounting | Office Automation | Computer Application | PC Professional Digital Pre-Press (DTP) | Video Production | Cartoon Animation | Advanced JAVA Programming | Hardware & Networking | 2D & 3D Modeling | Graphic Design | Web Animation | Macromedia Application | Web Design & Development | Web Programming & Information Technology | Software Engineering Honours Diploma in Computer Application | Master Diploma in Multimedia

**பரீட்சை நிலையங்கள்**

யாழ்.நகரில் : யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
நெல்லியடியில் : நெல்லியடி திரு இருதயக் கல்லூரி
சாவகச்சேரியில் : சாவகச்சேரி டிரிபேக் கல்லூரி

ISO 9001 : 2000 Certified Institution

விபரங்கள் மற்றும் இலவச பரீட்சை அனுமதிகள் கீழ்க்கண்ட நிலையங்களில்

CSC-ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399

280, ... வீதி, சாவகச்சேரி. T.P : 021-2270267



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 08 ★ 03 ★ 1932

மறைவு 12 ★ 08 ★ 2010



## அமரர் வைரவன் சரஸ்வதி

தாலாட்டிச் சீராட்டி
பிறர் எம்மைப் பாராட்டத்
தரணியிலே வாழவைத்தீர்!

அன்பினையும் அறிவினையும்
அதனுடனே பண்பினையும்
அமுதூட்டும் போதெல்லாம்
அருகிருந்து எமக்களித்தீர்!

தரணியிலே நாம் தவிக்க
தொலைதூரம் சென்றதேனோ?
மீண்டும் உம் வரவிற்காய்
ஏங்கித் தவிக்கின்றோம்.....

'மடத்துக்கடவை',
அல்வாய் வடமேற்கு. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**01.01.1994**

★இன்று பிறக்கும் புதிய வருடத்தில் பயங்கரவாதத்தைப் பூண்டோடு ஒழித்து விடப்போவதாக ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தெரிவிப்பு.

★இ.தொ.கா.தலைவர் தொண்டமான் தொழிற்சங்கப் பணத்தில் சுமார் 40 இலட்சம் ரூபாவைக் கையாடல் செய்துள்ளதாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் செல்லச்சாமி பகிரங்கமாகக் குற்றச்சாட்டு.

**02.01.1994**

★இதுவரை இருந்ததைவிட அதிகூடிய இராணுவப் பலத்தைப் பயன்படுத்தி வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரப்போவதாக இராணுவத்தளபதி லேப்.ஜெனரல் ஜெரி டி சில்வா தெரிவிப்பு.

★மலையகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை உரிய காலத்தில் தீர்த்து வைக்க அரசு தவறுமானால் அங்கும் வடக்கு - கிழக்கு போன்ற நிலைமை ஏற்படும் என 'லங்கா தீப' சிங்கள நாளிதழ் தெரிவிப்பு.

**03.01.1994**

★இ.தொ.கா பொதுச் செயலாளர் பதவியில் இருந்து செல்லச்சாமியை நீக்குவது என்று இ.தொ.கா தேசிய சபை தீர்மானிப்பு.

★கூடுதல் அதிகாரங்களைத் தமிழர்களுக்கு வழங்குவது குறித்து விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேசத் தாம் தயார் எனவும், ஆனால் தனிநாடு கோரிக்கையை தம்மால் ஏற்க முடியாது எனவும் ஜனாதிபதி விஜேதுங்க தெரிவிப்பு.

**04.01.1994**

★1989 ஆம் ஆண்டு எம்பிலிப் பிட்டிய பகுதியில் அரச படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன தாகக் கூறப்பட்ட 32 மாணவர்களில் பலரது எலும்புக் கூடுகளும் மண்டை யோடுகளும் இரத்தினபுரி காட்டுப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு.

★சூரியக்ந்த பகுதியில் சுமார் 200க்கும் அதிகமான சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் எனத் தாம் நம்புவதாக மேல் மாகாணசபையின் முதலமைச்சர் சந்திரிக்கா தெரிவிப்பு.

**06.01.1994**

★இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் நேற்று சாவகச்சேரி மற்றும் தாவடிப் பகுதிகளில் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் 6 பொது மக்கள் பலியானதாகத் தெரிவிப்பு.

★சூரியகந்த புதைகுழி விவகாரத்தை அம்பலப்படுத்தியதற்காக தமக்கும் மற்றும் சில சுதந்திரக் கட்சி எம்.பி.க்களுக்கும் தொலைபேசி மூலம் கொலைப் பயம் முறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக சந்திரிக்கா குற்றச்சாட்டு.

**07.01.1994**

★கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உணவுப் பொருள்களை ஏற்றிவரும் வாகன அணிகளுக்கு வழங்கிவரும் பாதுகாப்பை நிறுத்திவிடப் போவதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அறிவிப்பு.

★எம்பிலிப்பிட்டிய, சூரியகந்த காட்டில் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட புதைகுழிக்கு பாதுகாப்பு வழங்கிவந்த பொலிஸார் அவர்களுடன் இணைந்து பாதுகாப்பை மேற்கொண்டுவந்த சுதந்திரக் கட்சித் தொண்டர்கள் அங்கிருந்து அகற்றிவிட்டுத் தாம் மட்டுமே பாது காப்புக் கடமையை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிப்பு.

**08.01.1994**

★பலாலி விமான நிலையத்தில் தரித்து நின்ற பயணிகள் விமானம் ஒன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலில் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிப்பு.

★சூரியகந்த காட்டுப்பகுதியில் புதைகுழிகளில் இருந்து மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டு வரும் சம்பவத்தால் தென்னிலங்கையில் ஐ.தே.க. அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

**09.01.1994**

★அரசாங்கம் கிழக்கில் நடத்த முனைந்துள்ள உள்ளூராட்சித் தேர்தலில், வேட்பாளராகப் போட்டியிடுமாறு தமிழ்ப் பிரமுகர்களை இராணுவத்தரப்பு வற்புறுத்தி வருவதாகத் தெரிவிப்பு.

★காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சந்திரசேகரேந்திர சுவாமிகள் நேற்று சமாதியடைந்ததாகத் தெரிவிப்பு.

**10.01.1994**

★எம்பிலிப்பிட்டிய மகாவித்தியாலயத்தின் தலைமை ஆசிரியரின் மகனுக்கும் ஏனைய மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட பூசலிலே 31 மாணவர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் அடிப்படையாகும்.

★தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும், ஆளுநர் சென்னாரெட்டிக்கும் இடையிலான மோதல் தீவிரம் பெற்றுள்ளதாகத் தெரிவிப்பு.

**11.01.1994**

★பூநகரி இராணுவ - கடற்படைத் கூட்டுத்தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த சம்பவத்துக்கு இராணுவத்தின் முழு வடபகுதிக் கட்டளைப் பீடமே பெறுப்பேற்க வேண்டும் என அச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வரும் இராணுவ மன்றம் தனது அறிக்கையில் குற்றச்சாட்டு.

★பூநகரிச் சமரில் காயமடைந்து, பின்னர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைப் பெற்றுவந்து சிங்களச் சிப்பாயொருவர் நேற்று விடுதலைப் புலிகளால் விடுவிப்பு.

**12.01.1994**

★பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தன்வசம் வைத்திருப்பினும் அவருக்காக - அவரின் சார்பில் - பாதுகாப்புத்துறையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே மேற்பார்வை செய்துவருவதாக கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவிப்பு.

★மடு அகதிமுகாமைப் பராமரிக்கும் பணியை அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் மீண்டும் பொறுப்பேற்றுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு.

**13.01.1994**

★கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் வவுனியா நகர சபைக்குமான தேர்தல் எதிர் வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி நடத்தப்படும் என அறிவிப்பு.

★பூநகரி - நாவதேவன் துறை, இராணுவ - கடற்படைத்தகர்ப்பின் போது விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட சிங்களப் போர்க் கைதிகள் விடுதலைப் புலிகளால் நேற்று விடுவிக்கப் பட்டதாகத் தெரிவிப்பு.

**14.01.1994**

★விடுதலைப் புலிகளிடம் சிக்கியுள்ள போர்க் கைதிகளை விடுவிப்பதில் புதிய இராணுவத் தளபதி மிகுந்த அக்கறை காட்டிச் செயற்பட்டு வருவதாகத் தெரிவிப்பு.

★வடமராட்சி, வடக்கு கிழக்குக் கரையோர பகுதிகள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

**16.01.1994**

★வடக்கில் விரைவில் பெரும் மெடுப்பிலான தாக்குதல் நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்படும் என இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா தெரிவித்துள்ளதாக அறிவிப்பு.

★தமது தலைமையில் இயங்கும் அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அரசமைப்பில் உள்ள குறைபாடுகள் குறித்து ஆலோசனை தெரிவிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.

# ஒளி தந்த உயர் அன்னை



இன்று அமரர் அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார் அவர்களின் நான்காவது நினைவு தினமாகும். கண்பார்வையற்றவர்களின் கல்வி வரலாற்றில் மிகவும் காத்திரமான பணியாற்றிய பெருமைக் குரியவர் இந்த அன்னை. 1972 ஆம் ஆண்டுக்கு முன் இலங்கையில் கண் பார்வையற்ற பிள்ளைகளுக்கு சாதாரண பாடசாலைகளில் கற்கின்ற வாய்ப்பு இருக்கவில்லை. 1972 இல் இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிற்பாடே இவர்களுக்கு இவ்வாய்ப்புக் கிட்டியது. எனினும், யாழ்ப்பாணத்திலே இதனைச் செயற்படுத் துவதற்கு அப்போது யாரும் முன்வரவில்லை. சலுகைகள் எதுவுமற்ற இந்தக் கடினமான பணியைப் பொறுப்பேற்பதற்கு அப்போது யாருக்கும் துணிவோ விருப்பமோ இருக்கவில்லை.

இந்த நிலையில்தான் அன்னை அன்ன லட்சுமி அவர்கள் கருணை உள்ளத்தோடு இந்தக் கடினமான கல்விப் பணியை முன்னெடுக்க முன்வந்தார். மருத்துவர்களா லும் மற்றவர்களாலும் கைவிடப்பட்ட நிலையில் இருளில் தவித்துக் கொண்டிருந்த விழிப்புலனற்ற பிள்ளைகளுக்குக் கல்வி மூலமாய் ஒளிகாட்டி, காசினியில் மேன்மையுடன் வாழ வழிகாட்டினார் இந்த அன்னை. இவரின் அரும்பணியின் பெறுபேறாய் இருபதுக்கும் மேற்பட்ட பார்வையற்றவர்கள் பட்டதாரிகளாயினர். இன்னும் பலர் பல்வேறு நிலைகளில் கல்வி கற்றுப் பயன்பெற்றனர்.

அன்னை அவர்களின் முயற்சியால் 1988 இல் வாழ்வகம் உதயமாயிற்று. தகுந்த பராமரிப்போ வழிகாட்டலோ இன்றித் தமது வீடுகளிலே தங்கியிருந்த பல பார்வையற்ற பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான ஒரு சூழலிலிருந்து கல்வி கற்கக் கூடிய வாய்ப்பு இதன் மூலம் ஏற்பட்டது.


2006 ஆம் ஆண்டு தான் அமரத்துவமடையும்வரை வாழ்வகத்தின் வளர்ச்சிக்காகவும் விழிப்புலனற்ற பிள்ளைகளின் முன்னேற்றத் துக்காகவும் அவர் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துப் பாடுபட்டார். பெயர், புகழ் எதையுமே விரும்பாமல் மறைவாய் இருந்து நிறைவான பணியாற்றிய இவ்வன்னை இன்று எம்மோடு இல்லை. ஆனாலும் அவரின் பணி வாழ்வுக்குச் சாட்சிகளாய் பல பார்வையற் றவர்கள் இன்று பாங்குற வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். சமூகத்தில் மிகவும் நலிவுற்ற ஒரு பகுதியினரான விழிப்புலனற்ற பிள்ளைகளின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட இவ்வன்னையின் மனுக்குல சேவை மகத்துவம் மிக்கது. மாண்பு மிக்கது. யாரும் செய்யாத, யாராலும் செய்ய முடியாத அரும்சேவையை ஆற்றிய இவ் வன்னை நிச்சயமாய் அன்னை தெரசா போன்ற அற்புதப் பெண்மணிகளின் வரிசையில் வைத்து மதிக்கப்பட வேண்டியவர்.

இந்த நல்ல நாளிலே நாமும் இவ்வன்னை பற்றிய நினைவு மற்றும் அவரின் அரும் பணிகள் பற்றியும் மனதில் இருத்துவோம்.

ஏ.ரவீந்திரன்
தலைவர்,
வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்.

# புத்தகசாலை

## இலங்கையின் இன நெருக்கடிக்கு தீர்வென்ன ?



கிழக்கிலங்கையைச் சேர்ந்த கலாபூசணம் பூ.ம.செல்லத்துரை எழுதி வெளியிட்டுள்ள மேற்படி தலைப்பிலான நூல் கிடைக்கப்பெற்றோம்.

இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்பான பல விடயங்களை ஆராய்ந்து எழுதியுள்ள கட்டுரைகளை ஆசிரியர் இந்நூலில் தொகுத்து வழங்கியுள்ளார்.

இலங்கையில் இன முரண்பாடுகள் சிக்கலடைந்து கோரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இந்நேரத்தில் வாசகர்கள் வாசித்து சிந்திக்ககூடிய பல விடயங்களை ஆசிரியர் பெரும்பாடுபட்டுத் தேடி ,ஆராய்ந்து இந்நூலில் வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது.

மட்டக்களப்பு பெரிய போரதீவைச் சேர்ந்தவரான கலாபூசணம் பூ.ம.செல்லத்துரை இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினராவார்.

இலங்கைத் தமிழர், யாரிந்த இராவணன் மற்றும் சிலம்பில் சில சிலம்பல்கள் ஆகிய ஆய்வு நூல்களை ஆசிரியர் விரைவில் வெளியிடவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# வாசகர் திருமுகம்

## ஆலயங்களில் மிருகபலி

கடந்த வாரம் முனீஸ்வரம் காளிகோயிலில் வேள்வி நடைபெற்றது. ஆலயங்களில் வேள்வி நடைபெறுவது பௌத்த நாடான இலங்கைக்கு அபகீர்த்தி என பௌத்த மகாசங்கம் அறிக்கை விட்டிருந்தது. அத்துடன் பௌத்த பிக்குகள் சிலர் வேள்வியைத் தடுக்கும் நோக்குடன் ஊர்வலமாகப் புறப்பட ஆயத்தமான போது பௌத்த பிக்குமாரை பொலிஸார் தடுத்து விட்டனர்.

அகில இலங்கை இந்து மாமன்றமும் முனீஸ்வரத்தில் நடைபெற்ற வேள்வியைக் கண்டித்திருந்தது.பௌத்த பிக்குமார் ஆலங்களில் மிருகங்களைப் பலி கொடுக்காதீர்கள் என ஊர்வலம் நடத்துமளவுக்கு இந்து மதத்தின் பெருமை கொடி கட்டிப் பறக்கிறது. ஏனென்றால் பௌத்தமதம் தோன்றி 2500 வருடங்கள் தான் ஆகின்றன. ஆனால் இந்துமதம் கி.மு. 7000 ஆண்டிலேயே தோன்றிவிட்டதாகக் கலைக்களஞ்சியங்கள் கூறுகின்றன.

முனீஸ்வரத்தில் நடைபெறும் வேள்வியை நிறுத்துவதற்கு பௌத்த பிக்குகள் முயற்சி செய்கின்றனர். இதன் அர்த்தம் என்னவென்றால் காட்டு மிராண்டிகளே இனியாவது உங்கள் காட்டு மிராண்டித் தனமான செயற்பாட்டை நிறுத்துங்கள் என்பது தான். கொழும்பிலிருந்து கொண்டு செயற்படும் இந்து மாமன்றத்திற்கு யாழ்ப்பாணத்தின் பல்வேறு கோயில்களிலும் நடைபெறும் வேள்வி பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லை. யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் என தம்பட்டம் அடித்துக் கொள்ளும் யாழ்ப்பாணத்துச் சைவசித்தாந்திகளும் இந்து மாமன்றமும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வேள்வியை நிறுத்த முன் வருவார்களா? யாழ்ப்பாணத்திலும் பௌத்த பிக்குமார் வந்து ஊர்வலம் நடத்துவதற்கு முன்னர் நாமாகவே வேள்வியை நிறுத்திவிடுவது நல்லது . இல்லையேல் நாவலரால் செய்ய முடியாததைப் பௌத்த பிக்குகள் செய்து காட்டினர் என்றே வரலாற்றில் பதியப்படும்.

ந.பரமேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய ஆரோக்கிய அன்னையின் பெருவிழா 2010

அஞ்சனந்தாழ்வு, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



செப்ரெம்பர் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகின.
இன்று (11.09.2010) சனிக்கிழமை பி.ப.4.30மணிக்கு திருப்பலியும் நற்கருணைப் பவனியும் இடம்பெறும்.
நாளை (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு பெருவிழா திருப்பலி யாழ்.மறை மாவட்ட ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின் தலைமையில் நிறைவேற்றப்படும்.
திருப்பலி நிறைவில் அன்னையின் திருச்சொரூபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

அன்னையின் அருள்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.


# வங்குரோத்து அடைந்துவரும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் ஊழியர் சேமலாபநிதி முதலீடு

## லக்ஷமன் கிரியெல்ல குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 11

மூன்று லட்சத்திற்கும் அதிகமான ஊழியர்கள் தொழில் இழந்துள்ள நிலையில் அரசு ஊழியர் சேமலாப நிதியை ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் முதலீடு செய்துள்ளது என எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஷமன் கிரியெல்ல நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகச் சட்ட வரைவு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு :-

கடந்த 2008 - 2009 ஆம் ஆண்டுகளில் ஊழியர் சேமலாப நிதி செலுத்துவதில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்காலத்தில் தொழில் வாய்ப்புகள் குறைத்துள்ளமையே இவ்வீழ்ச்சிக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

அதேவேளை வங்குரோத்து அடைந்துவரும் உல்லாசப் பிரயாண ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்களில் ஊழியர் சேமலாப நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இது மத்திய வங்கியின் நிதி விதிமுறைகளுக்கு முரணானது.
- இப்படி அவர் தெரிவித்தார். (சி)


## நொதேண் ஸ்போட்ஸ் கிளப்

HORSE + DOG RACE BETTING CENTRE

கொமிஷனுக்கு பந்தயச் சிட்டைகள் எடுப்பதற்கு ஆள்கள் தேவை. கொமிசனை நேரில் பேசலாம். உடனே வரவும்.
கிறவுண் அன்ட் அங்கர் (CROWN AND ANCHOR) 11.09.2010 சனிக்கிழமை தொடங்கும்.

தொடர்பு: 70, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 2223873



## உங்கள் கல்வித் தகைமையை உயர்த்தி சர்வதேச தொழில் வாய்ப்பு அளிக்கும் விசேட கற்கை நெறிகளுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

* சர்வதேச நாடுகளில் வேலை வாய்ப்புக்கான தகுதியை பெறல்.
* ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கான பயிற்சியுடன் கூடிய கணனிப் பயிற்சி.
* எங்கள் விரிவுரையாளர் உதவியுடன் உங்கள் விருப்புப் பாடத்தை தெரிவு செய்தல்.
* சர்வதேச பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறலும், அதற்கான விசா பெறல் மற்றும் பிரயாண, தங்குமிட ஒழுங்குகள் செய்தல் போன்றன சம்பந்தமான வழிகாட்டல் கருத்தரங்கு.

U.K இல் இருந்து வருகை தந்துள்ள
**திரு.ஸ்ரீ.கந்தையா** (B.Sc.,MBA)
Visiting Professor Statistic Management in Leadership.
Conducting leactures, Workshops and Seminar in the U.K, Africa, Middle-East and Far-East.
Has Considerable working experience in both public and commercial sectors.
**திரு.வி.நிரஞ்சன்** (Consultant Bartleet Mallorys Stock Brokers)
ஆகியோரால் நடத்தப்படவுள்ளது.
காலம்: நாளை (11.09.2010) சனிக்கிழமை காலை 9.30-2 வரை
இடம்: Spectra Skills Hall

பெற்றோரும் பங்கு பெறலாம். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**Spectra Skills**
19, Stanley Road, 2 nd floor of People's Bank Building,
Jaffna. T.P: 0212221422, 0212221423

(103161)


## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், செப். 11

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தின் சங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் யாகபூசை, கலச அபிஷேகம் என்பன நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு சுவாமி வீதிவலம் வருவார்.

இன்று சனிக்கிழமை மாலை வாஸ்து சாந்தி, பிரதான கும்பகடஸ்தாபனம், யாகபூசை என்பன நடைபெறும்.

(204)

## நீங்கா நினைவுகளுடன் ஈராண்டுகள்

மண்மகிழ 19 ★ 12 ★ 1981



மனம் நெகிழ 03 ★ 09 ★ 2008

**அமரர் கந்தையா புவனேஸ்வரன்** (மோகன்)
(சாரதி, தனியார் சிற்றூர்தி சேவை, புங்குடுதீவு)
திதி: ஆவணிச் சதுர்த்தி (11.09.2010)

ஈராண்டுகள் ஆகிவிட்டதா?
உன் பூமுகம் மறைந்து! ஆனாலும்
எம் நெஞ்சமதில் மறையவில்லை உன் நினைவுகள்
உன் உயிரின் உறவுகள்
உனைத்தேடுவது உனக்குத் தெரியவில்லையா?
எப்போது நீ வருவாய்-எம்
துயர் நீங்க!

வேலணை-04
என்றும் உன் நினைவுகளுடன்
உன் உயிரான உறவுகள்.


## கணனி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P4, 2.26 GHz, Computers Full Set மற்றும் கணனிப் பொருள்கள் என்பன ஒரு வருட உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு. (விலை 16,750/= மட்டுமே).
தொடர்பு:
SKY COMPUTER SYSTEM
162, Main Street, Jaffna. T.P.: 021 222 1417

## கட்டடம் வாடகைக்குண்டு

சகலவிதமான வியாபாரம் செய்வதற்கு தகுதியான கட்டடம் பலாலி றோட்டில் இலுப்பையடிக்கு அண்மையில் உண்டு.
தொடர்பு:-0770690528

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌர குடும்பத்தைச் சேர்ந்த சொந்தமாக தொழில் நடத்தும் விவாகரத்துப் பெற்ற 50 வயதுடையவருக்கு 45 வயதிற்கு உட்பட்ட விவாகரத்துப்பெற்ற அல்லது கணவனை இழந்த மணமகள் தேவை. கிறிஸ்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
விளம்பர இல.4068 C/O உதயன்,
இல.361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## இறைச்சிக்கோழி விற்பனை

கல்பேட் புறொயிலர்தினமும்சுத்தம்செய்துகாலை 6மணி தொடக்கம் இரவு 8 மணி வரை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19,முருகேசர் லேன்,நல்லூர்.

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயது, விசாகம் 2ஆம் பாத நட்சத்திரமும் B.S.C. (பெரதேனியா) 12¾ பாவமும் உயரம் 5'4''மும் உடைய மணமகளுக்கு ஏற்ற மணமகன் தேவை. சீதனப் பொருத்தம் அமைந்தால் நேரடியாகப் பேசலாம்.
தொடர்புகளுக்கு : 0777488301

## வேலைக்கு ஆள்கள் தேவை

மருந்துகள் விற்பனையில் அனுபவமுள்ளவர்கள்/பழகும் ஆர்வமுள்ளவர்கள் ஆண்/பெண் இருபாலரும் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். தகுதியானவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையை அனுப்பிவைக்கவும்.
மே/பா உதயன்
விளம்பர இல: 4066

## வேலைவாய்ப்பு

UNITED COLOUR SEPARATION நிறுவனத்துக்கு GRAPHIC DESIGNER உடன்தேவை.

தொடர்பு கொள்ளவும்
ST.XAVIER Lane,
MALLAGAM
JAFFNA
MOBILE- 0777347452


## நெஞ்சை விட்டகலா பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**நாகேந்திரம் நிஷாலினி** (சுகி)
(பரு/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பழைய மாணவி)
திதி:ஆவணிச் சதுர்த்தி
(11.09.2010)
மலர்வு:
21.05.1981
உதிர்வு:
25.08.1998

நெஞ்சினிலே நீ சுமந்தாய் கனவுகள் - கோடி
வஞ்சகரை உறவென எண்ணினாய் நாடி
பிஞ்சு உனக்கு விரித்தனர் வலையை-தேடி
தஞ்சமென் எண்ணிய எம்மை-விட்டாய்
கொஞ்சு முகம் காணாது தவிக்கின்றோம் நடுவழியில்-உனது
ஆண்டுகள் பலசென்றாலும் ஆறாது எமது கவலை
உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுகிஸ்தான்,
அல்வாய் தெற்கு, அல்வாய்.

உமது பிரிவினால்
என்றென்றும் வாடி நிற்கும்
பெற்றோர், உறவினர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அல்வாய் மேற்குமடத்துக்கடவை
அமரர்
**வைரவன் சரஸ்வதி**
மண்ணில் 08★03★1932
விண்ணில் 12★08★2010

வறுமையில் நாம் வாடிய வேளை
வறுமையைக் குறைத்திட்ட மாமியே!
புகுந்த வீட்டுக்கு வரும் வேளைகளில்
புன்னகையுடன் அரவணைத்திட்ட அன்னையே!
படுத்துறங்க பனையோலைப் பாய் இழைத்துத் தந்து
வாய்க்குச் சுவையான பண்டங்களும்
உள்ளத்துக்கு இனிமையான கதைகளும்
சொல்லி எம்மை மகிழ்வித்த பாட்டியம்மாவே!
எம்முடன் நெடுங்காலம் வாழாது சென்றது ஏனோ
எம்துயர் கொண்ட உள்ளத் தவிப்பைப்
போக்கிட மாட்டீர்களோ பாட்டியம்மா!

கயட்டை,
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

கண.கிருஷ்ணராஜன்,
கி.யசோதா, கி.வியாஷன்,
கி.பரிஷித்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**பொன்னன் சிவக்கொழுந்து**
மலர்வு 20★10★1960
உதிர்வு 12★08★2010

கடந்த 12.08.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.09.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கூவில், புலோலி மேற்கு, புலோலி.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் போரினால் அழிந்த இந்து ஆலயங்களை புனரமைப்பதற்கு நிதியுதவிகள் வழங்கப்படவில்லை

## உதவுமாறு வவுனியா மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்திடம் கோரிக்கை

கிளிநொச்சி,செப்.11

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் அழிவடைந்த இந்து ஆலயங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையெனக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அழிவடைந்து காணப்படும் கிளிநொச்சி ஆனை விழுந்தான் குளம் பிள்ளையார் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு உதவுமாறு மேற்படி ஆலய பரிபாலன சபையின் தலைவரும், செயலாளரும் ஒப்பமிட்டு வவுனியா மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்திற்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்கள்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான இந்து ஆலயங்கள் வணக்க வழிபாடுகள் எதுவும் இன்றி சிதைந்துள்ளமையை தாங்கள் அறிவீர்கள். இவற்றை மீளமைப்பதற்கான எந்த வழிமுறைகளையும் கலாசாரத் திணைக்களமோ, சமூக நிறுவனங்களோ முன்னெடுக்கவில்லை. சமூக ஒழுங்குகள் சீர்குலைந்து அவலங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களின் ஆன்மீக வழிமுறை ஊடாக அமைதிப்படுத்தவும் இயல்பு வாழ்க்கைக்கு இட்டுச் செல்லவும் ஆலய வழிபாடுகள் அவசியமாகின்றன.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய கிராமமாகிய ஆனை விழுந்தான் பகுதி விநாயகர் ஆலயத்தை தங்கள் ஒன்றியம் மூலம் புனரமைத்துத் தருமாறும் அதனூடாக சைவப்பண்பாட்டை இப்பிரதேசத்தில் வளர்த்தெடுப்பதற்கு வளர்ச்சி அடைந்துள்ள தங்கள் ஆலயங்களின் உதவியைத் தயவுகூர்ந்து வழங்கியுதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# இராணுவ முகாமாக முதியோர் இல்லம்; அலைந்து திரியும் ஆதரவற்ற வயோதிபர்

கிளிநொச்சி,செப்.11

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் சகல வளங்களுடனும் இயங்கிய முதியோர் இல்லம் இராணுவ முகாமாக இயங்குவதால் பல நூறு முதியவர்கள் அரவணைக்க இடமின்றி நிர்க்கதியான நிலையில் உள்ளனர்.

இதுதொடர்பாக முதியோர் இல்ல நிர்வாகிகளில் ஒருவரான ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை தெரிவிக்கையில்,

யோகர் சுவாமிகள் திருவடி நிலையமான முதியோர் இல்லம் சகல வசதிகளோடும் தியான மண்டபம், ஆலயம், பொழுதுபோக்கு வசதிகளோடு இயங்கியது எனவும், தற்போது இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளதால் பலநூறு முதியவர்கள் வவுனியா, மன்னார், வன்னிப் பகுதிகளில் அலைந்து திரிவதாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அரச அதிபரையும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், நாமல் ராஜபக்ஷ ஆகியோரைக் கேட்டுள்ளதாகத் தெரிவித்தார். (த-301)

# 421 குடும்பங்களுக்கு விரைவில் வீடுகள்

பளை,செப்.11

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 421 குடும்பங்களுக்கு 'நியாப்' திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

பளை நகரத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 421 குடும்பங்களின் நலன் கருதி இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலாளர் ரி.முகுந்தன் தெரிவித்தார். (313-315)

# கிராஞ்சி விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி விசேட பூசைகள்

கிளிநொச்சி,செப்.11

யுத்த அனர்த்தங்களால் பாதிப்படைந்த கற்பக விநாயகர் ஆலயம் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை ஆவணி சதுர்த்தியையொட்டி விசேட பூசை வழிபாடுகள் இவ்வாலயத்தில் நடைபெறவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-496)

# மன்னார் தமிழ்ச் செம்மொழி விழா சிறப்பு மலருக்கு ஆக்கங்கள் கோரல்

மன்னார்,செப்.11

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் நான்கு நாள்கள் நடைபெறவுள்ள தமிழ்ச் செம்மொழி விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு அறிஞர்கள், கவிஞர்கள் மற்றும் ஓவியர்களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுவதாக மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரான அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

தமிழ்ச் செம்மொழி என்ற பொதுவான கருப்பொருளைக் கொண்டு விரும்பிய தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள் போன்றவற்றை அனுப்பி வைக்கலாம். ஆக்கங்களை பெயர், முகவரி, தொலைபேசி எண் முதலிய விவரங்களுடன் இந்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார், தலைவர், மன்னார் தமிழ்ச் சங்கம், புனித வளனார் மாணவர் இல்லம்,130, வைத்தியசாலைவீதி, மன்னார் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மின்னஞ்சல் மூலமும் இவற்றை nesanmnr @ gmail com என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். மேலதிக விவரங்களுக்கு 023 323 3276, 077 7420 811 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.(த)

# சாந்தபுரம் மக்களுக்கு விமோசனம்; மீள்குடியமர இன்றுமுதல் அனுமதி!

கிளிநொச்சி,செப்.11

நீண்டகாலமாக இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த கிளிநொச்சி, சாந்தபுரம் பகுதி மக்கள் இன்று சனிக்கிழமை தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றப்படவுள்ளனர். இதற்கான அனுமதியை கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தனராஜகுரு வழங்கியுள்ளார்.

இத்தகவலை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபாவதி கேதீஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

வெடிபொருள்கள் அகற்றப்படாத பிரதேசமாக சாந்தபுரம் இருந்த காரணத்தால் இப்பகுதியைச் சேர்ந்த 281 குடும்பங்கள் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் கடந்த 2 மாதங்களுக்கும் மேலாகத் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

ஒரு பாடசாலையின் மைதானத்தில் - குறுகிய பிரதேசத்தில் - பெரும் எண்ணிக்கையான மக்கள் தற்காலிகக் கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டதனால் அவர்கள் பெரும் அவலங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அண்மையில் கிளிநொச்சிப் பகுதியில் இருநாள்களாகப் பெய்த பெருமழையால் சாந்தபுரம் மக்கள் அதிகளவாகப் பாதிப்படைந்தனர்.

இந்த நிலையில் - தமது பிரதேசத்திலுள்ள வெடிபொருள்களை அகற்றித் தம்மை மீளக் குடியேற அனுமதிக்குமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கைகளை இந்த மக்கள் விடுத்து வந்தனர்.

மக்களின் கோரிக்கையை ஏற்று சாந்தபுரம் பகுதியில் உள்ள வெடிபொருள்கள் துரிதகதியில் அகற்றப்பட்டது. அத்துடன் இன்று முதல் பதிவுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு அவரவர் சொந்த இடங்களுக்கு மக்கள் மீள் குடியேறுவதற்கான அனுமதியும் கிளிநொச்சி மாவட்டக் கட்டளைத் தளபதியால் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை - நேற்றைய தினம் சாந்தபுரம் மக்கள் தமது காணிகளைச் சென்று பார்வையிடவும், வீடுகளைத் துப்புரவு செய்யவும் அனுமதியளிக்கப்பட்டது - என்றும் அவர் தெரிவித்தார். (எ)




# டெங்கு பரவக் காரணமானவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## பச்சிலைப்பள்ளி விசேட ஆணையாளர் அறிவிப்பு

பளை,செப்.11

பச்சிலைப்பள்ளி பிரதேசம் முழுவதும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகளில் ஒவ்வொரு குடும்பத்த வர்களும் கட்டாயமாகப் பங்களிப்புச் செய்ய வேண்டும். கைவிடப்பட்ட காணிகள் மற்றும் வீடுகளில் கழிவுப் பொருள்கள், பேணிகள், போத்தல்கள் நிறைந்து காணப்பட்டால் உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்தகைய குற்றச் செயல்களுக்காக ரூபா 25,000 தண்டப் பணமாக அறவிடப்படும் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் விசேட ஆணையாளரும் பிரதேச செயலாளருமான சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (த-315-313)

# விவசாயிகள், உள்ளூர் உற்பத்தியாளருக்கு கடன் வழங்குவதில் வங்கிகள் தீவிரம்

கிளிநொச்சி,செப்.11

கிளிநொச்சிப் பிரதேசத்தின் போருக்குப் பிந்திய அபிவிருத்தியில் மக்களுடைய தொழில்வாய்ப்புக்களை மேம்பாடடையச் செய்வதில் வங்கிகள் பலவும் தீவிர முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

குறிப்பாக வர்த்தக வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி என்பன விவசாயிகள், உள்ளூர் உற்பத்தியாளர்கள், வணிகர்களுக்கு கடன்களை வழங்கி ஊக்கப்படுத்தி வருவதால் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் ஏராளமான முயற்சியாளர்கள் வங்கிகளின் முன்னால் திரண்டு நிற்பதையும் விவசாய அமைப்புகள் தமது அங்கத்தவர்களுக்கு கடன்களைப் பெற்றுக் கொடுப்பதில் தீவிர பங்காற்றுவதையும் காணமுடிகிறது. (க-301)

# இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள்; கிளிநொச்சிப் பகுதியில் சிலர் கைவரிசை

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி ,செப்.11

கிளிநொச்சிப் பகுதியில் அலைந்து திரியும் கால்நடைகளை அவற்றின் உரிமையாளர்கள் அல்லாதோர் பிடித்துச் செல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் கால்நடைகளின் உரிமையாளர்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

போரினால் மக்கள் இடம்பெயர்ந்த போது கைவிட்டுச் சென்ற கால்நடைகளில் பலவும் இப்போது கட்டாக்காலிகளாகத் திரிகின்றன. இவற்றைக் கலைத்துப் பிடிக்கும் ஒரு சிலர் குறித்த கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டியெடுத்து வேறு பகுதிகளுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்தும் வருகின்றனர். இத்தகைய சம்பவங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சகல பகுதிகளிலும் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

வன்னிப் பகுதியில் மீளக் குடியேறிய மக்கள், கட்டாக்காலிகளாகத் திரியும் தமது கால்நடைகளை மீளவும் பிடித்து அவற்றை வளர்ப்பதனூடாக தமது வாழ்வை மேம்படுத்தலாம் என எண்ணியிருந்தனர். ஆனால் கால்நடைகளைக் களவாகப் பிடிக்கும் விஷமிகளால் அவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் சங்கம் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில், அச்சங்கத்தினர் இது விடயத்தில் தகுந்த நடவடிக்கை எடுத்து, எஞ்சிய கால்நடைகளையாவது உரிமையாளர்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (440)

# பளை நகரில் இருந்து கரந்தாய் வரை மீள்குடியமர்வு

பளை,செப்.11

பளை நகரத்தில் இருந்து கரந்தாய் வரைக்கும் மீள் குடியேற்ற அமைச்சினால் பொதுமக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

தம்பாகமம்,சேரன்பற்று, மாசார், தர்மக்கேணி, புலோப்பளை, பளைநகரம், புலோப்பளை கிழக்கு, அல்லிப்பளை ஆகிய கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பொதுமக்களே இவ்வாறு குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

முகாவில், இயக்கச்சி,கோவில்வயல், வேம்படுக்கேணி, முள்ளையடி, கிளாலி, முகமாலை, இத்தாவில், அரசர்கேணி ஆகிய பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைக்கு உட்பட்ட கிராமங்களில் மக்கள் இன்னமும் குடியமர்த்தப்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டது. (க-313-315)

## 1314 குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள்

பளை,செப்.11

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 1,314 விவசாயக் குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இவர்கள் சொந்தக் காணிகளில் விவசாயம் செய்துபயன் பெற்று வருவதாகப் பிரதேச செயலாளர் ரி.முகுந்தன் கூறினார். (313-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி சிவமணிதேவி இராசலிங்கம்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கிளி அக்கா,வனஜா என அன்பாக அழைக்கப்படும் திருமதி சிவமணிதேவி இராசலிங்கம் 08.09.2010 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் இராசலிங்கத்தின் (உரிமையாளர், பரஸ்கோ லுப்பிரிகேசன் சேவிஸ்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மதியாபரணம் - செல்லம்மா தம்பதியரின் ஏகபுதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கோமலாதேவி மற்றும் நேத்திரலிங்கம் (நேத்திரா, அவுஸ்திரேலியா),தேவகி, உதயலிங்கம் (உதயன்), வாசுகி (நளினி, கனடா), விஜயலிங்கம் (மணி, UK ), நவநீதலிங்கம் (நவநீதன், UK ), யோகலிங்கம் (யோகா, நோர்வே), புஸ்பலிங்கம் (புஸ்பா), வைதேகி, அருந்தவலிங்கம் (அருண்,அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மாதவன், உமாகாந்தன், பாரதி, புஸ்பராணி, அனுசியா, மைதிலி, வசந்தகௌரி, பிரேமி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஹரி, செரி, கிரி,அர்ச்சனா, தர்ஷனா, ஹம்ஷனா, நிவேதிகா, ரஜீந்தன், கீதனன், நவீதா,நேசாயினி, தனுத், பரத், வாசவி, ஆதனா, அர்ச்சிகா, ஆரணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.09.2010 ) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பரஸ்கோ,
681, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 7901136

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சி-570823)



யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்து பொது மக்களுக்கு இடையே நல்லுறவைப் பேணும் வகையில் நடத்திய 'ருவென்ரி - 20' கிரிக்கெட் போட்டியில் இறுதி ஆட்டத்தின்போது விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.படைகளின் தலைமை அதிகாரி பிரிகேடியர் பிராங்கிளின் றொட்றிக்கோ, நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைக் கிரிக்கெட் அணியின் அதிரடி வீரருமாகிய சனத்ஜயசூரிய ஆகியோர் அழைத்துவரப்படுவதை முதல் படத்திலும், வீரர்கள் அணிவகுத்து நிற்பதையும், அணி அறிமுக நிகழ்வு இடம்பெறுவதையும் அடுத்துள்ள இரு படங்களிலும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை இறுதிப் படத்திலும் காணலாம்.

*(படங்கள்: தமிழினியன், நேசன்)*

# யாழ். பாடசாலைகளின் தடகள வீரர்கள் ௬௦ பேருக்குக் கொழும்பில் விசேட பயிற்சி

## இலங்கை மெய்வன்மைச் சங்கம் ஏற்பாடு

வலி.வடக்கு,செப்.11

வடமாகாண பாடசாலைகளின் தடகள வீரர்கள், வீராங்கனைகள் 60 பேருக்கு கொழும்பில் பயிற்சிகளை வழங்க இலங்கை மெய்வன்மைச் சங்கம் முன்வந்துள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில் கலந்து கொண்டவர்களில் இருந்து இந்த வீரர்கள், வீராங்கனைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

குறிப்பிட்ட பயிற்சி முகாமில் தேசிய மட்டப் பயிற்றுவிப்பாளர்கள் பத்துப்பேர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கி, பரீட்சைகளையும் நடத்தினார்கள்.

கொழும்பு சென்று பயிற்றுவிப் பாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக 60 வீரர்கள்,வீராங்கனைகளுக்கான பயிற்சிகளை அகில இலங்கைப் பாட சாலைகளின் மெய்வன்மைப் போட்டிகளுக்கு முதல் வாரம் நடத்த இலங்கை மெய்வன்மைச் சங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபா லன் அறிவித்துள்ளார்.

இத்தகைய பயிற்சி வடமாகாண விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு கிடைத்த பெரும் வரப்பிரசாதம் என விளையாட்டு ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (த-80)

# அரையிறுதியாட்டம் நாளை மறுதினம்

யாழ்ப்பாணம் ,செப்.11

மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது அரையிறுதியாட்டத்தில்,

இளவாலை யங்கென்றீசியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதும்.

தொடர்ந்து நடைபெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதும். (த-23)

# வென்றது பலாலி விமானப்படை

வலி.வடக்கு, செப். 11

யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்து பொது மக்களுக்கும் படையினருக்கும் இடையே நல்லுறவை வளர்க்கும் வகையில் நடத்திய 'ருவென்ரி - 20' கிரிக்கெட் போட்டியில் இலங்கை விமானப்படையணி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் பலாலி விமானப் படையணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 19.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பலாலி விமானப் படையணி 11.4 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.படைகளின் தலைமை அதிகாரி பிரிகேடியர் பிராங்கிளின் றொட்றிக்கோ கலந்துகொண்டார். நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை கிரிக்கெட் அணியின் அதிரடி வீரருமாகிய சனத்ஜயசூரிய சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். (த-23-86)

# பாடசாலைகளின் ஹொக்கிப் போட்டி; 18 ஆம் திகதி மாத்தளையில் ஆரம்பம்

## வடமாகாணத்திலிருந்து 6 அணிகள்

வலி.வடக்கு ,செப்.11

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே கல்வியமைச்சினால் நடத்தப்படும் ஆண்கள், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை மாத்தளையில் நடைபெறவுள்ளன.

இதில் வடமாகாணத்திலிருந்து ஆறு அணிகள் பங்குகொள்ளவுள்ளன.

மாத்தளை விளையாட்டரங்கு,பனாட் அலுவிகாரை விளையாட்டரங்கு, எட்வேட் ஹொக்கி விளையாட்டரங்கு ஆகிய மூன்று மைதானங்களில் இந்தப் போட்டிகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆண்கள் பிரிவில் 300 வீரர்களும் பெண்கள் பிரிவில் 300 வீராங்கனைகளுமாக சுமார் 600 வீரர்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடமாகாணத்தின் சார்பில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியன ஆண்களுக்கான போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன.

பெண்களுக்கான போட்டிகளில் உடுவில் மகளிர் கல்லூரி,மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியன பங்கு கொள்ளவுள்ளன. (த-86)

### குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# கவாஸ்கர் விளாசினார் ; றோபேட் கலக்கினார் கொழும்பு ஆனந்தாவை வென்றது சென்.பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம் ,செப்.11

கவாஸ்கரின் சிறப்பான துடுப்பாட்டமும், றோபேட்டின் துல்லியமான பந்து வீச்சும் கைகொடுக்க கொழும்பு ஆனந்தாக் கல்லூரி 'சி' அணியை சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வென்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

அகில இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்திய 17 வயதுப் பிரிவிற்கான கிரிக்கெட் போட்டியின் காலிறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை அநுராதபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி 'சி' அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிறேமதிலக் 23 ஓட்டங்களையும், றங்கண 24 ஓட்டங்களையும், ரட்ணசிறி 14 ஓட்டங்களையும் ஜெயசிங்க ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களான றோபேட் 10 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், நிதர்சன், லிவிங்ரன், கிளிங்ரன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தி னார்கள்.

124 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி யெனக் களம் இறங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 42.3 ஓவர்களில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களைப்பெற்றது.

இதில் கவாஸ்கர் ஆட்டம் இழக்காமல் 54 ஓட்டங்களையும், கிளிங்ரன் ஆட்டம் இழக்காமல் 18 ஓட்டங்களையும் ரியூடர், குகபாலா ஆகியோர் முறையே 16,15 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி 'சி' அணியின் வீரர்களான பெர்னாண்டோ 10 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்குஇரண்டு விக்கெட்டுக்களையும் , குணசேகர 10 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் டயஸ் 6 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்கள். (த-23)

# ஆண்களுக்கான 200 மீற்றரில் ரூபசிங்கவின் சாதனை பதிவு

வலி.வடக்கு ,செப்.11

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய மெய்வன்மைப் போட்டிகளின் அடிப்படையில் வடமாகாணத்தின் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டியின் சாதனையாக 2010 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.வி. பி.ரூபசிங்கவின் பெறுபேறு சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

வடமாகாணத்திற்கான புதிய சாதனைப் பட்டியலை கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் பதிவு செய்ய வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.கேசவன் 23.5 செக்கனிலும், 2009 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.சுபாஸ்கரன் 23.4 செக்கனிலும், 2010 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.வி.பி.ரூபசிங்க 22.5 செக்கனிலும் 200 மீற்றர் தூரத்தை ஓடியுள்ளார்கள்.

இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடமாகாணத்தின் 200 மீற்றர் ஓட்டப் போட்டியின் சாதனையாக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ரூபசிங்கவின் பெறுபேறு பதிவு செய்யப்படவுள்ளது.(த-86)

# உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம் ,செப்.11

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டம் ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதும். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்று நடைபெற்ற உதயன் 'சிறுவர்கதிர்' பரிசளிப்பு நிகழ்வில்...



உதயன் நிர்வாக இயக்குநரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், உதயன் - சஞ்சீவி பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன், வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமாரன், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ.ராகவன், உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ஐ.விஜயகாந்தன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.



உதயன் நிர்வாக இயக்குநர் வெற்றியீட்டிய மாணவர் ஒருவருக்கு பரிசு வழங்கும்போது....



பரிசுபெற்ற மாணவர்களும், அவர்களின் பெற்றோரும் உதயன் - சஞ்சீவி பிரதம ஆசிரியருடன்....



நிகழ்வில் கலந்துகொண்டோர்...

# போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டி பரிசில்களை வென்றோர்



**பா.துவாரகன்**
நெடுந்தீவு மகா வித்தியாலயம்



**தெ.திவேஸ்**
கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை



**சி.யசோக்குமார்**
தரம் 10 A
சாவகச்சேரி இந்துக் கல்லூரி



**பு.கஜமுகன்**
தரம் 8 E
புனித பத்திரிசியார் கல்லூரி



**ந.கீர்த்திகா**
தரம் 8 A
யாழ்.சன்மார்க்க வித்தியாலயம்



**கோ.லேனுஜா**
வட்டு. இந்து நவோதயாக் கல்லூரி



**ம.மதுஷன்**
தரம் 7 A
புனித பத்திரிசியார் கல்லூரி



**சா.பவிதா** - தரம் 6
கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்



**வி.பிரசாந்த்** - தரம் 6 D
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்




**அ.ரஜிந்தன்** - தரம் 8
தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்



**ஏ.சயந்தினி** - தரம் 12
வட்டு.இந்து நவோதயாக் கல்லூரி



**அ.சாள்ஸ் டிறோசன்** - தரம் 6 B
ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி



**தே.சாருஜன்** - தரம் 9
தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயம்



**செ.சவித்தா** - தரம் 9 B
சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்




**ம.சிவகௌரி** - தரம் 12
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை



**யோ.சிவரஜனி** - தரம் 6 B
மட்டுவில் கமலாசினி மகா வித்தியாலயம்



**பா.யுகந்தன்**
புனித பத்திரிசியார் கல்லூரி



**வி.லோஜினி** - தரம் 8 A
கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்



**த.உஷாந்தினி** - தரம் 8
புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி

**பரிசுபெறத்தவறியோர் கவனத்துக்கு**

சிறுவர் கதிர் போட்டி பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளத் தவறிய மாணவர்கள் அவர்களுக்கு அனுப்பப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதத்துடன் அலுவலக நேரத்தில் உதயன் பணிமனையில் உங்கள் பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

படங்கள்: சுகந்தன், தமிழினியன், ஹரிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் துயர் துடைக்கும் பணியை நாம் விரைந்து மேற்கொள்ள வேண்டும்

## உலகத் தமிழர்களிடம் பழ.நெடுமாறன் கோரிக்கை



சென்னை,செப்.11

ஈழத்தமிழரின் துயர் துடைக்க வேண்டிய மாபெரும் கடமை உலகத் தமிழருக்கு உண்டு. அந்தப் பணியை நாம் உடனடியாகவும் விரைவாகவும் மேற்கொள்ள வேண்டும் - என்று உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

உலகத் தமிழ் பண்பாட்டு இய்க்க ஐரோப்பிய ஒன்றியம் நடத்தும் 'அகம் புலம் தமிழர் வாழ்வியல் சிறப்பு மாநாடு' சிறப்புற நடைபெற வேண்டும் என வாழ்த்தி அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இதைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியம் செப்டெம்பர் 11 ஆம் திகதி அகம் புலம் தமிழர் வாழ்வியல் மாநாட்டை நடத்தவிருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.


ஈழத்தில் வாழும் மக்கள் மிகப்பெரிய சோதனைக்கும், வேதனைக்கும் உள்ளாகியுள்ள இந்த வேளையில் அவர்களின் துயரம் துடைக்க வேண்டிய மாபெரும் கடமை உலகத் தமிழருக்கு உண்டு.

துன்பக்கேணியில் வீழ்ந்து தத்தளிக்கும் நமது சகோதர ஈழத்தமிழ் மக்களை மீட்டுச் சேர்க்கவேண்டிய மாபெரும் பணியை நாம் உடனடியாகவும் விரைவாகவும் மேற்கொள்ளவேண்டும்.

ஜேர்மனியில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க சிறப்பு மாநாடு இப்பிரச்சினை குறித்தும், உலகத் தமிழர்களை ஒன்றுபடுத்துவது குறித்தும் தொலை நோக்குடன் சீரிய முடிவுகளை மேற்கொள்ளும் என நம்புகின்றேன்.

மாநாடு வெற்றிபெற் எனது வாழ்த்துக்களையும் மாநாட்டுக் குழுவினருக்கு எனது பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பொள்ளாச்சியில் விநாயகர் சதுர்த்தியன்று பிரதிஷ்டை செய்வதற்காக கொண்டு வரப்பட்டுள்ள விநாயகர் சிலைகள் வடுகபாளையம் அருகே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. விநாயகர் சதுர்த்தி விழா இன்று (சனிக்கிழமை) கொண்டாடப்படுகிறது.

# இந்தியச் செய்திகள்

## ஆளை விழுங்கும் மலைப்பாம்புடன் விளையாடும் 6 மாதப் பெண் குழந்தை



சென்னை,செப். 11

6 மாதப் பெண் குழந்தையொன்று ஆளை விழுங்கும் மலைப்பாம்புடன் விளையாடி வரும் அதிசய சம்பவம் மஹாராஷ்டிரா மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

சிதி சித்தார்த் சினுனி என்ற இக்குழந்தையின் தந்தையான சித்தார்த் ஒரு விவசாயி. அவர் பாம்புகளைப் பிடித்து விற்பதை தொழிலாகக் கொண்டுள்ளார். தனது மகளுக்கு விளையாட்டுப் பொருள்களை வாங்கிக் கொடுக்க முடியாததால் பாம்புகளுடன் விளையாட அனுமதித்துள்ளார் என அவர் கூறினார்.

சிதி, பாம்புகளுடன் இயல்பாக பழகுவதால் அவை அவருடன் விளையாடுவதை விரும்புகின்றன என சித்தார்த் கூறினார்.

## கச்சதீவுக் கடலில் தமிழக மீனவர் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல்

சென்னை,செப்.11

கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

### தமிழக நாளேடு தகவல்

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த புதன்கிழமை 50இற்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

கச்சதீவுக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே அவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களின் படகுகளில் இறங்கி, மீன்களைப் பறித்தனர்.

மேலும் கயிறுகளால் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கியுள்ளனர். செல்போன், வழிகாட்டும் கருவி உள்ளிட்டப் பொருள்களையும் இலங்கைக் கடற்படையினர் பறித்துச் சென்றனர் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்ததாக தமிழக நாளேடு ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

## காரைநகரில் நாளை கும்பாபிஷேகம்



காரைநகர், பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கும்பாபிஷேகம் நாளை (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

முருகப் பெருமானின் அடியார்கள் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

- கோயில் நிர்வாகம்

## ஈழத்தமிழர்கள் வாழ்வில் வசந்தம் வீச விரைவில் தமிழீழம் மலர வேண்டும்

### இந்துக்கள் கட்சி தெரிவிப்பு

சென்னை, செப்11

ஈழத் தமிழர்கள் வாழ்வில் வசந்தம் வீச அங்கு விரைவில் தமிழ் ஈழம் மலர வேண்டும் - என்று இந்துக்கள் கட்சியின் பிரமுகர் அர்ஜூன் சம்பத் தெரிவித்துள்ளார்.

சென்னையில் வரும் 18, 19 ஆகிய திகதிகளில் விநாயகர் சிலை ஊர்வலம் நடக்கிறது. சீனிவாசபுரம் கடற்கரை, காசிமேடு மீன்பிடி துறைமுகம், திருவொற்றியூர் பாப்புலர் எடைமேடை பின்புறம், நீலாங்கரை பல் கலைநகர் கடற்கரை ஆகிய 4 இடங்களில் விநாயகர் சிலைகள் கரைக்கப்படும்.

19 ஆம் திகதி இந்துக்கள் கட்சி (அர்ஜூன் சம்பத்பிரிவு) சார்பில் திருவல்லிக்கேணி பெரிய வீதியில் இருந்து விநாயகர் ஊர்வலம் புறப்படுகிறது. இதில் இலங்கை தமிழ் எம்.பி. யோகேஸ்வரன் கலந்து கொள்கிறார்.

இதுதொடர்பாக அர்ஜூன் சம்பத் கூறியவை வருமாறு -

இலங்கையில் அல்லல்பட்டு வரும் தமிழர்கள் வாழ்வில் வசந்தம் வீச அங்கு விரைவில் தமிழ் ஈழம் மலர வேண்டும். இதற்காக விநாயகரை வழிபட்டு சிறப்புப் பிரார்த்தனை செய்ய உள்ளோம்.

வரும் 16 ஆம் திகதி கோவையில் ராஜவீதி தேர் நிலை திடலில் இருந்து விநாயகர் ஊர்வலம் புறப்பட்டு முத்தண்ணன் குளத்தில் சிலைகள் கரைக்கப்படுகின்றன. சென்னையில் 19 ஆம் திகதி ஊர்வலம் நடத்தப்படுகிறது. இந்த 2 நாள் ஊர்வலத்தில் இலங்கை மட்டக்களப்பு எம். பி. நந்திக்கொடி யோகேஸ்வரன் பங்கேற்கிறார்.

- என்றார்.

## திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு குடும்பத்துடன் சென்று ரஜினி தரிசனம்

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நடிகர் ரஜினிகாந்த் தனது குடும்பத்துடன் நேற்றுமுன்தினம் இரவு சுவாமி தரிசனம் செய்தார். அவருக்கு, லட்டு மற்றும் தீர்த்தப்பிரசாதம் வழங்கப்பட்டன

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சுவாமி கும்பிடுவதற்காக நடிகர் ரஜினிகாந்த், தனது மனைவி லதா மற்றும் மகள் சௌந்தர்யா, மருமகன் அஸ்வின் ஆகியோருடன் கார் மூலம் நேற்றுமுன்தினம் திருப்பதிக்கு வந்தார்.

திருமலையில் உள்ள பத்மாவதி விருந்தினர் மாளிகையில் தங்கி, சிறிது நேரம் ஓய்வெடுத்தார். பின்னர் ஏழுமலையான் கோவிலுக்குள் சென்றார்.


## மாவை கொல்லங்கலட்டி, கேணிக்கரை
## அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
## பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

சுவஸ்தி ஸ்ரீ நிகழும் விகிர்தி வருட ஆவணி மாதம் 27ஆம் நாள்(12.09.2010) ஞாயிற்றுக்கிழமை 9 மணியளவில் வரும் சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன அபிஷேகம் நிகழும்.

இன்று (11.09.2010) சனிக்கிழமை காலை, மாலை விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். தொடர்ந்து பூர்வாங்கக் கிரியைகள் நடைபெற்று பின்னிரவு 2.30 மணி தொடக்கம்(ஞாயிறு அதிகாலை) பாலாலயத்தில் பிம்பஸ்தாபனம், பிம்பசுத்தி ஆகியன நிகழும்.

இவ்வாலய வழிபடுவோர்களில் மனப்பூர்வமாக புனரமைப்புக்கு உதவ விரும்புவோர் உதவவும். உங்கள் வாகனங்களிலும் (துவிச்சக்கரவண்டி உட்பட) ஆலயத்திற்கு வரலாம்.

புனருத்தாரண சபை கணக்கு இலங்கை வங்கி, காங்கேசன்துறைக் கிளை(மல்லாகம்) SA 7577127 என்ற கணக்குக்கு பணம் வைப்புச் செய்யலாம்.

அறங்காவலரும்
புனருத்தாரண சபையினரும்,
ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.





## 159ஆம் நாள் நினைவு

## முத்துலிங்கம் சிவபாக்கியம்

தோற்றம் 04.04.1932 — மறைவு 04.04.2010

தனக்கென்று ஒரு மகனின்றி
ஆவணி வளர்பிறை சதுர்த்தியில்
உண்ணா நோன்பிருந்து
பேரன்களைப் பெற்றெடுத்து வ்ளர்த்த
எங்கள் அருமைப் பேர்த்தியாகிய அம்மம்மாவே!
உங்கள் நினைவுகள் என்றென்றும் எங்கள்
மனங்களில்.

புது வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

என்றும் நினைவில்
பேரன்.

(103173)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்றத்தின் அங்கத்தவரான க.பிரகலாதன் (உரிமையாளர், கிருஷ்ணா கராச் - சாவகச்சேரி) அவர்களின் அன்புத் தாயார்

### அமரர் கதிர்காமத்தம்பி கனகமணி

அவர்கள் 06.09.2010 ஆம் திகதி காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சாவகச்சேரி. (சி/570818) கைத்தொழில் வணிகர் மன்றம்.

## வேலை ஆள்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கிவரும் குறிஞ்சி மருந்தகத்துக்கு அனுபவம் வாய்ந்த பெண் வேலையாள்கள் தேவை.

நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு :-
குறிஞ்சி மருந்தகம்
திருநெல்வேலிச் சந்தி. (103192)

## மரண அறிவித்தல்கள்

### விஸ்வலிங்கம் சந்திரகுமார்



(முன்னாள் இலங்கை வங்கிக் காசாளர்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் விளானை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய விஸ்வலிங்கம் சந்திரகுமார் நேற்று (10.09.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - நாகரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற தம்பிமுத்து மற்றும் செல்லம்மா தம்பதியரின் மருமகனும் தேவராணியின் அன்புக் கணவரும் வினோத் - காமராஜ் (இந்தியா), ஜினோத் (லண்டன்), ஜெனோத் - கிரிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயகுமாரி (திருகோணமலை), திலககுமாரி, ஜீவகுமார் (டென்மார்க்) ஆகியோரின் சகோதரனும் நடராசலிங்கம் (அவுஸ்திரேலியா), விஜயமனோகரன், சந்திரன் (டென்மார்க்), ஜெயராணி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைமத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.09.2010) வெள்ளிக்கிழமை இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மூ.ஜெயச்சந்திரன் (மைத்துனர்).
(103189) (உதயா பேக்கரி, வல்லை வீதி, சங்கானை).

### நாகமணி குலசேகரம்



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், திருநெல்வேலி பால்பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி குலசேகரம் நேற்று (10.09.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - அன்னப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான இராமசாமி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற முத்துலச்சுமியின் அன்புக் கணவரும் குலராசபதி, இளந்திரையன் காலஞ்சென்ற இளங்கோ ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகவிநாயகம், விஜிதா சற்குணேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் சஞ்சிவன், சஞ்சிகா, சானுஜன், மதுரிக்கா, நிருபரன், விஷ்ணுப்பிரியா, மானுஷா, ஒவியா ஆகியோரின் அன்புப் பேரனும் சொர்ணம்மா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2010) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.80, பால் பண்ணை வீதி,
திருநெல்வேலி.
தகவல் :
(103210) குடும்பத்தினர்.

### வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை (குழந்தை)



நவாலி தெற்கு, சென்பீற்றர் வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (09.09.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற றோசலினின் அன்புக் கணவரும் இராசரட்ணம் (ஜேர் மனி), வசந்தி (ஜேர்மனி), பிறேமினி (திருகோணமலை), சிலோஜினி, மாலினி (இந்தியா), றஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரி செலின், அருள்நேசன், தேவநாதன், ஸ்ரான்லி யேசுநேசன், தர்மராசா ஆகியோரின் மாமனாரும் திலக்ஷன், கிறிஸ்ரியான், தீபக், ஜெனிபர், கிரிசாந், கீர்த்தி, கரன், லக்ஷிகா, சாம்சன், சப்த்திகா, மௌலி, சியான் ஆகியோரின் பேரனும் நாகேஸ்வரி, கனகசுந்தரம், லிங்கேஸ்வரி, நல்லையா, காலஞ்சென்ற கனகசபை, கனகரத்தினம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் (சடுவில் வீதி, நாவலி தெற்கு) நடைபெற்று, பூதவுடல் காலை 9 மணியளவில் கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.
T.P.: 0775097958
தகவல் :
(103215) குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள HONDA CD-200 (சிவப்பு) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0776374345

## மோட்டார் சைக்கிள் விற்பனை

NP VA XXXX எனும் தொடரிலக்கமுடைய 180 டிஜிற்றல் பல்சர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0771290737

## VAN விற்பனைக்கு

52 XXXX தொடர் இலக்கமுடைய LITEACE வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0771171872

## உடன் விற்பனைக்கு

புதிதாக மீளமைக்கப்பட்ட சிவப்பு நிற HONDA CD-200 (Road master) வகை மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. (விலை பேசித் தீர்மானிக்கப்படும்)

தொடர்புகளுக்கு : 0777261946

## உடன் விற்பனைக்கு

53, தொடரிலக்க ரொயாட்டா வைற் வஸ்-High Roof FW -பவர் ஸ்ரேறிங் வான் - நல்ல நிலையில் உள்ளது - உடன் விற்பனைக்குள்ளது. விலை 10 லட்சம்.

தொடர்பு : 0718609271 (மானிப்பாய்)

## தவறிவிட்டது

அல்வாய் வடக்கு, அல்வாய் என்னும் முகவரியுடைய தேவராசா குணவதி என்பவருடைய தே.அ.அட்டை மற்றும் ஓய்வூதிய அட்டை, வங்கிக்கணக்குப் புத்தகம் என்பன கண்டாவளைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

27, பிள்ளையார் வீதி, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. தொ.பே. 0772772063

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஆண், பெண் அல்சேசன் நாயும்,45 நாள் பூர்த்தியான ஜேமன் சப்பேட் அல்சேசன் குட்டிகளும், டாசோன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், பொக்கட் பெனியர் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான பொமேரியன் நாய்க்குட்டிகளும், வான் கோழிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : வி.மயூரன், இல.209, ராஜா பிளாசா முன்பாக, பலாலி றோட், கோண்டாவில்.

## சேவை

UK, ICELAND, POLAND போன்ற நாடுகளுக்கு Student VISAவில் செல்வதற்கான புதிய நடைமுறையில் இருக்கும் விதிகளுக்கமைய துரிதகதியில் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும். மற்றும் Financial Sponsership என்பன.

தொடர்பு : 0779218444, 0214910959

## கடை விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மணிக்கூட்டு வீதிக்கும், வேம்படிச் சந்திக்கும் இடையில் உள்ள 20 அடி அகலமும் 80 அடிக்கு மேற்பட்ட நீளமுடைய கடை விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0213216790

## மாபிள் பதிப்பதற்கு

கட்டடங்களுக்கு (வீடு/பாடசாலை/ஹோட்டல்/வைத்தியசாலை) மாபிள் பதிக்கும் வேலைகள், திறமாகவும், காத்திரமாகவும், சிறந்த முறையிலும், வேகமாகவும் ஒரு சதுர அடிக்கு ரூபா 40/= படி செய்து தரப்படும்.

ஹோட்டல் கிறீன் கிறாஸ், பிறின்ஸ் பாமசி, ஜெகன் பாமசி போன்ற இடங்களில் எம்மால் மாபிள்கள் நல்ல முறையில் பதிக்கப்பட்டுள்ளன.

தொடர்பு : 0771166177 (சிங்களம்)
0778365469 (தமிழ்)

## பொன்விழா போட்டிகள்

யாழ்ப்பாணம், செப். 11

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் இடையே நடத்தப்படும் அனைத்துப் போட்டிகளும் எதிர்வரும் 22ஆம் திகதி புதன் கிழமை காலை 8 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என்று சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் நாளை ஞாயிறு நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

## புதுக்கடை திறப்பு விழா
## குறிஞ்சி மருந்தகம்

நிகழும் விகிர்தி ஆண்டு ஆவணித்திங்கள் 27ஆம் நாள் 12.09.2010 காலை 9 மணி தொடக்கம் 10.45 வரையுள்ள சுபவேளையில் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள **குறிஞ்சி மருந்தகம்** புதிதாக ஆரம்பிக்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கும் உறவினர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(103192) உரிமையாளரும், ஊழியர்களும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிக்கும் பௌதீகவள விருத்திக்கும் அளப்பரிய சேவைகள் ஆற்றிய வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்



### திரு. ப. விக்னேஸ்வரன்

அவர்கள் வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவரது பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

தொல்புரம்,
சுழிபுரம்.
பாடசாலைச் சமூகம்,
யா/தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயம்.
(103187)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன முன்னாள் பணிப்பாளர், சிரேஷ்ட விரிவுரையாளர், முன்னாள் கணக்கியல் துறைத்தலைவர்



### திரு. கதிரவேல்பிள்ளை கதிரமலை

(M.A, B.Com, HNDC, PG.Dip.in. Edu.Sp.Tr.(Com)

அவர்களது சேவை நிறைவையொட்டி மாலை நேர மாணவர்களான HNDA 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருட, HNDE 1ஆம், 2ஆம், HNDIT 1ஆம் வருட மற்றும் பகல் நேர மாணவர்களான HNDA 3ஆம், 4ஆம், வருட HNDM 3ஆம் வருட மாணவர்களாகிய நாம் அவரது சேவையைப் பாராட்டி மேலும் ஓய்வு காலம் சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

HNDA, HNDE, HNDM & HNDIT
மாலை நேர மாணவர்கள்,
உயர்தொழில் நுட்பவியல் நிறுவனம்,
யாழ்ப்பாணம்.
(103213)

உ

## விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை

ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களகரமான விகிர்தி வருஷம் ஆவணித் திங்கள் 27ஆம் நாள் (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை

துலா லக்கினமும் சித்த யோகமும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தன்று காலை 8.50 மணி முதல் 10.56 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| கோப்பாய் வீரபத்திர சுவாமி கோயில் பிரதம குரு சிவஸ்ரீ இரத்தின சபாபதிக் குருக்களின் பௌத்திரனும் சிவஸ்ரீ பிரணதார்த்திஹர குருக்கள் சுகந்திகுந்தளாம்பிகை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி **ரவிசங்கர சர்மாவிற்கு** | அராலி வடக்கு ஸ்ரீ நடராஜப் பெருமான் கோயில் ஆதீன கர்த்தா சிவஸ்ரீ இரத்தினக் குருக்களின் பௌத்திரியும் சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் கனகாம்பிகை அம்மாள் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி சௌபாக்கியவதி **பிரியதர்சினியை** |

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக் கிரகணம் செய்ய கோப்பாய் வீரபத்திர சுவாமியினதும் பார்வதி பரமேஸ்வரனதும் அராலி வடக்கு ஸ்ரீ நடராஜப் பெருமானதும் திருவருளுடனும் குருவருளுடனும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் நீர்வேலி திருமுருகன் திருமண மண்டபத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் :- காலை 6 மணி. மணமகன் இல்லத்தில் நடைபெறும்
வதூவர கிருகப் பிரவேசம் - பிற்பகல் 4 மணியளவில் மணமகள் இல்லம்
வரவேற்பு உபசாரம் - 13.09.2010 திங்கள் பிற்பகல் 4 மணி. மணமகன் இல்லத்தில் நடை பெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்

சிவஸ்ரீ பிரணதார்த்திஹர குருக்கள்,
சுகந்தி குந்தளாம்பிகை தம்பதிகள்,
வீரபத்திர சுவாமி கோயில்,
கோப்பாய்.

ஸ்ரீமதி கனகாம்பிகை அம்மாள்,
நாகேந்திரக் குருக்கள் குடும்பத்தினர்,
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
தற்காலிக முகவரி :- இரத்தினம் லேன்,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு) (சி/570821)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



551 இராணுவ பிரிகேட்டின் தலைமைப் பீடத்தில் மீள்குடியேற்றம் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறுவதை முதலாவது படத்திலும் மீள்குடியேறிய மக்கள் மத்தியில் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் மீள்குடியேறிய மக்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: டிலீப்)

# வடமராட்சி கிழக்கில் மீள் குடியேறிய மக்களுக்கு அனைத்து உதவிகளும் உரியவேளையில் கிடைக்கும்

## யாழ். அரச அதிபர் இமெல்டா நேற்று அங்கு அறிவிப்பு

வடமராட்சி, செப்.11

வடமராட்சி கிழக்கில் மீள்க்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு அரசாங்கத்தின் மூலம் கிடைக்கும் உதவிகள் அனைத்தும் உரிய வேளையில் கிடைக்கும். அதற்கான நடவடிக்கைகளை நான் எடுத்து வருகின்றேன்.

-இவ்வாறு கூறினார் யாழ். அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார்.

மீள்குடியேற்ற திட்டங்களை குழப்பும் வகையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஊடகம் ஒன்று(உதயன் அல்ல) செய்திகளை உண்மைக்குப் புறம்பாக வெளியிட்டு வருகின்றது. இதனை அரச உயர் அதிகாரி என்ற முறையில் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்றும் அங்கு குறிப்பிட்டார்.

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் தேவைகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் நேற்று செம்பியன்பற்றில் உள்ள 55 பிரிவு 551 ஆவது இராணுவ பிரிகேட் தலைமையகத்தில் இடம்பெற்ற போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

### குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டது

முதற் கட்டமாக ஆறு கிராம சேவகர் பிரி வுகளைச் சேர்ந்த 353 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன. இவர்கள் தற்காலிகமாக பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான குடிதண்ணீர் வசதிகள் அனைத்தும் ஏற்பாடுசெய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இடத்திலும் தண்ணீர் தாங்கி வைக்கப்பட்டு மக்களுக்கு எந்நேரமும் தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனை விட மக்களுக்கான சுகாதார வைத்திய வசதிகளை வழங்கும் பொருட்டு நடமாடும் வைத்திய சேவையும் இடம் பெறுகின்றது. மக்களுக்கான சமைத்த உணவும் வழங்கப்படுகின்றது.

பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ள அனைவரும் இன்னும் 3 நாள்களில் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப் படவுள்ளனர். இவர்களுக்காக 75 அரை நிரந்தர வீடுகளை இராணுவம் அமைத்துக் கொடுத்துள்ளது. மேலும் மக்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படும் போது அவர்களுக்கு சிமெந்து பைக்கற், தகரம், விவசாய உபகரங்கள், 5 ஆயிரம் ரூபா பணம் என்பன வழங்கப்படவுள்ளன.

மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் அவர்களுக்கான போக்குவரத்து வசதி, மின்சாரம், நீர் விநியோகம், பாதை புனரமைப்பு, பாலம் புனரமைப்பு, வைத்திய சாலை புனரமைப்பு என்பவற்றை உடனடியாக மேற்கொள்ளு மாறும் அந்தந்த திணைக்களத் தலைவர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், 551 இராணு பிரிகேட் தளபதி சுதர் பெரேரா, இராணு அதிகாரிகள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இந்நிகழ்வின் பின்னர் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை நேரடியாகச் சென்று அரச அதிபர் சந்தித்தார். இதன்போது மக்கள் மத்தியில் அரசங்க அதிபர் உரையாற்றும் போது -

### மேலும் 10 ஆயிரம் பேர் விரைவில் குடியேற்றம்

உங்களைத் தொடர்ந்து இன்னும் 10 ஆயிரம் மக்கள் மீகக்குடியேற்றப்பட உள்ளனர்.

நாங்கள் எவ்வளவோ இழந்துவிட்டோம். இனி எம்மிடம் இருப்பதைக் கொண்டு நாம் மீண்டும் வாழ முயற்சிக்க வேண்டும். உங்களுக்கு அரச உதவிகள் பெற்றுத்தரப்படும். மேலும் அபாயகரமான பொருள்களைக் கண்டால் அது தொடர்பில் உடனடியாக இராணுவத்தினருக்குத் தெரியப்படுத்துங்கள். உங்களை நான் மீண்டும் சந்திக்க வருவேன் - என்றார்.

இதனிடைய குடத்தனையில் இயங்கி வந்த மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை நேற்றுமுன்தினம் முதல் மருதங்கேணியில் அமைந்துள்ள தனியார் வீடொன்றில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-15-236)

# மோ. சைக்கிளில் சென்றவர் நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோதி உயிரிழப்பு

தென்மராட்சி, செப். 11

நுணாவிலில் ஏ-9 பாதையில் கடைக்குப் பொருள் இறக்கிக் கொண்டிருந்த லொறியின் பின்கதவுடன் மோதுண்ட குடும்பஸ்தர் சிகிச்சை பயனின்றி நான்காம் நாளான நேற்றுமுன்தினம் மரணமானார்.

கொக்குவிலைச் சேர்ந்த யதகுலசிங்கம் வைகுந்தன் (வயது-37) என்பவரே மரணமானவராவார். இவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

இந்தச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது :-

சாவகச்சேரியில் உள்ள இரும்புக்கடை ஒன்றில் பணிபுரியும் இவர் கடந்த திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார்.

நுணாவிலில் உள்ள கடை ஒன்றில் பொருள் இறக்குவதற்காக நிறுத்தப்பட்டிருந்த லொறியின் பின்கதவு திறக் கப்பட்டிருந்தது. அந்தக் கதவுடன் அவர் மோதுண்டதில், நெஞ்சில் காயப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் இரவு இவர் மரணமானார். (ஒ-ஐ-207)

# டிராக்டர் 'மெக்கானிக்' கடத்தித் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், செப். 11

சாவகச்சேரி நகர்ப் பகுதி உழவு இயந்திர 'மெக்கானிக்' இரவு இனந்தெரியா தோரால் கடத்தப்பட்டு மோசமாகத் தாக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழன் இரவு 8 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இடைவழியில் உழவு இயந்திரம் பழுதடைந்துவிட்டதாகக் கூறி அழைத்துச் சென்று கல்வயல் விளைவேலி துர்க்கை அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள பற்றைப்பகுதியில் வைத்து மோசமாகத் தாக்கிவிட்டுத் தப்பியோடி விட்டனர்.

தாக்குதலுக்கு இலக்கான 'மெக்கானிக்' நடந்து வீட்டுக்கு வந்து சம்பவத்தைக் கூறிய பின்னர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜெயசிங்கம் (வயது -60) என்பவரே தாக்குதலுக்கு இலக் கானவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-207)

# ஆசிரியர் இடமாற்ற மீளாய்வுப் பணிகள் பூர்த்தி; விரைவில் பட்டியல் தயாராகி நடைமுறைக்கு வரும்

யாழ்ப்பாணம், செப்.11

வன்னியில் இருந்து யாழ்ப்பாணத் துக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கும் இடமாற்றம் செய்யப்பட வுள்ள ஆசிரியர்களின் விவரங்கள் மீளாய்வு செய்யும் பணிகள் பூர்த்தியாகிவிட்டன.

ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் மாகாண இடமாற்றச் சபையின் அங்கீகாரத்துடன் மிகவிரைவில் இடமாற்றம் நடைமுறைக்கு வரும்.

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் மேற்கொண்ட தகவலைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இடமாற்றம் தொடர்பாக எழுந்த முறைப்பாடுகள் தொடர்பாக ஆராயந்து இடமாற்றம் குறித்து மீளாய்வு செய்யுமாறு யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள வலயப் பணிப்பாளர் களைக் கேட்டிருந்தோம். வலயங்களின் பணிப்பாளர்கள் அந்த இடமாற்றம் குறித்த விவரங்களை மீளாய்வு செய்து இறுதிப்பட்டியலைக் கையளித் துள்ளனர்.

அந்தப் பட்டியல் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இங்கை ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் மாகாண இடமாற்றச் சபையில் ஆராயப் படும். அடுத்த வாரமளவில் இந்தச் சபை கூடி இடமாற்றப் பட்டியலை பூர்த்தி செய்தபின் இடமாற்றம் நடைமுறைக்கு வரும் - என்றார் அவர். (ஒ-ஐ)

# ஆஸியின் புதிய நாடாளுமன்றம் செப்டம்பர் 28 இல் கூடுகின்றது

மெல்போர்ன், செப். 11

ஆஸ்திரேலியாவின் புதிய நாடாளுமன்றம் செப்டம்பர் 28 ஆம் திகதி கூடுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த மாதம் நடைபெற்றது. கடந்த 70 ஆண்டுகளில் முதன்முறையாக அங்கு சிறுபான்மை அரசு அமைந்துள்ளது. ஜூலியா கிலார்ட்டின் தலைமையிலான லேபர் கட்சி அங்கு வெற்றி பெற்றுள்ளது. ஆஸ்திரேலி யன் கிரீன்ஸ் எம்.பி. மற்றும் மூன்று சுயேச்சை எம்.பிக்களின் உதவியுடன் அக்கட்சி அங்கு ஆட்சி அமைத்துள்ளது.

மொத்தமுள்ள 150 இடங்களில் லேபர் கட்சி 72 இடங்களைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடர்ந்து மேலும் 4 எம்.பிக்களின் ஆதரவுடன் அந்தக் கட்சி ஆட்சி பீடத்தில் ஏறியுள்ளது.

புதிய நாடாளுமன்றம் செப்ரெம்பர் 28 ஆம் திகதி கூடுகிறது என 'த ஆஸ்திரேலியன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து பிரதமர் ஜூலியா கிலார்ட் வியாழக்கிழமை கூறியவை வருமாறு -

செப்ரெம்பர் 28 ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடும்.

அதற்கு முன்னதாக லேபர் கட்சியின் செயற்குழு கூடி, கடந்த மாதம் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் குறித்து கலந்தாலோ சனை நடத்தும். தேர்தலில் லேபர் கட்சி பல இடங்களில் தோல்வியுற்றதற்கான காரணங் கள் குறித்து ஆராயப் படும்.

கடந்த காலங்களை மறந்துவிட்டு, கட்சியை எதிர்காலத்தில் பலமிக்கதாக மாற்றுவதற்கு தேவையான வழிகளை கட்சி நிர்வாகிகள், தலைவர்கள் கடைப்பிடிக்க வேண்டும். இதற்காகக் கட்சித் தொண்டர்கள் கடுமையாக உழைக்கவேண்டும்.

லேபர் கட்சிதான் மக்களை எதிர்காலத்தில் வழிநடத்திச் செல்லும் கட்சியாக இருக்கும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# மூளை நினைப்பதை எழுதும் கருவி லண்டன் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



மூளை என்ன நினைக்கிறதோ அதை அப்படியே எழுத்தாகக் கொண்டு வரும் கருவியை லண்டன் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். லண்டனில் உள்ள பேச்சு ஆய்வு மைய விஞ்ஞானிகள் இந்தக் கருவியை உருவாக்கி உள்ளனர்.

பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பேசுவதை மற்றவர்கள் புரிந்து கொள்ள முடியாது. அதே நேரத்தில் அவர்கள் எழுதிக் காட்டுவதற்குக் கையும் செயற்படாது. இப்படிப்பட்டவர்கள் பேச்சை எப்படிப் புரிந்து கொள்வது என்பது பற்றி விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.

பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவரின் மூளையில் எலக்ட்ராட்ஸ் கொண்ட மைக்ரோ, சிப்பை பொருத்தி அதை கணினியில் இணைத்தனர். மூளை வெளியிடும் சிக்னலை அந்தக் கணினியில் எழுத்தாக மாற்ற நினைத்தனர்.

அது 70 இல் இருந்து 90 சத வீதம் துல்லியமாக எழுத்தாக மாற்றியது. ஆமாம், சூடாக இருக்கிறது, குளிராக இருக்கிறது, பசிக்கிறது, தாகம் எடுக்கிறது, ஹலோ, குட்டை, அதிகம், குறைவு போன்ற வார்த்தைகளைத் துல்லியமாக மாற்றியது. இதன் மூலம் மூளை நினைப்பதை அனைத்தையும் எழுத்தாக மாற்றி விட முடியும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதற்காக நவீன கருவியை உருவாக்கும் முயற்சியில் அவர்கள் இறங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்.

சாந்தபுரம், வடமராட்சி கிழக்கில் மக்களை

# மீள்குடியேற்ற அனுமதித்தமைக்கு கூட்டமைப்பு ஜனாதிபதிக்கும் அரசுக்கும் நன்றி தெரிவிப்பு

கொழும்பு,செப்.11

கிளிநொச்சி, சாந்தபுரம் மற்றும் வடமராட்சி கிழக்கில் மக்களை மீள்குடியேற்ற அனுமதிக்கப்பட்டமைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்றி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமசந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

மிக நீண்ட காலமாக கிளிநொச்சியில் இடைத்தங்கல் முகாமிலும், சாந்தபுரம் பாடசாலையிலும் இருந்த சாந்தபுரம் மக்களை மீளக்குடியேற அனுமதித்தமைக்கும் கொடிகாமம் இராமாவில் இடைத்தங்கல் முகாமில் இருந்த வடமராட்சி கிழக்கு மக்கள் மீள குடியேற அனுமதிக்கப்பட்டமைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கும், அரசுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

கிளிநொச்சி திருமுறுகண்டி, பொன்நகர் மற்றும் விசுவமடுவில் குமாரசாமிபுரம், மயில்வானப்புரம், கொழுந்துப்புலவு மற்றும் மன்னாரின் சன்னார் முள்ளிக்குளம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களும் இன்னும் மீளக்குடியேற அனுமதிக்கப்படாமல் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கின்றனர். எனவே அவர்களை மழைக்காலம் வருவதற்கு முன்னர் இந்த இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு மீளக்குடியேற அனுமதிக்கப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்கின்றது.

- இப்படி அதில் உள்ளது. (சி)

# கொழும்பிலுள்ள 20 உணவகங்களில் அசுத்த நீர் பாவித்தமை கண்டுபிடிப்பு

0கொழும்பு, செப். 11

கொழும்பு நகர எல்லைக்குள் உள்ள 20 உணவகங்கள் அசுத்த நீரை பயன்படுத்தியுள்ளன என நகரசபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்துள்ளார். பிரதான நீர்பாசன குழாயில் நீரைப் பெறாது, குழாய் கிணறுகளில் நீரைப் பெற்று உணவு தயாரிக்கும் உணவகங்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகளின்போதே இவ்விடயம் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது பெறப்பட்ட 36 நீர்மாதிரிகளில் 20 மாதிரிகள் 'ஈகோலய்' எனப்படும் பக்றீரியா அடங்கியிருப்பதாக தெரியவந்துள்ளது.

அதேவேளை, கொழும்பு நகர எல்லைக்குள் பாவனைக்குதவாத உணவுப் பொருள்களை விநியோகிக்கும் இடங்கள் தொடர்பாக தகவல் வழங்குமாறு கொழும்பு மாநகர சபை பொதுமக்களிடம் கோரியுள்ளது.

இதனடிப்படையில், 011 2676161 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் என பரதான சுகாதார வைத்திய அதிகாரி பரதீப் காரியவசம் குறிப்பிட்டுள்ளார். (சி)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள், அந்த மாற்றங்கள் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் போன்ற சகல விடயங்கள் குறித்தும் இந்தியாவிடம் கருத்துக் கோரியுள்ளது அமெரிக்கா.

மூன்று நாட்களுக்கு முன்னர் அமெரிக்கா இந்தக் கோரிக்கையை இந்தியாவிடம் முன்வைத்ததாகவும் அமெரிக்காவின் வேண்டுகோளுக்கேற்ப இந்திய தரப்பினர் இந்த அறிக்கை தயாரிக்கும் பணியை ஆரம்பத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# அழும்போது கண்ணில் இருந்து இரத்தம் வரும் அபூர்வச் சிறுமி

லண்டன்,செப். 11

கடுமையான துக்கத்தை வெளிப்படுத்துவதற்காக ரத்தக் கண்ணீர் வடித்தேன் என சிலர் கூறுவதுண்டு. ஆனால், பிரிட்டனில் வசிக்கும் ஓர் இந்தியச் சிறுமி உண்மையிலேயே இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் ட்விங்கிள் திவிவேதி. 13 வயதான இவர் பிரிட்டனில் வசித்து வருகிறார். இந்



தச் சிறுமி அழ ஆரம்பித்தால், கண்ணில் கண்ணீர் வருவதற்கு பதில் இரத்தம் வடிகிறது. அது மட்டு மல்லாமல் கை, கால், தலை என உடலின் பல்வேறு பாகங்களிலிருந்து இரத்தம் வடிகிறது. இந்தப் பிரச்சினையால் பாடசாலைப் படிப்பையும் தொடர முடியாமல் உள்ளார்.

இதுவரை இப்படி ஒரு சம்பவத்தைப் பார்த்ததே இல்லை என வைத்தியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். எனினும், இரத்தம் உறையாததே இதற்குக் காரணமாக இருக்கலாம் என வைத்தியர்கள் கூறுகின்றனர்.

11ஆவது வயதில் முதன் முதலாக அழும் போது இப்படி இரத்தம் வந்தது. இரத்தம் வருவதால் எனக்கு பெரிய பாதிப்பு எதுவும் இல்லை. சிறிது நேரத்துக்கு தலைவலியும் உடல் சோர்வும் இருக்கும். அவ்வளவுதான். ஆனால், துணி முழுவதும் இரத்தக் கறை படிந்து அசுத்தமாகி விடுகிறது, மற்றவர்கள் என்னை வெறுக்கிறார்கள். எனவே, இப்போது அழுவதை நிறுத்திக் கொண்டேன் என ட்விங்கிள் தெரிவித்துள்ளார்.

# கனேடிய பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை தளர்வு

கொழும்பு, செப்.11

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு பயணிப்பதற்கு தமது பிரஜைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ பயண எச்சரிக்கையை கனேடிய அரசு நீக்கியுள்ளது.

எனினும் உயர் எச்சரிக்கை நடவடிக்கையைக் கட்டாயம் பின்பற்றுமாறு பிரஜைகளை கனேடிய அரசு தெரிவித்தது.

இலங்கைக்கு அநாவசியமாகப் பயணம் செய்யும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு அரசு விதித்திருந்த பயண எச்சரிச்சையை கடந்த வருடம் நவம்பர் மாதம் நீக்கியது. எனினும் கனேடிய அரசு அந்நாட்டுப் பிரஜைகளுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையிலேயே அந்த உத்தியோகபூர்வ பயண எச்சரிக்கையை கனேடிய அரசு தற்போது நீக்கியது என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (சி)

## ஐ.தே.கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகள் மேலும் பலவீனப்படுவது நாட்டின் ஜனநாயகத் துக்கு கேடு விளைவிக்கும்'' என்று தயாசிறி ஜயசேகர எம்.பி.தெரிவித்துள்ளார்.

''ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவை உடனடியாகக் கூட்டும்படி ஐ.தே. கட்சியைச் சேர்ந்த 25 எம்.பிக்கள் கைச்சாத்திட்டு மகஜரொன்றைக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தனர்.

ஐ.தே.கட்சி எம்.பிக்கள் தொடர்ந்து அரசுடன் இணைந்துவருவது, ஐ.தே.கட்சி மறுசீரமைப்பு ஆகிய முக்கிய விடயங்கள் உட்பட பல விடயங்கள் குறித்து ஆராயவே உயர் மட்டக் கூட்டத்தைக் கூடும்படி கோரிக்கை விடுத்தோம். ஆனால், அது நிராகரிக்கப்பட்டுவிட்டது'' - எனவும் அவர் சொன்னார்.

நாடாளுமன்றத்தில் ஐ.தே. கட்சி 45 ஆசனங்களைக் கொண்டுள்ளது. இவற்றில் ஆறுபேர் அரசுடன் இணைந்து கொண்டதையடுத்து எம்.பிக்களின் எண்ணிக்கை 39 ஆக குறைந்தது. இந்த நிலையிலேயே 25 எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் சுயேச்சையாக இயங்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இதையடுத்து ஐ.தே. கட்சியிலிருந்து பிரிந்து சென்ற 25 எம்.பிக்களைக் கொண்ட சுயேச்சைக் குழுவே நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும். இதனால் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் பறிபோகும் சூழ்நிலை ஏற்படுமென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறும். அப்போது கட்சியின் மறுசீரமைப்புக் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

இந்த நிலையில் ஐ.தே.கட்சி 14 எம்.பிக்களுடன் மூன்றாவது பெரிய எதிர்க்கட்சியாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13 எம்.பிக்களுடன் நான்காவது இடத்திலுமிருக்கும். ஜனநாயகத் தேசிய முன்னணி 7 எம்.பிக்களைக் கொண்டுள்ளது. (அ-சி)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று கனடாவுக்குப் படையெடுக்கும் கப்பல்களையும், படகுகளையும் எப்படி தடுத்து நிறுத்தலாம் என்பது குறித்துப் பேச்சு நடத்துவார். (ஒ-சி)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் காலை சபுகஸ்கந்தவில் உள்ள இலங்கை பாதுகாப்புப் படைகளின் கட்டளை மற்றும் அதிகாரிகளுக்கான கல்லூரிக்கு ஜெனரல் வி.கே.சிங் சென்றிருந்தார்.

அங்கு பாதுகாப்புக் கற்கைநெறிகளை மேற்கொள்ளும் இலங்கை மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த இளம்படை அதிகாரிகள் மத்தியில் அவர் உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், ஒரு கிலோ மாவின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதன் மூலம் இவ்விலைக்கழிவு 150 ரூபாவால் குறைந்து விட்டது. பாணின் புதிய விலை 41முதல் 45 ரூபாவாக இருக்கும். இரண்டு பிரதான நிறுவனங்கள் மாவுக்கு வழங்கிய மானியத்தை நீக்கியதனாலேயே பாணின் விலையை அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது'' - என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## ஐ.தே.கவுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் மட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனிடையே, கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்படுபவர்கள் தொடர்பில் உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக புதிய ஒழுக்காற்று கொள்கையொன்றை பின்பற்றப் போவதாகவும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (சி)

## அலரி மாளிகையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வைப்பிலிட்ட தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புக் கணக்குப் புத்தகமும் வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் சகல தரத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறை அதிகாரிகள் 500 பேர் கலந்துகொள்கின்றனர். நாடு முழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் கடமையாற்றும் சிறைச்சாலை அதிகாரிகளிலிருந்து இந்த அதிகாரிகள் தெரிவு செய்யப்படுவர் என்று சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிக்கின்றார். (ஒ-சி)

ESoft Computer Studies
114, 267, Navalar Road, Jaffna.
T.P: 0212224142, 0217501120
DIPLOMA COURSES
Dip. in Information Technology (DiTEC)
Dip. in Web Engineering (DiWE)
Dip. in Bussiness Management (DiBM)
Dip. in Software Engineering (DiSE)
NEW BATCHES START ON
13 - 09 - 2010 8.30 A.M
13 th Batch - full
14 th Batch - full
15 th batch - ______
16 th batch - ______
Jaffna - 021222 0345 Chavakachcheri - 021227 0333
Nelliyady - 021226 4940 Killinochchi - 021228 5444

வீடு வாடகைக்கு
அரியாலை சின்னக்கிணற்றடி ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : V.T. இராஜேந்திரா
T.P. : 0772286923
வெள்ளி, சனி, ஞாயிறு நாள்களில் மட்டும் பார்வையிடலாம்

NEW EDUCATION WORLD
ஆனைப்பந்தி
சடமும் கதிர்ப்பும்
செவ்வாய் வியாழன் 5 pm
மின்புலம் - சனி,ஞாயிறு 6 am 10am
திங்கள், புதன் 6 am
கருணாநிதி (B.Sc)
ஆரம்பம் 13.09.2010

மிக விரைவில்
யாழ்.மக்களுக்கோர் நற்செய்தி
கிழக்குப் பதிப்பகப் புத்தகங்கள் 1200 வகைகளுக்கு மேற்பட்ட கிழக்குப் பதிப்பகப் புத்தகங்களை இன்னும் ஓரிரு தினங்களில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.
அன்னை புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
0212229881

அங்கீகரிக்கப்பட்ட குறைந்த கட்டணத்தில் தரமான, முழுமையான கணனிக் கல்விக்கு
DMI COMPUTER EDUCATION
புதிய பிரிவுகள் ஆரம்பம்
11/9/2010, 13/9/2010, 18/9/2010
TIME 10.00 a.m.
அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel. 021-222 4403
M. M. V. வீதி, நெல்லியடி. Tel.: 021-320 7700
DMI COMPUTER EDUCATION

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org